விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
-mail: valampurii@yahoo.com

ங்கு 15, வள்ளுவர் ஆண்டு 2045 கார்த்திகை 15 திங்கட்கிழமை (01.12.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 347



ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ


# காற்றுடன் கூடிய மழை தொடரும் சாத்தியம் !



## வானிலை அவதான நிலையம் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் பெரும்பாலான கடலோரப் பகுதிகளில் இடி, காற்றுடன் மழை பெய்யக் கூடிய சாத்தியம் நிலவுவதாக வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக புத்தளம், திருகோணமலை, காங்கேசன்துறை வரையான கடலோரங்களில் இடி, காற்றுடன் கூடிய மழை பெய்யலாம் எனவும் வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

பெரும்பாலான கடலோரங்களில் மாலை இடியுடன் கூடிய மழைக்கான சாத்தியம் நிலவும். வடமேற்கு கரையோரமாக மழைக்கான சாத்தியம் 23ஆம் பக்கம் பார்க்க....

## பின்வாங்கினார் முன்னாள் நீதியரசர்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் மூன்றாவது தடவையும் போட்டியிடவுள்ள மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப் போவதில்லை என்று முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என சில்வா தெரிவித்துள்ளார். ஜனாதிபதித் தேர்தலில் 24ஆம் பக்கம் பார்க்க....

## விலை போவோர் இனி இல்லை

(கொழும்பு)

பவுண்களாலோ அல்லது டொலர்களாலோ விலை கொடுத்து வாங்கக்கூடியவர்கள் இனியும் என்னுடைய அமைச்சரவையில் இல்லை என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன, அரசியலுக்கு பிரவேசித்து 25 24ஆம் பக்கம் பார்க்க....

## ..லிகளுடனான போரை நிறுத்தவே ..கோத்தபாயவை கொண்டு வந்தேன்

### ஜனாதிபதி மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

..விடுதலைப் புலிகளுடனான ..ோரை முடிவுக்கு கொண்டு வரு..ற்காக கோத்தபாய ராஜபக்..வை அரசியலுக்குள் கொண்டு ..ந்ததாக ஜனாதிபதி மகிந்த ராஜ..க்ஷ தெரிவித்துள்ளார்.

அதேவேளை, தனது சகோதரர்..ளான பசிலையும், சாமலையும் மக..ளே அரசியலுக்கு கொண்டு வந்த..தாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.




அரசாங்கத்தில் ராஜபக்ஷ குடும்பத்தின் ஆதிக்கம் குறித்து கடுமையான விமர்சனங்கள் எழுந்துள்ள சூழலில், நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் தனதுரையில் தெரிவிக்கையில்,

1977ஆம் ஆண்டு பசில் ராஜபக்ஷ அரசியலுக்கு வந்திருந்தார். அவரை முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவும், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் தான் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்குழுவுக்கு நியமித்திருந்தனர்.

அதுபோன்று, நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு சாமல் ராஜபக்ஷவுக்கு முதன்முதலில் வாய்ப்பை வழங்கியதும் சிறிமாவோ பண்டாரநாயக்க தான். அவர்களை நான் அரசியலுக்கு கொண்டு வரவில்லை. இவர 24ஆம் பக்கம் பார்க்க....

## பிரபாவின் 200 கோடி விரைவில் ஏலத்தில்



(கொழும்பு

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்குச் சொந்தமான சுமார் 200 கோடி ரூபாய் பெறுமதியான சொத்துக்களை ஏலத்தில விற்பதற்கு அரசு தீர்மானித்துள்ளதாகத் தெரிய வருகின்றது.

வெள்ளவத்தையிலுள்ள அடுக்கு மாடிக் கட்டடமொன்று, ஆடைத் தொழிற்சாலையொன்று, கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு முன்னாலுள்ள விசாலமான காணியொன்று, கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலுமுள்ள இரண்டு அச்சகங்கள் மற்றும் பல ரோலர் படகு, சாதாரண படகுகள் உட்பட சுமார் 200 கோடி 24ஆம் பக்கம் பார்க்க....

## ..டையையும் தாண்டி ..க்கள் ..வெள்ளம் !



(பொலநறுவை)

பொலநறுவையில் நேற்று ..டைபெற்ற மைத்திரிபால சிறி..சேனவின் முதலாவது பொதுக்கூட்..த்தை தடுப்பதற்கு அரசாங்கம் ..ற்கொண்ட அனைத்து முயற்சி..நம் தோல்வியில் முடிவடைந்..ள்ளது. 24ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதியுடன் மு.கா.சந்திப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ்வுக்கும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்களுக்கும் இடையில் முக்கிய சந்திப்பு ஒன்று நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது. 23ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதிக்கு மோடி வாழ்த்து கலைஞர் கருணாநிதி கண்டனம்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எப்படிப்பட்ட குற்றவாளி என்பதை ஐ.நா. சபை வரை விவாதம் நடத்திக் கொண்டிருக்கிறது. அவரே திரும்ப வெற்றி பெற வேண்டுமென்று நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்திருப்பது கடுமையாகக் கண்டிக்கப்பட வேண்டிய ஒன்று என திமுக தலைவர் கருணாநிதி தெரிவித்துள்ளார். திமுக தலைவர் கலைஞர் நேற்று ஞாயிற்றுக்கிழமை கேள்வி பதில் வடிவிலான அறிக்கையினை வெளியிட்டுள்ளார். அதில்,

**கேள்வி :-** இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ வெற்றிபெற வேண்டுமென்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்துத் தெரிவித்திருக்கிறாரே?

**கலைஞர் :-** கடுமையாகக் கண்டனம் தெரிவிக்கப்பட வேண்டிய ஒன்று. ஏறகெனவே தமிழகத்தைச் சேர்ந்த வேறு சில எதிர்க 24ஆம் பக்கம் பார்க்க....

## கட்சி தாவினார் அமைச்சர் நவீன்



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ..திரணி பொது வேட்பாளருக்கு ஆதரவு தெரிவித்து பொதுமுகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சர் நவீன் திசநாயக்க தனது ..தவியில் இருந்து இராஜினாமாச் செய்துள்..ளார். ஜனாதிபதி மகிந்த 24ஆம் பக்கம் பார்க்க....

## 'பழிவாங்க மாட்டேன்'

### முதலாவது பிரசாரக் கூட்டத்தில் மைத்திரிபால தெரிவிப்பு



(பொலநறுவை)

ஜனாதிபதி தேர்தலில் தான் வெற்றிபெற்ற பின்பு பழிவாங்கும் நடவடிக்கைகளில் தான் ஈடுபட போவதில்லை என்று எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார். பொலநறுவைப் பகுதி 24ஆம் பக்கம் பார்க்க....


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்


# தேசியப் பட்டியல் எம்.பி பதவியை ஏற்க மறுத்தார் அமீர் அலி!

அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின கிழக்கு மாகாணசபை உறுப்பினர் அமீர் அலி தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ஏற்க மறுத்துள்ளதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக அமீர் அலியை நியமிப்பதற்கு வசதியாக, ஆளுங்கட்சியின் உறுப்பினர் ஏ.எச்.எம்.அஸ்வர் கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்திருந்தார்.

ஆனால், அமீர் அலி அந்தப் பதவியை நிராகரித்துள்ளதாக அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் வை.எல்.எஸ்.ஹமீட் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில், இந்த நியமனத்தை ஏற்றுக் கொள்ளும் நிலையில் அமீர் அலி இல்லை. அமீர் அலிக்கு நாடாளுமன்றத்தில் இடமளிக்குமாறு



கடந்த இரண்டு ஆண்டுகளாக அரசாங்கத்தைக் கேட்டு வந்தோம். ஆனால் வாய்ப்பளிக்கப்படவில்லை.

ஜனாதிபதிக்கு பொது பல சேனா ஆதரவளிக்க முடிவு செய்துள்ள நிலையில், இந்த வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அரசாங்கத்துக்கு சிறுபான்மையினர் குறித்து தேர்தல் நேரத்தில தான் நினைவுக்கு வருகிறது.

ஜனாதிபதித் தேர்தலில் எவருக்கு ஆதரவளிப்பது என்பது தொடர்பாக அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் முடிவெடுப்பதற்கான நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது.

நாம் ஒன்றும் அவசரமாக முடிவெடுக்க வேண்டியதில்லை. பொதுவேட்பாளரின் தேர்தல் அறிக்கை வரும் வரை காத்திருப்போம். அதற்குப் பின்னர் ஒரு முடிவை எடுப்போம்.

அமீர் அலி தனது தொகுதி மக்களுடன் கலந்துரையாடவுள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ஏற்பது குறித்து அவர் மக்களின் கருத்தைக் கேட்கவுள்ளார்.

மக்களின் விருப்பப்படி நாடாளுமன்ற ஆசனத்தை அவர் ஏற்றுக் கொண்டாலும் கூட, அது ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவளிக்க எடுத்த முடிவாக அர்த்தமாகாது என்று மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

## நீதிமன்றப் பதிவாளர் கஞ்சாவுடன் கைது

(கொழும்பு)

எட்டு கிலோ கிராம் நிறையுடைய கஞ்சாவை கடத்திச்சென்றார் என்ற குற்றச்சாட்டில் பண்டாரவளை நீதவான் நீதிமன்ற பதிவாளரை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளதாக பொலிஸ் தலைமை அலுவலகம் அறிவித்துள்ளது.

பண்டாரவளை, வெலிமடை வீதியில் கஹதேவெல விஹாரைக்கு அருகில் வைத்து சந்தேகத்துக்கிடமான முச்சக்கரவண்டியை சோதனைக்கு உட்படுத்தியபோதே அவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளதர்க பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை 4.45க்கு இடம்பெற்றுள்ளது.

அத்துடன் முச்சக்கரவண்டி சாரதி மற்றும பதிவாளருடன் சென்ற மற்றுமொருவரையும கைது செய்துள்ளதாக தெரிவித்த பொலிஸ் தலைமை அலுவலகம் சம்பவம் தொடர்பில் பண்டாரவளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்துள்ளது. (எ-11)

# பொது வேட்பாளரை கூட்டமைப்பு ஆதரிக்கலாம்

## ஆட்சேபம் இல்லை என்கிறது ஹெல உறுமய

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பொது வேட்பாளருக்கு ஆதரவளிப்பதில் ஆட்சேபனை கிடையாது என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பேச்சாளர் நிசாந்த ஸ்ரீ வர்ணசிங்க தெரிவித்துள்ளார்.

அரசியல் யோசனைத் திட்டத்தை ஏற்றுக் கொண்டால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பில் அங்கம் வகிப்பதில் பிரச்சினை கிடையாது.

நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்த விரும்பும் கட்சிகள் குழுக்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும்.

தேசிய தேவைகளின் அடிப்படையில் தீர்மானம் எடுப்பதற்கு பின் நிற்கப் போவதில்லை.

போர் புரிந்த எவரையும் போர் குற்றவியல் நீதிமன்றில் ஆஜர் செய்ய இடமளிக்க முடியாது.

எதிர்க்கட்சிகளின் பொதுக் கூட்டமைப்பில காத்திரமான மாற்றத்தை எதிர்பார்க்கின்றோம் என அவர் தெரிவித்துள்ளார்.

சிங்கள பத்திரிகையொன்றுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்கு குறித்து எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது நிசாந்த இதனைத் தெரிவித்துள்ளார். (எ-11)

# உணவுப் பொருட்களை வழங்க வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் ஏற்பட்ட சீரற்ற காலநிலையடுத்து ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் பொருட்டு உலர் உணவுப் பொருட்களை வழங்குமாறு யாழ்.வர்த்தகர்களுக்கு யாழ்ப்பாண வர்த்தகர் சங்கத்தின் தலைவர் இ.ஜெயசேகரம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வர்த்தகர்கள் தங்களால் முடிந்த உணவுப் பொருட்களை யாழ்.வர்த்தகர் சங்கத்தில் ஒப்படைக்க முடியும் எனவும் அல்லது சங்கத்துடன் தொடர்பு கொண்டால் தங்கள் இடங்களுக்கே வந்து உணவுப் பொருட்களை பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகளையும் செய்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

சீரற்ற காலநிலையினால் குடாநாட்டில் பல பகுதிகள் நீரினால் மூழ்கியுள்ளதனால் பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் பலர் இடம்பெயர்ந்து பொது இடங்களில் தங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கூட்டமைப்பு உதவி

யாழ்.மாவட்டத்தில் தற்போது அடைமழை பெய்து வருகின்ற நிலையில் தாழ்நிலப் பகுதிகளிலும், இடம்பெயர்ந்தோர் முகாம்களிலும் வசித்து வரும் மக்கள் பாரிய சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

பலர் வீடுகளை விட்டு வெளியேறி கோவில்களிலும், பொது மண்டபங்களிலும் தங்கியுள்ளனர்.

இந்நிலையில் வடமராட்சி பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நிவாரண உதவிகளை வழங்கியுள்ளனர்.

வடமராட்சியின் பல பகுதிகளுக்கும் நேற்று விஜயம் செய்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான மாவை. சேனாதிராசா தலைமையிலான கூட்டமைப்பின் மாகாணசபை பிரதேசசபை உறுப்பினர்கள் இப்பணியில் ஈடுபட்டனர்.

பருத்தித்துறை, தும்பளை கிழக்கு பகுதிக்கும், பொலிகண்டி இடம்பெயர்ந்தோர் முகாமிற்கும், கரவெட்டி இராஜ கிராமப்பகுதிக்கும் விஜயம் மேற்கொண்ட கூட்டமைப்பினர் மக்களைச் சந்தித்து குறைகளைக் கேட்டறிந்து கொண்டதுடன், உலருணவு நிவாரணப் பொதிகளையும் வழங்கினர்.

பாதிக்கப்பட்ட மக்களின் குடிநீர்ப்பிரச்சினை, மலசலகூடப் பிரச்சினை முதலியவற்றை உடனடியாக நிறைவேற்றுமாறு உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள் மற்றும் துறை சார் அதிகாரிகளுக்கும் பணிப்புரை வழங்கப்பட்டது.

பின்னர் அண்மையில் கடலில் மீன் பிடிக்கச்சென்று காணாமற்போய், பின்னர் கரை திரும்பிய பருத்தித்துறை, சக்கோட்டையைச் சேர்ந்த 03 மீனவர்களின் வீடுகளுக்கும் சென்று ஆறுதல் தெரிவித்ததுடன், அவர்களின் கடலில் மூழ்கிய பெறுமதிமிக்க படகு மற்றும் வலைகளை மீட்டெடுக்க உதவி புரிவதாகவும் உறுதியளித்தனர்.

இவ்விஜயத்தில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான மாவை.சேனாதிராசா, வடமாகாணசபையின் அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், வடமாகாணசபை உறுப்பினர்களான வே.சிவயோகன், பா.கஜதீபன், ச.சுகிர்தன், வல்வெட்டித்துறை நகரசபை உப தலைவர் க.சதீஸ், சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் மற்றும் வடமராட்சிப் பகுதி பிரதேசசபைகள், நகரசபைகளின் தலைவர்கள், உறுப்பினர்கள் எனப்பலரும் கலந்து கொண்டு உதவிகளை வழங்கி வைத்தனர். (எ-11)

## சிவ வழிபாட்டு ஆராதனை



(யாழ்ப்பாணம்)

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இலங்கையில் இன, மத நல்லிணக்கம் ஏற்படுவதற்கான சிவ வழிபாட்டு ஆராதனை நிகழ்வுகள் சித்தன்கேணி ஸ்ரீ சிவசிதம்பரேஸ்வரர் ஆலயத்தில் எதிர்வரும் புதன்கிழமை இடம்பெறவுள்ளது.

சிவஸ்ரீ சபா.வாசுதேவக்குருக்கள் தலைமையில் இடம்பெறும் இந்த ஆராதனை நிகழ்வில் தமிழ் மக்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வு கிடைப்பதற்காகவும், நாட்டிலுள்ள மக்களின் வாழ்வு உயர்வடையவும் சிவனிடம் வேண்டப்படவுள்ளது.

காலை 08.00 மணிமுதல் மாலை 04.00 மணி வரையிலான வேளையில், மக்கள் ஒவ்வொருவரும் தத்தமது எண்ணங்கள், அபிலாசைகளையும் நிறைவேற்றுவதற்கு எல்லாம் வல்ல சிவலிங்க பெருமானுக்கு தமது கைகளால் திருமஞ்சன அபிஷேகத்தை செய்தும், நடைபெறுகின்ற உபசாரங்களில் இணைந்தும் இறைவனை மகிழ்வித்து திருவருளுக்கு பாத்திரமாகுமாறும் சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது. (எ-11)

# பூட்டிய வீட்டில் திருட்டு இருவர் மடக்கிப் பிடிப்பு

யாழ்.கல்வியங்காட்டு பகுதியிலுள்ள வீடொன்றுக்குள் நுழைந்து கொள்ளையடிக்க முற்பட்ட இரண்டு சந்தேகநபர்களை நேற்று முன்தினம் மாலை கைது செய்ததாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் பொலிஸார் மேலும் கூறுகையில்,

வீட்டிலிருந்தவர்கள் வீட்டை பூட்டிவிட்டு கொழும்புக்கு பணியொன்றின் நிமிர்த்தம் சென்றிருந்தனர். இந்நிலையில் சனிக்கிழமை மாலை வீட்டின் கதவை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் வீட்டிலிருந்த பொருட்களை கொள்ளையடிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

பூட்டியிருந்த வீட்டுக்குள் இருந்து சத்தம் கேட்பதை உணர்ந்த அயலவர்கள் மேலும் சிலரது உதவியுடன் வீட்டுக்குள் சென்று பார்த்த போது, வீட்டிலிருந்த பொருட்களை மூவர் கொள்ளையடிக்கும் நடவடிக்கையில் ஈடுபடுவதை அவதானித்துள்ளனர்.

இதனையடுத்து, கொள்ளையர்களில் இருவரை அயலவர்கள் மடக்கி பிடித்த போதும், ஒருவர் தப்பித்து ஓடிவிட்டார். பிடிபட்ட சந்தேக நபர்களை அப்பகுதி மக்கள் கோப்பாய் பொலிஸ நிலையத்தில் ஒப்படைத்தனர்.

சந்தேகநபர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளில், அவர்கள் ஏற்கெனவே பல வீடுகளில் திருட்டு நடவடிக்கையில் ஈடுபட்டமை தெரிய வந்தது. சந்தேகநபர்களிடம் மேலதிக விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாக பொலிஸார் மேலும் கூறினார்கள். (எ-11)

## தனியார் வகுப்புக்கு தடை விதிப்பு



ஜி.சி.ஈ. சாதாரண தர மாணவர்களுக்கான தனியார் கல்வி நிலைய வகுப்புக்கள், பரீட்சைக் கருத்தரங்குகளுக்கு வரும் டிசம்பர் மூன்றாம் திகதி புதன்கிழமை நள்ளிரவுடன் தடை விதிக்கப்படுவதாக பரீட்சை ஆணையாளர் ஜயந்த புஸ்பகுமார அறிவித்தார்.

ஜி.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சை அண்மித்திருப்பதனாலேயே இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது. (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திரிகாவின் கும்பல் பிரிவினைவாத கும்பல்-விமல் வீரவன்ச

சநதிரகா குமபல பரிவினைவாதிகளின குமபல எனவும இநத பரிவினைவாத குமபல கடநத நாடகளில வெளியிடட கருததுககள ஐககியபபடுததபபடட நாடடை மணடும பரிதது வேறுபடுததும நோககததை மககளுககு தெளிவுபடுததியுளளது என அமைசசர விமல வீரவனச தெரிவிததுளளார. மாலபே பிரதேசததில இடமபெறற வைபவம ஒனறில பேசும போதே அவர இதனை கூறியுளளார. அவர மேலும தெரிவிககையில, 2005ஆம ஆணடு ஜனாதிபதி மகிநத ராஜபகஷ ஜனாதிபதித தேரதலில போடடியிடட போது அவரது காலை பிடிதது இழுத்த சந்திரிகாதான இன்றும் ஜனாதிபதியின் காலை பிடித்து இழுக்கிறார். இப்படியான சூழ நிலையில், அன்றைய தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ 90 ஆயிரம் மேலதிக வாககுகளை பெற்றார. அந்த 90 ஆயிரம் வாக்குகள் கிடைக்காமல் போயிருந்தால், இரண்டாக பிளவுபட்ட நாடே எமக்கு எஞ்சியிருக்குமென அவ்மேலும் தெரிவித்தார். (இ-5)




உங்கள் வீடுகள், கடைகள், தொழிற்சாலைகளில் உள்ள திருட்டை ஒழிக்க இலாபத்தை பெருக்க அழையுங்கள் Fifth Channel Media Network (iTeam Solutions) ஒரு வருட உத்தரவாதத்துடன் செய்து தரப்படும்.

எமது இதர சேவைகள்:
- கணணி விற்பனை மற்றும் சேவை
- மென்பொருள் வடிவமைப்பு
- வலைப்பக்க வடிவமைப்பு
- வலைப்பின்னல் கட்டமைப்பு(Networking)

அனைத்து IT தீர்வுகளுக்கும்
071 127 3351 / 077 44 77 555(Colombo)
071 127 3351 / 075 227 4335 (Jaffna)

**வாழ்க்கையில் வெறுப்பா?**

பிரச்சினை எதுவானாலும், எம்முடன் தொலைபேசியில் அல்லது நேரில் பேசுங்கள். இரகசியங்களைப் பேணுவோம்.

காலை 9.00 - பி.ப 1.00

கைகொடுக்கும் நண்பர்கள்
104, 4 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
021 222 8117
(8404)

**அன்பொளி கல்வியகம்**

யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை மைதான வீதி, யாழ்ப்பாணம்.

**2015 இல் தரம் 2,3,4**
**மாணவர்களுக்கான வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.**

தரம் 4 - 30.11.2014 இல் ஆரம்பம்
தரம் 2 ,3 - 07.11.2014 இல் ஆரம்பம்
அனுமதிகளை உடன் பெற்றுக் கொள்ளவும்.

சின்ன விழி அசைத்துச் சிரித்துவரும் சித்திரங்களை
அள்ளி அணைத்து அரிய கல்வியினை மகிழ்வுடனே ஊட்டிடுவோம்.
இயக்குநர்
(C-9215)

## மு/கலைமகள் வித்தியாலயம், முள்ளியவளை.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2014 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 14 பேர் சித்தியடைந்ததன் மூலம் கரைதுறைப்பற்றுக் கோட்டத்தில் சாதனை படைத்து எமது பாடசாலைக்கு பெருமை சேர்த்த மாணவர்களையும் அவர்களுக்கு கற்பித்த ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றோம்.

பாடசாலைச் சமூகம்.
மு/கலைமகள் வித்தியாலயம், முள்ளியவளை.

(சி-9228)


## இராசி பலன்

01.12.2014
(கார்த்திகை 15, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை-6.05 மணிக்கு
தசமி முன்னிரவு 11.56 மணிவரை
உத்தரட்டாதி பின்னிரவு 2.29 மணிவரை
இராகுகாலம்-7.44-9.14 மணிவரை
சுபநேரம்-12.14-1.44 மணிவரை

வளவன்

**மேடம்:** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றிதரும், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**இடபம்:** உடல நலனில் கொஞ்சம் அக்கறை தேவை, வெற்றிச் செய்திகள் வீடு வந்து சேரலாம், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், பயணங்களால் பலனுண்டு.

**மிதுனம்:** நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், கரைந்த சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், தொழிலில் உயரதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள்.

**கடகம்:** வீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள முற்படுவீர்கள், கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை, விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள்.

**சிம்மம்:** மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், திடீர் பயணங்கள் உருவாகலாம், தொழிலில் அதிக பிரயாசை எடுக்க வேண்டிய நாள், சஞ்சலங்கள் அதிகரிக்கும்.

**கன்னி:** யோகமான நாள், இளைய சகோதர வழியில் இனிய சம்பவமொன்று நடைபெறும், பொருளாதார நிலை உயரும், தொலைதூரப் பயணங்கள் கைகூடும்.

**துலாம்:** எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி கிடைக்கும், குடும்பத்தினரின் ஒத்துழைப்பால் தொழில் முன்னேற்றம் காண்பீர்கள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்.

**விருச்சிகம்:** சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும், ஆன்றோர் சந்திப்பால் பெருமையடைவீர்கள்.

**தனுசு:** எதையும் ஒருமுறைக்கு பலமுறை யோசித்துச் செய்வது நல்லது, தொழில் போட்டிகள் அதிகரிக்கும், போசன சுகமுண்டு, புதிய திருப்பங்கள் ஏற்படலாம்.

**மகரம்:** சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைப்பதற்கான வாய்ப்புண்டு, நட்பு வட்டம் விரிவடையும்.

**கும்பம்:** கடன் பிரச்சினையை சாமர்த்தியமாக பேசி சமாளிப்பீர்கள், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த குழப்பங்கள் தீரும், பெண் வழியில் ஒத்துழைப்புகள் கிடைக்கும்.

**மீனம்:** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பிள்ளைகளால் பெருமை காண்பீர்கள், வருமானம் திருப்திதரும், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் வர்த்தக உலகில்

# Top Twenty five 2013-2014

இலங்கையானது உயர் நடுத்தர வருமானம் ஈட்டும் பொருளாதார முறை என்ற அந்தஸ்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் வேளையில் தனியார் துறையினரின் சாதனைகள் பற்றி ,பிஸ்னஸ் ருடே சஞ்சிகை ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.

ஆசியாவில் துரிதமாக வளர்ச்சி பெற்றுக்கொண்டுவரும் பொருளாதார முறைகளில் இலங்கையும் ஒன்றாகும். அதன் உயர்ந்த வளர்ச்சிப் போக்கினை எவராலும் தடை செய்ய முடியாது.

2020இல் நடுத்தர வருமானம் பெறும் நாடு என்ற அந்தஸ்தில் இருந்து உயர்ந்த நடுத்தர வருமானம் பெறும் நாடாக இலங்கை மாற உள்ளது. அத்துடன் 2035இல் இலங்கை ஒரு முன்னேறிய நாடாக மாற்றமடைவும் உள்ளது. இன்று கையாளப்படும் அபிவிருத்தி உபாயங்கள் எதிர்காலத்தில் இத்தகைய நன்மைகளை வழங்க உள்ளது. இன்று பெரும்பாக பொருளாதார முறையின் உறுதிப்பாட்டை பேணுகின்ற முறையில் கொள்கைத் தீர்மானங்கள் மிகக் கவனமாக முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பல்வேறு நடவடிக்கைகள் காரணமாக பொருளாதார செயற்பாடுகள் பெரிதும் ஊக்குவிக்கப்பட்டுள்ளன.

இவ்வகையில் இலங்கையின் வளர்ச்சிக்கான அடித்தளம் இடப்பட்டு வருகின்றது என்றும், பிஸ்னஸ்ருடே கூறுகின்றது. நாட்டின் வளர்ச்சி தெளிவாகத் தெரிகின்றது. ஆயினும பல தவிர்க்கக் கூடியதும் தவிர்க்க முடியாததுமான சவால்களையும் நாடு எதிர்நோக்கியுள்ளது.

2013,2014-ம் நிதி ஆண்டில் தனியார் துறையானது தனது பலத்தையும் ஆற்றலையும் நன்கு வெளிப்படுத்தி வருகின்றன. ஆயினும் அவர்கள் இன்னும் சாதிக்க முடியும்

பெரும்பாக பொருளாதார முறையின் ஒவ்வொரு அடிப்படைக் கூறுகளும் நல்ல முறையில் வளர்ச்சி பெற்று வருகின்றன. இவ் ஆண்டில் பணவீக்கம் என்றுமில்லாத அளவுக்குக் குறைந்து காணப்படுகின்றது.

உற்பத்தி மட்டங்கள் அதிகரித்துப் பொருட்கள் சேவைகளின் விநியோகம் சிறப்பாக இருந்தமையால் இவ்வாறு . பணவீக்கம் குறைய நேரிட்டது.

இலங்கையின் விலைமட்டங்களும் பொருளாதார உறுதிப்பாடும் தொடர்ச்சியாக பேணப்பட்டு வந்துள்ளன.

இதன் காரணமாக எதிர்காலத்தில் வெளிநாட்டு மூலதன வருகைக்கான வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளன. செலாவணி மாற்றுவீதம மற்றும் விலைகளில் காணப்பட்ட உறுதிப்பாட்டின் காரணமாக இலங்கையில் தொழில்புரிவது இலகுவாக உள்ளது. நாட்டின் பொருளாதாரம் நன்றாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. நாட்டின் உட்கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டுள்ளது.

நம்பிக்கை மட்டங்களும் அதிகரித்துள்ளன. வெளிநாட்டு முதலீட்டாளர்களும் அதிக அளவில் செயற்படுகின்றனர்.

இந்நிலைமையானது பொருளாதார வளர்ச்சிக்குச் சிறந்த பங்களிப்பைச் செய்துள்ளது.

உலகப் பொருளாதாரம் சிறப்பாக செயற்படாவிட்டாலும் இலங்கை பல வெளிநாட்டுச் சவால்களை சமாளித்துக் கொள்ளமுடிந்தது. எவ்வாறாயினும் இன்று உலகப் பொருளாதாரம் காட்டும் முன்னேற்றங்கள் காரணமாக இலங்கைப் பொருளாதாரம் பல புதிய வாய்ப்புக்களைப் பெற்றுள்ளது. எனவே நிலைபேறான அபிவிருத்திக்கான ஒரு புதியயுகம் இலங்கையில் எதிர்பார்க்கப்படுகின்றது.

வறட்சி மற்றும் வெள்ளங்கள் காரணமாக தனியார் துறையுடன் நாட்டின் பொருளாதாரமும் பாதிக்கப்பட்டமை உண்மையே ஆயினும் ஆடைத் தயாரிப்பு, உல்லாசப் பயணத்தறை ஹோட்டல் சேவைகள் போன்றவற்றில் பல முன்னேற்றங்களைக் காண முடிகின்றது.

அரசாங்கம் பொதுபடுகடனை குறைக்க வேண்டியுள்ளது. அத்துடன் நிதித் திரட்டலையும் ஒழுங்கு செய்ய வேண்டியுள்ளது. செலவைக் குறைத்து இப்பிரச்சினைகள் சமாளிக்கப்பட்டன.

அரசாங்கத்தின் வருமானங்களை உயர்த்த வரித்தளங்கள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. வரிகளை வழங்காதோருக்குத் தண்டனைகள் வழங்கப்பட்டுள்ளன.

இதனால் பொருளாதார செயற்பாடுகள் அதிகரித்துள்ளன. வங்கிகளின் வட்டி வீதங்கள் குறைந்துள்ளன. பொருளாதாரம் நன்றாக செயற்பட இந்த வட்டி வீதங்கள் மேலும் குறையலாம் என்ற எதிர்பார்ப்பும் உள்ளது. கொழும்பு மற்றும் ஏனைய பிரதான நகரங்களும் நன்றாக ஒழுங்குபடுத்தப்பட்டு வருகின்றன. அவை சுத்தமாகவும், பசுமையாகவும் உருவாகி வருகின்றன.

சுற்றாடலுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. நகரங்கள் திட்டமிடப்படும் பணி நன்கு முன்னேறியுள்ளது. ஹோட்டல்களும் உணவு விடுதிகளும் அதிகரித்துக் காணப்படுகின்றன. ஒய்வுப்பொழுதினைக் கழிக்க பல வாயப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நாட்டில் சுதந்திரமும் சமாதானமும் உறுதிப்பாடும் காணப்படுகின்றது.

30 வருடங்களாகப் பின்தங்கிக் காணப்பட்ட தனியார் துறை வளர்ச்சி பெற பல வாய்ப்புக்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

தடைகளும் சவால்களும் இருகத்தான் செய்கின்றன. நாட்டின் சகல பகுதிகளும் சமாதானத்தின் நன்மைகளை கொழும்பு மட்டுமன்றி முழுநாடும் அடைந்து வருவதை யாவரும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

நாட்டின் வளர்ச்சிக்கு முன்னுரிமை வழங்குவது பற்றி நாட்டு மக்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்.

2009 ஆம் ஆண்டின் பின்னர் பழைய கம்பனிகள் பன்முகப்படுத்தப்பட்டன. புதிய தொழில் நிறுவனங்கள் தமக்கு பழக்கமற்ற தொழில் துறைகளில் ஈடுபட்டு வருகின்றன.

"பிஸ்னஸ் ருடே" Top 25 நன்கு வளர்ச்சி பெற்ற கம்பனிகளை இனம் காண்பதாக அமைந்துள்ளது. புதிய கம்பனிகள் இன்று பங்குச்சந்தைக்குள் வந்தாலும் அவை உறுதியானவை என்று கூறமுடியாது.

Access Engineering கம்பனி முதன் முறையாக இடம்பெற்றுள்ளது. HEMAS HOLDING And TOKYO CEMENT ஆகிய கம்பனிகள் இவ்வாண்டில் Top 20 இல் இடம் பெற்றுள்ளன. வங்கிகளும் மற்றும் நிதி நிறுவனங்களும் நன்றாகச் செயற்பட்டு வருகின்றன.

நிதி நிறுவனங்களும் வங்கிகளும் பெறும் இலாபங்கள் கம்பனிகளின் உறுதிப்பாட்டைப் பேணவல்லன.

தனியார் துறையானது நன்றாகச் செயற்பட வேண்டியது அவசியமாகும். ஏனெனில் வளர்ச்சிக்கான பொறிமுறை தனியார்துறையாகும். தனியார் கம்பனிகளின் நிதியாண்டாகக் கொள்ளப்படும் 2013 டிசம்பர் 31 ஆம் திகதி தொடக்கம் 2014 மார்ச் 31 ஆம் திகதி கால இடைவெளிக்குள் கம்பெனிகளின் நிதியியலில் கொண்டிருந்த சிறப்பான செயற்பாட்டுக்கமைய "பிஸ்னஸ் ருடே" Top Twenty தரப்படுத்தலை மேற்கொண்டிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

01)John Keells Holdings 22.850, 02) Commercial Bank of Ceylon 22.150, 03) Ceylon Tobacco Company 20.850, 04)Bukit Darah19.600, 05) Hatton National Bank 19.450, 06) Distilleries Company of Sri Lanka 17.700, 07)Dialog Axiata 17.200, 08)Sri Lanka Telecom 16.300, 09)Lanka IOC 15.050, 10)Aitken Spence14.900,11)Hayleys 13.800, 12)Sampath Bank 13.700, 13)Nestle Lanka13.500, 14 )People's Leasing & Finance 10.450, 15) Central Finance Company 9.750, 16)DFCC Bank8.350, 17)Lanka Orix Leasing Company 8.300, 18)National Development Bank 7.15019)Vallibel One 7.000, 20) Acc ess Engineering 6.650, 21) Chevron Lubricants Lanka 6.550, 22)Hemas Holdings 5.300, 23)Seylan Bank 3.200, 24)Tokyo Cement Company (Lanka) 3.100, 25)Ceylinco Insurance 2.950.

**BUSINESS TODAY TOP TWENTY FIVE 2013-2014**







## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 7,401.62 | 7,153.90 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 4,127.26 | 3,971.12 ⇩ |

**விலை அசைவுகளின் அடிப்படையில்** புரள்வு (ரூபா.மில்.) 7,893.785

***உயர்வடைந்த பங்குகள்(ரூ.):*** ஒபிஸ் ஈகுப்மன்ட்(2800.00), சலிமர் (1987.00), அனிலன ஹோட்டல்(7.80),குட் ஹோப்(1998.90),ஹேமாஸ் பவர்(18.00).

***சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):***லங்கா சிமெண்ட்(4.00),சிரஸ் லிசர்(w) (1.30), ஓரியன்ட் காமன்ஸ்(14.40),சிலோன் லெதர்(w) (2.40),எஸ்எம்பி. லீசிங்(x)(0.40).

**மேலதிக தகவல்கள்: www.cse.lk**

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

$ (வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 130.02 | 133.15 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 203.73 | 209.96 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 161.04 | 166.65 |
| சுவிஸ் பிராங் | 133.87 | 138.98 |
| கனேடிய டொலர் | 114.03 | 118.09 |
| அவுஸ்திரேலிய டொலர் | 109.85 | 114.25 |
| சிங்கப்பூர் டொலர் | 99.34 | 102.77 |
| ஜப்பான் யென் | 1.09 | 1.13 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.12 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 35.66 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூசணி, வெள்ளரிக்காய் புற்று நோயை குணப்படுத்தும்

புற்று நோயை குணப்படுத்த பலவித மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. தற்போது வெள்ளரிக்காய், பூசணிக்காய், தர்ப்பூசணி மற்றும் பழச்சாறு புற்று நோயை குணப்படுத்தும் தன்மை வாய்ந்தது. இவை நீரிழிவு நோயை கட்டுப்படுத்தும் திறன் படைத்தது என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதற்கான ஆய்வை 'கலிபோர்னியா பல்கலைக்கழகத்தை சேர்ந்த வில்லியம் லூகாஸ் மற்றும் சைனீஸ் அகடமியை சேர்ந்த டேவிஸ், சான்வென் ஹுயாஸ் ஆகியோர் நடத்தினர்.

வெள்ளரி வகையை சேர்ந்த இந்த காய்கறிகள் மற்றும் பழ வகைகள் அவற்றின் இலைகளை பல ஆயிரம் ஆண்டுகளாக தங்கள் மருந்துகளில் இந்தியர்களும், சீனர்களும் பயன்படுத்தி வருகின்றனர்.

அதன் அடிப்படையில் இவர்கள் வெள்ளரி வகை காய்கறிகளில் ஆய்வு மேற்கொண்டனர். இக்காய்களில் பி.ஐ., பி.டி. என்ற இருவகை மரபியல் மூலக்கூறுகள் சிறப்பு தன்மையுடன் உள்ளன. இவை 'டிஎன்.ஏ'வுடன் தொடர்பு கொண்டவை.

இவைகள், புற்று நோய் செல்களை அழிக்கும் திறன் படைத்தவைகள் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். (இ-5)

## தகுதியான ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர் கலாசாலைகளில் 2015-2016 கல்வியாண்டில் பாடநெறிகளைப் பயில்வதற்காக தகுதியான ஆசிரியர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

28.11.2014 இல் மூன்று மாத ஆசிரியர் சேவையைப் பூர்த்தி செய்த அரச பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரிய உதவியாளர்கள், தனியார் பாடசாலையில் கல்வி அமைச்சின் அனுமதியுடன் பணியாற்றும் ஆசிரியர்கள் இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கத் தகைமையுடையவர்கள் ஆவர்.

விண்ணப்பப் படிவங்களை 28.12.2014 இற்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும். மேலதிக விபரங்களை 2014.11.28 ஆம் திகதிய வர்த்தமானியில் பார்வையிடலாம். (இ-5)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### மு/மயில்வாகனம் தமிழ் வித்தியாலயம், யோகபுரம்.

2014 தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றிச் சித்தியடைந்த மாணவர்களையும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்

### சித்தியடைந்த மாணவர்களின் விபரம்

சின்னராசா நிசான்-166, பாலசிங்கம் அபிசன் -165, சிவகுமார் பவிதன்-160, ஜேசீஸ்வரராவ் யூட்மேரியன்-160, தயாபரன் கயானா-160, ஜெயநாதன் வினோஜா-159, சசிகுமார் தேனுஜா-149



### 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள்

ச.சஜிதா-148, அ.அபிநயா-148, சு.பிரணயன்-144, ச.சுகிர்தன்-138, கோ.சாதுசன்-134, கு.மலர்விழி-134, த.நெருசன்-127, அ.விபீசன்-125, ச.ஜனுசியா-123, த.சுகர்ணா-123, வி.தனுசன்-122, கோ.சோபிதன்-115, ஜெ.ஹம்சா-114, செ.மேனகா-112, ச.சைனுஜா-104

இவர்களின் வெற்றிக்கு வழிகாட்டிய அதிபர், ஆசிரியர்கள் அனைவருக்கும் பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கின்றோம். இவர்கள் கல்வியில் மேலும் சாதனைகள் படைக்க எமது மனப்பூர்வமான வாழ்த்துக்கள்.

(8481)

வாழ்த்துவோர்:-பாடசாலை சமூகம்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### 2014 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்ற




ஆகிய மாணவர்களையும் சித்திச் சான்றிதழ் பெற்ற மாணவர்களையும் இவர்களைக் கற்பித்து வழி நடத்திய அதிபர், ஆசிரியர்கள், வகுப்பாசிரியர் திருமதி.வி.காமினிதேவி அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

### சித்திச்சான்றிதழ் பெற்ற மாணவர்கள்

| | | | |
|---|---|---|---|
| இ.கிருசாளினி | 142 | சு.துதர்சனா | 111 |
| ர.மிதுன் | 123 | ஸ்.அபிநயா | 108 |
| சி.றொபின்சன் | 116 | ய.கயனகரன் | 105 |
| சி.துஷியந் | 115 | ஜெ.லதுஷன் | 093 |
| த.கோபிதாஸ் | 112 | யோ.யோசப்டிலோஜன் | 091 |

(பாடசாலைச் சமூகம்)

(8472)

## விசேட சலுகை

வலம்புரியின் 15 ஆவது ஆண்டு நிறைவினையொட்டி எமது வாடிக்கையாளர்கள் 01.11.2014 முதல் 31.12.2014 வரை மாபெரும் விசேட விலைக் கழிவுடன் தங்களது விளம்பரங்களை எமது பத்திரிகையில் பிரசுரிக்க முடியும் என்பதனை அறியத் தருகின்றோம்.

**முழுப்பக்கம், அரைப்பக்கங்களிற்கு மாத்திரமே இவ் விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படும்.**

மேலதிக விபரங்களுக்கு இன்றே வலம்புரி காரியாலயத்தை நாடுங்கள்...

தொடர்புகளுக்கு:- 021 2217 603
021 5671 532
Valampuriijaffna@gmail.com

## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 3<br>கி.பா: 38<br>தகைமை/தொழில்: A/L/ சொந்த தொழில்<br>தொ.இ: B/3855 | பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 26 3/4<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: A/L/ சொந்த தொழில்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/3888 |
| பிறப்பு: 1985இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 16 1/2 சூரி செவ்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BSC/ Q.S<br>தொ.இ: B/3857 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 54 செவ் 8 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: O/L/ தனியார் தொழில்<br>தொ.இ: G/3900 |
| பிறப்பு: 1985இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 13 1/2<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BSC/ பொறியியளாளர்<br>தொ.இ: B/3859 | பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 40 செவ் 8 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G/3177 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 10 1/2 செவ் 7 இல்<br>தகைமை/தொழிலO/L/ சாரதி<br>தொ.இ: B/3860 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 5 1/4<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: பட்டதாரி/ வங்கியாளர்<br>தொ.இ: G/3179 |

**கல்யாண மாலை**

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
([illegible])


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "Wifi Hotspot" வலையமைப்பை யாழ்ப்பாணத்தில் நிறுவத் திட்டம்

ஸ்ரீ லங்கா ரெலிக்கொம் நிறுவனமானது தமது வாடிக்கையாளர் மற்றும் பொது மக்களின் நலன் கருதி யாழ்ப்பாணத்திலுள்ள பொதுமக்கள் கூடும் இடங்கள் அலுவலங்கள் என்பவற்றில் (Wifi Hotspot) வலையமைப்பை (Wifi வலையமைப்பு) நிறுவ ஆரம்பித்துள்ளது. மேற்படி Wifi வலையமைப்பு வீச்சு உள்ள இடங்களில் ரெலிக்கொம்மின் (Broad Band ADSL) வசதியுள்ள எவரும் இணைய வசதியைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதுடன் அவ்வாறில்லாதவர்களின் வசதி கருதி முதற்கட்டண அட்டைகளைப்(Wifi prepaid cards) பயன்படுத்தி இணைய இணைப்பினைப் பெற முடியும். இதற்கென பிரத்தியேகமான முற்கட்டண அட்டைகள் விரைவில் பாவனையாளர்களுக்கு அறிமுகம் செய்யப்படவுள்ளது.

(Wifi) வலையமைப்பினூடாக இணையத்தள பாவனை தொடர்பான கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் 5 ஆம் திகதி முற்பகல் 11.30 மணியளவில் யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் யாழ்ப்பாணம் ரெலிக்கொம் நிறுவனத்தால் நடத்தப்படவுள்ளது.

ஆர்வமுள்ளவர்கள் இதில் கலந்துகொண்டு பயனுள்ள தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என மேலும் அறிவிக்கப்பட்டுள் ளது.(இ-5)




# நம்பிக்கை ஒளிக்கீற்று தென்படும் வேளையில் நாம் அனைவரும் சிந்தித்து செயற்படவேண்டும்

## யாழ்.பல்கலை.ஆசிரியர் சங்கம் கோரிக்கை

**ஜனாதிபதி தலைமையில் இன்று கொழும்பில் நடைபெறவுள்ள பல்கலைக்கழக மீளாய்வு கூட்டம் அரசியல் நோக்கம் கொண்டது என யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. ஐக்கிய இலங் கைக்குள் அனைத்து இன மக்களும் சமமாக வாழ வழி பிறக்கும் என்ற நம்பிக்கை ஒளிக்கீற்று தென்படும் வேளையில் நாம் அனைவரும் நிதானமாக சிந்தித்து செயற்பட வேண்டும் எனவும் பல்கலை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் சங்க தலைவர் ஆ. இரசாகுமாரன் தெரிவிக்கையில், இன்று கொழும்பில் நடத்தப்படவிருக்கும் பல்கலைக்கழகங்களின் முன்னேற்ற மீளாய்வு சம்பந்த மான கூட்ட மொன்றிற்கு கல்வி சார் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் அனைவரையும் அழைத்துள்ளார் கள். இக்கூட்டத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் கலந்து கொள்ளவிருக்கிறார். இவ்வழைப்பின் நோக்கம் பற்றியும் அது வந்துள்ள காலம் பற்றியும் நாம் கவனம் செலுத்த வேண்டும். இது போன்றதொரு அழைப்பு 2010 ஆம் ஆண்டும் கல்வி சார் ஊழியர்களுக்கு வந்தது. அதன்போது பல உறுதி மொழிகள் வழங்கப்பட்டன. தேர்தலின் பின் ஏமாற்றப்பட்டோம்.

இன்றும் ஜனாதிபதித் தேர்தலில் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் நாம் அழைக்கப்பட்டுள்ளோம்.

இக்கூட்டத்தில் என்ன விடயங்கள் ஆராயப்படவுள்ளன என்பது பற்றி யாருக்கும் தெரியாது. எனவே கல்வி சார் ஊழியர்களே இவ்வரசால் எமக்களிக்கப்பட்ட வாக்குறுதிகள் இன்னும் நிறைவேற்றப் படாமலேயே உள்ளன. எம்மையும் சாதாரண அப்பாவி மக்களை இலகுவாக ஏமாற்றுவது போல ஏமாற்றப் பார்க்கிறார்களா? இக் கூட்டத்தையும் தமது அரசியல் இலாபத்திற்குப் பயன் படுத்தப் போகிறார்களா? நாமும் இதற்குத் துணை போவதா?

அராஜகங்கள்மற்றும்சர்வாதிகாரம் அற்ற ஒரு நாட்டில் அனைத்து இன மக்களும் சம உரிமையுடன் ஐக்கிய இலங்கைக்குள் மகிழ்ச்சியாக வாழ வழி பிறக்கும் என்ற நம்பிக்கை ஒளிக் கீற்று தென்படும் இவ் வேளையில் நாம் அனை வ ரும் நிதான மாகச் சிந்திப்போம். நாம் கல்வியியலாளர்கள் .நாம்சரியாகவே சிந்திப்போம் என்பதை அனைவரிற்கும் எடுத்துக்காட்டுவோம். விசேடமாக யாழ்ப்பாணப் பல்லைக்கழக ஆசிரியர் சங்க அங்கத்தவர்களே சிந்தித்து முடிவெடுப்போம். வரலா ற்றுத் தவறுகளை இழைக்காதிருப்போம் என அவர் மேலும் தெரி வித்தார். இதேவேளை அனைத்து பல்கலைக் கழகங்களது ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனமும் (FUTA) எச்சரிக்கை மணியடித்து அறிக்கை வெளியிட்டுள்ளதுஎன்பதும் இங்குகுறிப்பிடத்தக்கது என தெரிவித்தார். (இ-4)




# தியாகி அறக்கொடை நிறுவன ஸ்தாபகரின் 63-வது அகவை, அறப்பணி செயற்பாடுகள்

நலிவுற்ற மக்களின் மேம்பாட்டிற்கான சமூகநலப் பணிகளை ஆற்றி வரும்தியாகி அறக்கொடை நிறுவன ஸ்தாபகரின் 63ஆவது அகவையை முன்னிட்டு பல்வேறு அறப்பணி நிகழ்வுகள் நாவலர் வீதியில் அமைந்துள்ள சொர்ணாம்பிகை மண்டபத்தில் நாளை 2ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு நிறுவனத்தின் பணிப்பாளர் செ.கமலநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில்யாழ்பல்கலைக் கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் வி.பி.சிவதாசன். பிரதம விருந்தினராகவும் ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் திருமதி அன்ரன் யோகநாயகம்,யாழ்ப்பாண உதவி பிரதேச செயலாளர் செல்வி தனிஸ்கா வசந்தராஜா, சமாதானத்திற்கும்நல் லெண்ணத்திற்குமான மக்கள் குழு செயலாளர் எஸ்.பரமநாதன், வவுனியா சர்வோதயம் வடமாகாண ஆலோசகர் அ.கி.சிவசுப்பிரமணியம், யாழ் பிராந்திய கல்விப்பணிப்பாளர்சிமாணிக்கராஜா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் வவுனியா பொது வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி கே. அகிலேந்திரன், யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி பொ. யசிதரன், சர்வதேச லயன்ஸ் கழக உப மாவட்ட ஆளுநர் வைத்திய கலாநிதி வீ.தியாகராஜா ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். மும்மதத்தை சேர்ந்த சமய குருக்க ளினது ஆசியுரைகளும் இடம்பெறும். அத் துடன் சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியான பல்வேறு சமூக நலப்பணிகளும் நடைபெறவிருக்கின் றன. யாழ்ப்பாணத்தில் பிறந்து சுவிட்சர்லாந்தில் வசித்துவரும் தியாகேந்திரன் தனது சொந்த நிதியினூடாக மேற்படி தியாகி அறக்கொடை நிறுவனத்தை கடந்த 10 வருடங்களுக்கு மேலாக நடத்தி வருவது குறிப் டத்தக்கது. அத்துடன் இங்கு சிறுவர் காப்பகம் ஒன்றும் நீண்ட காலமாக இயங்கி வருகின்றது. பெற்றோரை இழந்த 17 சிறுவர்கள் இங்கு வசிக்கி ன்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# இந்திய மீனவர் மூவரும் நாளை நாடு திரும்புவர்!

(யாழ்ப்பாணம்)

யாழ். சுழிபுரம் சவுக்கடி கடற்கரையில் கடந்த வெள்ளிக்கிழமை கரையொதுங்கிய மூன்று இந்திய மீனவர்களும் நாளை செவ்வாய்க் கிழமை அவர்களின் சொந்தவூருக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் என, யாழ். இந்திய துணைத் தூதரக பிரதித்தூதுவர் எஸ்.டி. மூர்த்தி தெரிவித்தார்.

இந்திய, தமிழகத்தின் வேதாரணியம் பகுதியிலிருந்து மீன்பிடிப்பதற்காக, கடலுக்கு படகு ஒன்றில் புறப்பட்ட குட்டியப்பன் குமரன் (வயது 41), அரியகுட்டி காளியப்பன் (வயது 34), கண்ணன் காளிதாஸ் (வயது 40) ஆகிய மூன்று மீனவர்களும் கடற்கொந்தளிப்பால், கடல் அலைகளால் படகு தள்ளப்பட்டு, சுழிபுரம் கடற்கரையில் படகுடன் கரையொதுங்கினர்.

இவர்களை மீட்ட கடற்படையினர் வட்டுக்கோட்டை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

தொடர்ந்து கடந்த வெள்ளிகிழமை இரவு இந்திய துணைத் தூதரக அதிகாரிகளால் மேற்படி மூன்று மீனவர்களும் வட்டுக் கோட்டை பொலிஸாரிடமிருந்து பொறுப்பேற்றுக் கொள்ளப்பட்டனர்.

இதன்போது, மூவரும் சுகயீனமடைந்திருந்ததையடுத்து, சங்கானை வைத்தியசாலையில் மீனவர்கள் மூவருக்கும் சிகிச்சை வழங்கப்பட்டது.

இந்த மீனவர்கள் கரையொதுங்கியமை தொடர்பில் கொழும்பிலுள்ள இந்திய தூதரகத்துக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

அங்கிருந்து உத்தரவு கடிதம் கிடைக்கப்பெற்றதும், கடற் கொந்தளிப்பு நிலைமையை கருத்திற் கொண்டு மூன்று மீனவர்களையும் இலங்கை கடற்படையினர் ஊடாக இந்தியாவுக்கு நாளை செவ்வாய்க்கிழமை அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக தூதுவர் மூர்த்தி மேலும் தெரிவித்தார். (இ)

# யாழ். கிட்டார் கலைஞர்களின் அரங்கம் விரைவில் உதயம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை கிட்டார் அசோஷியேசன் ஆதரவில் கிட்டார் பயிற்சி பெறுகின்ற யாழ்.மாவட்ட கலைஞர்களுக்கான நேர்முகத்தேர்வும் பதிவும் நேற்று முன்தினம் காலை யாழ். பொது நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் கலைஞர்கள் பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

மேற்படி பதிவு செய்யப்பட்ட கலைஞர்களின் கோரிக்கைகள் தொடர்பில் டிசெம்பர் மாதம் முற்பகுதியில் விசேட கலந்துரையாடலொன்று பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன் னிலையில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன் போது மேற்படி கலைஞர்கள் தங்களது பயிற்சிகளை மேற்கொள்வதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்து[illegible] வடிக்கைகள் எடுக்கப்பட[illegible] யாழ். கிட்டார் கலைஞர்களின் அரங்கு உருவாக்கப்பட்டு அதற்குரிய நிர்வாகத் தெரிவும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேநேரம் எதிர்வரும் ஜனவரி மாதம் 31 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் தேசிய மற்றும் சர்வதேச கிட்டார் இசைக்கலைஞர்கள் கலந்து கொள்ளும் இசை நிகழ்வொன்றும் நடத்தப்படவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட [illegible] குறிப்பிடத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழாயிரத்தினை நெருங்கும் எபோலா பலி எண்ணிக்கை

## கடந்த வாரம் மட்டும் 1000 பேர் மரணம்

(லண்டன்)—

**உயிர்க்கொல்லி வைரஸ் நோயான எபோலாவுக்கு உலகளாவிய ரீதியில் இதுவரை 6 ஆயிரத்து 928 பேர் உயிரிழந்துள்ள அதேவேளை கடந்த ஒரு வாரத்தில் மட்டும் ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளதாக அதிர்ச்சித் தகவல் தற்போது வெளியிடப்பட்டுள்ளமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.**



இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

எபோலா என்ற கொடிய வைரஸ் நோய் மேற்கு ஆபிரிக்க நாடுகளான லைபீரியா, கினியா, சியாராலிலோன் ஆகிய 3 நாடுகளில் கடுமையாக தாக்கி உள்ளது. இவை தவிர நைஜீரியா, மாலி, அமெரிக்கா, ஸ்பெயின் உள்ளிட்ட மேலும் 5 நாடுகளிலும் பரவி யுள்ளது.

இந்த நோயை குணப்படுத்த இன்னும் மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை. எனவே எபோலா நோய் பரவாமல் தடுக்க சர்வதேச நாடுகள் கடும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளன.

எபோலா நோய் தாக்கி பலியானோர் எண்ணிக்கை 7 ஆயிரத்தை நெருங்கிவிட்டது. இதுவரை 6ஆயிரத்து 928 பேர் உயிரிழந்துள்ளதாக உலக சுகாதார நிறுவனம் அதிகார பூர்வமாக அறிவித்துள்ளது.

கடந்த ஒரு வாரத்திற்குள் இந்த நோய் தாக்கி ஆயிரம் பேர் பலியாகி உள்ளனர். தற்போது லைபீரியாவில் தான் பலியானோர் எண் ணிக்கை அதிகமாக உள்ளது.

இங்கு நோய் தாக்கிய 7ஆயிரத்து 244 பேரில் 4ஆயிரத்து 181 பேர் இறந்துள்ளனர். சியாராலிலோனில் பாதிக்கப்பட்ட 6ஆயிரத்து 802 பேரில் ஆயிரத்து463 பேரும், கினியாவில் 2ஆயிரத்து123 பேரில் ஆயிரத்து 284 பேரும் உயிரிழந்துள்ளனர்.

தற்போது எபோலா நோய் தாக்கம் சியாராலிலோன் நாட்டில் அதிகம் உள்ளது. அதே நேரத்தில் லைபீரியாவில் குறைந்துள்ளது. கினியா, சியாராலிலோன் நாடுகளில் மட்டும் 16 ஆயிரம் பேர் இந்த நோய் தாக்குதலால் பாதிக்கப்பட்டுள்ளனர். மாலி நாட்டில் எபோலா தாக்கி 10 பேர் பாதித்து இருந்தனர். அவர்களில் 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

நைஜீரியா மற்றும் செனேகல் ஆகிய நாடுகளில் எபோலா நோய் முற்றிலும் ஒழிக்கப்பட்டு விட்டது. தற்போது அங்கு எபோலா நோய் பாதிக்கப்பட்டவர்களும் இல்லை. உயிரிழப்பும் இல்லை. இந்த தகவல்கள் உலக சுகாதார நிறுவனத்தால் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## ஆயிரக்கணக்கில் அடிமைகள் பிரிட்டனில் தொடரும் அவலம்

பிரிட்டனில் அடிமை நிலையில் வைக்கப்பட்டிருப்பவர்கள் எத்தனை பேர் என்பது குறித்த தகவலை பிரிட்டிஷ் உள்துறை அமைச்சு முதல் தடவையாக வெளியிட்டிருக்கிறது. முன்னர் நம்பப்பட்டதை விட 4 மடங்கு அதிகமாக, கடந்த வருடத்தில் 10 ஆயிரம் முதல் 13 ஆயிரம் பேர் வரை அடிமைகளாக இருக்கலாம் என்று அது மதிப் பிட்டுள்ளது.

துஷ்பிரயோகத்தின் அளவு என்பது உண்மையில் அதிர்ச்சியை தருவதாக உள்ளதாக உள்துறை அமைச்சர் தெரேஸாமே தெரிவித்தார்.

பெருமளவிலான பாதிக்கப்பட்டவர்கள், விவசாயத்திலும், மீன்பிடிப் படகுகளிலும், பாலியல் தொழிலாளராகவும், அல்லது வீட்டு வேலை செய்பவராகவும் பணியில் இருக்கிறார்கள்.

இந்தப் பிரச்சினையை கையாள பிரிட்டிஷ் எல்லை காவல் படையினர் துறைமுகங்களிலும் விமான நிலையங்களிலும் நிபுணத்துவ குழுக்களை நிறுத்தியுள்ளனர் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## நூதன போராட்டம்



பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் ஈபிள் கோபுரத்துக்கு ஆட்டு மந்தைகளை அனுப்பி விவசாயிகள் நூதன போராட்டம் நடத்தினர்.

ஓநாய்களின் தாக்குதலால் தங்கள் ஆடுகள் உயிரிழப்பதை தடுக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்பதால் கோபமடைந்த விவசாயிகள் ஈபிள் கோபுரத்துக்கு தங்கள் ஆட்டு மந்தைகளை ஓட்டி வந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். அதே நேரத்தில் விலங்குகள் நல அமைப்பினர் ஓநாய்களை அழிக்கக் கூடாது என்று எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

புகழ் பெற்ற சுற்றுலா இடமான ஈபிள் கோபுர பகுதியில் ஆட்டு மந்தைகள் வலம் வந்தது வித்தியாசமான காட்சியாக அமைந்தது.

ஆண்டுதோறும் சுமார் ஆயிரம் ஆடுகள் ஓநாய்களுக்கு இரையாகின்றன. இதனால் தங்களுக்கு பெரும் நட்டம் ஏற்படுகிறது.

எனவே ஓநாய்களிடம் இருந்து தங்கள் ஆடுகளை காப்பாற்ற புதிய செயற்றிட்டம் வகுக்க வேண்டுமென்று விவசாயிகள் இதன் போது கோரிக்கை விடுத்தனர். (இ-5)




## சுட்ட பொலிஸ் பதவி விலகல்

அமெரிக்காவில் மிசோரி மாகாணம், பெர்குசனில் கடந்த ஒகஸ்ட் மாதம் 9 ஆம் திகதி, மைக்கேல் பிரவுன் என்ற கறுப்பின இளைஞனை டேரன் வில்சன் என்ற வெள்ளை இன பொலிஸ அதிகாரி சுட்டுக் கொன்ற சம்பவம் அங்கு தொடர் போராட்டங்களுக்கு வழி வகுத்தது.

இந்த வழக்கில் பொலிஸ் அதிகாரி டேரன் வில்சன் மீது நீதிமன்றத்தில் குற்ற விசாரணை நடத்த தேவையில்லை என ஜூரிகள் குழு கடந்த 24ஆம் திகதி தீர்ப்பு அளித்தது. இது கறுப்பின இனத்தவர் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது.

சுட்டுக்கொல்லப்பட்ட பிரவுனின் குடும்பத்தினர், ஜூரிகளின் தீர்ப்பு அநீதியானது என கூறினர். இதையடுத்து சம்பவம் நடந்த பெர்குசனில் கலவரம் ஏற்பட்டது. கலவரக்காரர்களை விரட்டியடிக்க பொலிஸார் கண்ணீர்ப்புகை குண்டுகளை வீசினர். அங்கு ஒரு கார் தீயிட்டு எரிக்கப்பட்டது. 12 வணிக கட்டடங்களும் எரிக்கப்பட்டன. பல வணிக நிறுவனங்கள் கொள்ளையடிக்கப்பட்டன. தொடர் பதற்றம் காரணமாக அங்கு 2 ஆயிரத்து 200 தேசிய பாதுகாப்பு படை வீரர்கள் குவிக்கப் பட்டனர்.

இந்நிலையில் மைக்கேல் பிரவுனை சுட்டுக்கொன்ற பொலிஸ் அதிகாரி டேரன் வில்சன் தனது பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பித்துள்ளார். தன்னுடைய இராஜினாமா கடிதத்தால் கறுப்பின சமூகம் ஆறுதல் அடையும் என்று நம்புவதாகவும் வில்சன் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (இ-5)

## சீனாவில் உய்குர் தீவிரவாதிகள் கொடூர தாக்குதல்;15 பேர் பலி!

சீனாவின் சிங்ஜியாங் மாகாணத்தில் அல் கொய்தா தீவிரவாத இயக்கத்தின் ஆதரவை பெற்ற கிழக்கு துருக்கிஸ்தான் இஸ்லாமிய இயக்கத்தினர், உய்குர் தீவிரவாதிகள் ஆகியோர் சீனப் படையினரை எதிர்த்து போரிட்டு வருகின்றனர்.

அதிகமாக உய்குர் முஸ்லிம்கள் வாழும் சிங்ஜியாங் பகுதியில் சீன ஹான் இனத்தவரின் குடியேற்றம் பெருகி வருவதை கண்டித்து இவர்கள் போராடி வருகின்றனர். [illegible] உள்ள காஷ்மீரின் எல்லையோரம் பதுங்கியிருக்கும் இவர்கள் அவ்வப்போது சீனாவின் சிங்ஜியாங் பகுதியில் தீவிரவாத தாக்குதல்களிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் சீனாவின் தலைநகர் பீஜிங்கில் உள்ள டியனன்மென் சதுக்கத்தின் மீது இவர்கள் நடத்திய கார் குண்டு தாக்குதலில் 5 பேர் பலியாகினர்.

சீனாவின் பிரபல புகையிரத நிலையங்களுக்குள் கத்தி மற்றும் உடைவாள்களுடன் புகுந்த இவர்கள் ஏராளமான பொதுமக்களையும் வெட்டி சாய்த்துள்ளனர்.

இந்நிலையில், உள்ளூர் நேரப்படி நேற்றுமுன்தினம் பிற்பகல் ஒன்றரை மணியளவில் சிங் ஜியாங் மாகாணம், ஷாச்சே பகுதியில் உள்ள ஒரு கடைத் தெருவிற்கு வந்த ஏராளமான தீவிரவாதிகள், அப்பகுதியில் உள்ள மக்கள் மீது வெடிகுண்டுகளை வீசி தாக்குதல் நடத்தினர்.

கண்ணில் தென்பட்டவர்களை எல்லாம் ஈட்டிகள், வீச்சரிவாள் போன்ற பயங்கர ஆயுதங்களால் அந்த கும்பல் வெட்டி சாய்த்தது.

இந்த கொலைவெறி தாக்குதலில் அப்பாவி பொது மக்கள் 15 பேர் பலியான தாகவும், 14 பேர் படுகாயங்களுடன் வைத்தியசாலைகளில் சிக்கிசை பெற்று வருவதாகவும் உள்ளூர் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

அவ்வழியே ரோந்து வந்த பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இவர்களில் 11 தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாகவும் அந்த செய்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவுக்காக உண்ணாவிரதமிருந்த பாதிக்கப்பட்ட மீரியாபெத்த மக்கள்

(கொழும்பு)

**இலங்கையில் பதுளை மாவட்டத்தில் ஒரு மாதத்துக்கு முன்னர் மண்சரிவில் சிக்கி உயிரிழந்த மீரியபெத்த தேயிலைத் தோட்ட மக்களின் நினைவாக மலையகத்தின் சில இடங்களிலும் தலை நகரிலும் அஞ்சலி நிகழ்வுகள் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. இதனிடையே, பாதிக்கப்பட்டு தற்காலிக முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாக சிவில் சமூக ஆர்வலர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.**

தற்போது தற்காலிகமாக பழைய தேயிலைத் தொழிற்சாலை ஒன்றில் அறைகள் அமைக்கப்பட்டு தங்க வைக்கப்பட்டுள்ள மக்கள் போதிய வசதிகள் இன்றி சிரமப்படுவதாக மலையக சமூக ஆய்வு மையத்தின் இணைப்பாளர் அருட்தந்தை எம். சத்திவேல் தெரிவித்தார்.

ஒரே அறையில் ஒன்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள் தங்கவைக்கப்பட்டுள்ளதாகவும் இராணுவத்தின் கட்டுப்பாட்டிலேயே தொடர்ந்தும் வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த மக்களுக்கான உணவை சமைத்துக் கொடுத்துவந்த இராணுவம திடீரென்று அந்தப் பணியி லிருந்து ஒதுங்கிகொண்டுள்ள சூழ்நிலையில், உணவின்றி சிர மப்பட்ட மக்கள் உணவுகோரி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட நேர்ந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

இதனிடையே, மண்சரிவு நடந்து ஒருமாதம் கடந்துள்ள சூழ்நிலையில் இராணுவத்தால் தொடர்ந்தும் உணவு சமையலுக்கான பணியை முன்னெடுக்க முடியாது என்று ஊவா மாகாண அமைச்சரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர்களில் ஒருவருமான செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

குறித்த மக்களுக்கான சமையல் பொறுப்பை தோட்ட நிர்வாகம் உரிய முறையில் பொறுப்பேற்காத நிலையிலேயே மக்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

தற்காலிக முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கான நிரந்தரக் குடியிருப்புகளை அமைக்கும் பணிகள் மூன்று மாதகாலத்திற்குள் பூர்த்தியடையும் என்று எதிர்பார்ப்பதாகவும் செந்தில் தொண்டமான் மேலும் தெரிவித்தார். (இ-5)

## நேர்முகப் பரீட்சை

வலய மாகாணக் கல்விப் பணியகங்களில் கடமை பார்க்கும் உதவிப் பணிப்பாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க கல்வி அமைச்சில் நேர்முகப் பரீட்சை நடைபெற்று வருகின்றது.

2011.12.31வரை 3 வருடங்கள் கடமை பார்த்தவர்களுக்கு நியமனம் வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கி இருந்தது. 10,15 வருடங்கள் கடமை பார்த்தவர்களும் சேவையில் உள்ளார்கள்.

இதை எதிர்த்து கல்வி நிர்வாக சேவை 3 ஆம் வகுப்பு பரீட்சை எழுதிய ஆசிரியர்கள் வழங்குத் தொடர்ந்திருந்தனர்.

27.11.2014 இந்த வழக்கு விசாரணை நடைபெற்ற போது கல்வி அமைச்சின் செயலாளர் 682 கல்வி நிர்வாக சேவை 3 ஆம் வகுப்பு வெற்றிடங்கள் இருப்பதாகவும் இந்த கடமை பார்த்தவர்களுக்கு நியமனம் வழங்குவதால் அதற்கு பாதிப்பு உண்டாகாது எனவும் எழுத்து மூலம் அறிவித்திருந்தார். வழக்கு மீண்டும் 2015.01.28 அன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ

## சீனாவிலிருந்து அதிசொகுசு வாய்ந்த 500 பேருந்துகள் விரைவில் இறக்குமதி


(பீஜிங்)

சீனாவிலிருந்து அதி சொகுசு வாய்ந்த பேருந்துகள் இறக்குமதி செய்வதற்கு இலங்கை போக்குவரத்துச் சபை நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்கான அமைச்சரவை அங்கீகாரமும் கிடைத்துள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபையின் அத்தியட்சகர் எச்.எம்.சந்திர சிறி தெரிவித்தார்.

இவ்வாறு இறக்குமதி செய்யப்படும் பேருந்துகளில் 300 பேருந்துகள் கொழும்பு நகரில் சேவைக்கமர்த்தப்படும். ஏனைய பேருந்துகள் கொழும்பை சூழவுள்ள பகுதிகளில் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

இதேவேளை, இந்தியாவிலிருந்து 2 ஆயிரத்து 200 பேருந்துகள் இறக்குமதி செய்யப்படவுள்ளன.

அவற்றில் ஆயிரத்து 200 பேருந்துகள தற்சமயம் இலங்கைக்கு வரவழைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் 900 பேருந்துகள் தற்சமயம் நாடு மு முவதிலும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபை தெரிவிக்கின்றது. (இ-5)



இந்திய இஸ்லாமிய ஆன்மீகத் தலைவர் அஸித் ஹாஜிர் ஆலிம் நேற்று முன்தினம் அலரிமாளிகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து ஆசி வழங்கிய போது....

## மைத்திரிபால சிறிசேன படுதோல்வி அடைவார்

### ஹிஸ்புல்லா கூறுகிறார்

மைத்திரிபால சிறிசேன இந்த ஜனாதிபதித் தேர்தலில் படு தோல்வி அடைவார் என பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ஆரையம்பதி பாலமுனை பிரதேசத்தில் 150 வறிய குடும்பங்களுக்கு இலவச குடிநீர் இணைப்புக்கான பவுசர்கள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உணர்வுகளாலும் உணர்ச்சிகளாலும் தூண்டப்பட்டு தமிழ் சமூகம் பட்ட துன்பம், துயரம் எமக்கு தெரியும். தமிழரசுக் கட்சி, தமிழ் தேசிய கூட்டமைப்பு எதிர்ப்பு அரசியலை செய்து தமிழ் மக்களை அதன் மூலம் காயப்படுத்தியுள்ளதை நேரடியாக கண்டிருக்கின்றோம். ஆகையால் நாங்கள் எதிர்ப்பு அரசியலை செய்ய முடியாது நாங்கள் அரசியல் யதார்த்தத்தை புரிந்து கொள்ள வேண்டும்.

அண்மையில் அளுத்கம மற்றும் தர்க்கா நகர் பிரதேசத்தில் இடம்பெற்ற கலவரம் மற்றைய இடங்களுக்குச் செல்லாமல் பாதுகாக்கப்பட்டுள்ளதோடு, கலவரத்தின் போது சேதமாக்கப்பட்ட வீடுகள் மற்றும் பள்ளிவாசல்கள் அரசாங்கத்தினால் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.

இதையெல்லாம் விளங்கிக் கொள்ளாமல் நாங்கள் எங்களுடைய சமூகத்திற்காக பேசுகின்ற பொழுது நாங்கள் கருத்துக்களால் விமர்சிக்கப்படுகின்றோம், அதை பற்றி நாங்கள் கவலைப்படவில்லை, அதை வரவேற்கின்றோம். ஆனால் அந்த கருத்துக்களின் மூலம் நீங்கள் எங்களுக்கு என்ன சொல்ல வருகின்றீர்கள்? அதனை நீங்கள் தெளிவாக சொல்ல வேண்டும்.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் ஒரு இலட்சம் முஸ்லிம் மக்கள் மட்டும்தான் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு வாக்களித்தார்கள். மற்ற அனைத்து முஸ்லிம்களும் சரத் பொன்சேகாவுக்குத்தான் வாக்களித்தார்கள்.

எல்லோரும் சொன்னார்கள் சரத் பொன்சேகா வெல்லப் போகிறார் என்று, ஆனால் அவர் படுபயங்கர தோல்வி அடைந்து கிட்டத்தட்ட 19 இலட்சம் வாக்கு வித்தியாசத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்றார். நம் நாட்டினுடைய அரசியலை விளங்கிக் கொள்ள வேண்டும். ஒரு தோற்றுப்போகிற அரசியலுக்கு பின்னால் எங்களுடைய சமுதாயத்தை கொண்டு போக முடியாது.

சில நேரங்களில் நாங்கள் சொலலுகின்ற நேரம் அதை ஏற்றுக் கொள்வதற்கும் சிலர் ஆயத்தமில்லை. ஆனால் நாங்கள் உண்மையை, யதார்த்தத்தை விளங்கிக் கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## மகிந்த நிறைவேற்று அதிகாரத்தை விட்டுக்கொடுக்கமாட்டார்- ஹரின்

மகிந்த ராஜபக்ஷவுக்கு வெற்றி வாய்ப்பை வழங்கினால், அடுத்த 8 வருடங்களுக்கு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை அகற்ற முடியாது என்று ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது.

ஊவா மாகாண சபையின் எதிர்க்கட்சி தலைவர் ஹரின் பெர்னாண்டோ இந்த கருத்தை வெளியிட்டுள்ளார். தொலைக்காட்சி ஒன்றின் அரசியல் நிகழ்ச்சியில் கருத்துரைத்த அவர், இது நடக்காமல் இருக்க மக்கள் உறுதியாக இருக்க



வேண்டும் என்றும் தெரிவித்தார்.

தாமே நாட்டை பாதுகாப்பவர் என்று ஜனாதிபதி கூறும்போது அவரின் கட்சியில் இருந்த பொதுச் செயலாளரே அதனை நிராகரிக்கும் வகையில் அவருக்கு எதிராக போட்டியடுகிறார் என்றும் ஹரின் சுட்டிக் காட்டினார்.

இதேவேளை தனியார் தொலைக்காட்சியில் ஒளிபரப்பான இந்த அரசியல் நிகழ்ச்சி கடந்த வாரம் அரசாங்கத்தினால் குழப்பப் பட்டது. இந்த நிலையில் நேற்று முன்தினம் அரசாங்கம் தமது தரப்பில் இருந்து எவரையும் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்கப்பதற்காக அனுப்பவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## போரை வென்றெடுத்த நாட்டினை சூறையாட இடமளிக்க முடியாது

போர் வென்றெடுக்கப்பட்ட நாட்டை சூறையாட இடமளிக்க முடியாது என ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலிருந்து விலகி, எதிர்க்கட்சியில் இணைந்து கொண்ட முன்னாள் பிரதியமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.கே.டி.எஸ். குணவர்தன தெரிவித்துள்ளார். ஆளும் கட்சியிலிருந்து வெளியேறினாலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை விட்டு விலகவில்லை. பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன மீது நம்பிக்கை உண்டு. மைத்திரிபால சிறிசேன வறிய விவசாய குடும்பமொன்றைச் சேர்ந்தவர் என்பதனால் அவருக்கு வறுமை நன்றாகத் தெரியும்.

100 நாட்களுக்குள் நிச்சயமாக நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறமையை இரத்து செய்வோம். நாட்டு மக்களுக்காகவே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. போரின் மூலம் விடுவிக்கப்பட்ட நாட்டை ஒரேயொரு குடும்பம் சூறையாட விட முடியாது. சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் பாரியளவில் அநீதிகளை எதிர்நோக்கி வருகின்றனர். அரசாங்கத்தை விட்டு விலகிச் செல்ல முயற்சிப் போரை தக்க வைத்துக்கொள்ள பல்வேறு முயற்சிகள் எடுத்து வருகின்றனர்.

பணம் கொடுத்தும் மிரட்டியும் அரசாங்கத்துடன் தக்க வைத்துக் கொள்ள முயற்சிக்கின்றனர் என முன்னாள் பிரதி அமைச்சர் குணவர்தன சிங்களப் பத்திரிகையொன்றுக்கு தெரிவித்துள்ளார். (இ-5)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# புலம்பெயர்ந்துள்ள உடன்பிறப்புக்கள் அவதானத்துடன் செயற்படவேண்டும்

## மனோ கணேசன் வேண்டுகோள்



(கொழும்பு)

**புலம்பெயர்ந்து வாழும் தமிழ் உடன்பிறப்புக்களும், அவர்களது அமைப்புகளும் உள்நாட்டிலே செயற்படும் தமிழ் தேசிய சிந்தனையாளர்களும் மிகவும் அவதானமாக செயற்பட வேண்டுமென ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ தெரிவித்துள்ளார்.**

இந்நாடு இன்று ஒரு ஜனாதிபதி தேர்தலை சந்திக்க தயாராகி கொண்டிருக்கும் இந்த வேளையில், முன்னணியின் தலைமையகத்தில நேற்று நடைபெற்ற, இன்றைய அரசியல் நிலைமைகள் தொடரபான ஜனநாயக இளைஞர் இணைய வாராந்த கலந்துரையாடலின் போது மனோ கணேசன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இன்று நாங்கள் கத்தியின் மீது நடக்கின்றோம். நடக்கவும் வேண்டும். கால், கைகளை வெட்டிக் கொள்ளவும் கூடாது. இது கஷ்டமான காரியம்தான். இதிலுள்ள கஷ்டம் இந்த காரியத்தில் ஈடுபட்டுள்ள எங்களுக்கு தான் தெரியும்.

ஆனாலும், முன்னெடுத்த காலை பின் வைக்கும் பழக்கம் எனக்கு கிடையாது. இன்று நாங்கள் கஷ்டப்பட்டு உருவாக்கும் இந்த மேடையில், இந்த கஷ்டங்களில் பங்கு பெறாதவர்கள் வந்து நாற்காலி போட்டு நாளை உட்காரலாம். அதுபற்றி காலம்தான் முடிவு செய்யும்.

ஆனால்நான் என்ன செய்கிறேன், அவர் என்ன செய்கிறார், இவர் என்ன செய்கிறார் என மக்கள் பார்த்துகொண்டுதான் இருக்கிறார்கள். எல்லோரையும் வருக என்றுதான் நான அழைக்கின்றேன். அதேவேளை இன்று நாங்கள் செய்துவரும் காரியங்க ளை அழித்து விடாதீர்கள் என உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் வாழும் அனைவரையும் கேட்கின்றேன்.

தமிழ், முஸ்லிம் மக்களின் மீதான ஒடுக்குமுறைக்கு எதிராக ஜனநாயக போராட்டங்களை நாங்கள் இன்று முன்னெடுக்கின்றோம். அதேவேளை மறுபுறம், இந்த ஆட்சிக்கு எதிராக பெரும்பான்மை இனமும் தங்கள் பிரச்சினைகளை முன்வைத்து கணிசமாக ஒன்று கூட தொடங்கி விட்டது. அவர்கள் எங்கள் பிரச்சினை பற்றி அக்கறை கொண்டுள்ளார்கள் என்று நான் ஒருபோதும் உண்மைக்கு புறம்பாக சொல்லவில்லையே. ஏனென்றால் எனக்கு உண்மையை மூடி மறைத்து பேச தெரியாது. ஆனால் நாங்களும், அவர்களும் ஒரு வரைவுக்குள் ஒன்றாக ஒரு கூட்டணியாக உருவாகி வருகிறோம்.

எமது உடனடி இலக்கு இந்த அரசை வீழ்த்தி, ஜனநாயக இடைவெளியை ஏற்படுத்துவதுதான். எமது அரசியல், சமூக, கலாசார, பொருளாதார பரப்புகளில் இன்று செருகப்பட்டுள்ள விலங்குகளை உடைத்து கொஞ்சமாக எங்களை ஆசுவாசப்படுத்தி கொள்வதுதான்.

எனக்கும், எங்களுடன் கரங் கோர்த்துள்ள அணியினருக்கும் சாணக்கியம் தெரியும். எந்த பிரச்சினைக்கு எப்போது முன்னுரிமை கொடுக்க வேண்டும் என தெரியும்.

எனவே ஒன்றுபட்ட இலங்கை நாட்டிலே வாழும் தமிழ், முஸ்லிம் மக்களுக்கும், ஏனைய மத சிறுபான்மையினருக்கும் இன்றைய தினத்தைவிட, நல்ல ஒரு நாளைய தினத்தை உருவாக்க விளையும் எங்கள் வேலைத்திட்டத்தை சிதைத்து விடாதீர்கள் என அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பிரசாரம் அதிகார பூர்வமாக ஆரம்பித்த பிறகு நாடு முழுவதும் வந்து நான் நமது மக்களை சந்தித்து மேலதிக விளக்கங்களை தருவேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# யாருக்கு வாக்களிப்பது என்று முஸ்லிம்கள் தீர்மானித்து விட்டனர்

## அசாத் சாலி தெரிவிப்பு

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதை முஸ்லிம் மக்கள் ஏற்கனவே தீர்மானித்து விட்டதாக கொழும்பு மாநகர முன்னாள் உதவி முதல்வர் அசாத் சாலி தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஊடகம் ஒன்றிடம் இந்த கருத்தை அவர் வெளியிட்டுள்ளார். பொதுபலசேனா, ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு ஆதரவளிக்கும் போது முஸ்லிம் மக்கள் அவருக்கு எவ்வாறு ஆதரவளிப்பது என்ற பொருள பட அவரின் கருத்து அமைநதிருநதது. சிறுபான்மையினர மட்டுமன்றி பெரும்பான்மையினரும் மகிந்த ராஜபக்சவுக்கு வாக்களிப்பதில் சங்கடங்களை எதிர்நோக்குவதாக அவர குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் எப்போதும் நான்கு வகையிலான பிரசார பெயர்களை கொண்டு செயற்பட்டு வருகிறது என்று சாலி மேலும் தெரிவித்தார். (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 140 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 120 | 130 | 110 | 140 |
| பச்சைமிளகாய் | 250 | 200 | 170 | 240 |
| தக்காளி | 250 | 200 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 40 | 50 |
| கோவா | 120 | 100 | 100 | 120 |
| கரட் | 250 | 180 | 150 | 240 |
| பூசணி | 40 | 40 | 40 | 50 |
| புடோல் | 60 | 100 | 70 | 80 |
| வாழைக்காய் | 60 | 80 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 120 | 120 | 110 | 80-120 |
| பெரிய வெங்காயம் | 120 | 100 | 120 | 100 |
| பாகற்காய் | 200 | 200 | 200 | 160 |
| வெண்டிக்காய் | 100 | 140 | 110 | 80 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | 50 | 80 |
| பயற்றங்காய் | 160 | 180 | 200 | 160 |
| லீக்ஸ் | 300 | 220 | 250 | 240 |
| பீற்றூட் | 200 | 140 | 170 | 160 |
| கறிமிளகாய் | 300 | 260 | 200 | 200 |
| முருங்கைக்காய் | - | 350 | 270 | 200 |
| போஞ்சி | 150 | 140 | 120 | 140 |
| கத்தரிதம்புள்ள | 60 | 100 | 80 | 90 |
| கீரை - 1 பிடி | 30 | 40 | 30 | 40 |
| தேசிக்காய் | 120 | 130 | 150 | 140 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 50 | 35-40 | 35-45 |
| இராசவள்ளி | 250 | 140 | - | 200 |




# (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 209

பிரிய கருண




துஷா துஷா




ராஜமணி சுப்ரமணி




மயூரதன் மயூரன்




யுவராஜ் வெங்கடேசன்




மாய மயூரன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# குமார் புலி! குமார் புலி எங்கே போச்சு கோடு?

அது ஓர் அழகான காடு.

ஆயிரக்கணக்கான மரங்கள் அடர்ந்து வளர்ந்திருந்தது.

ஏகப்பட்ட பறவைகள், விலங்குகள் அந்தக் காட்டில் வசித்தன.

அந்தக் காட்டை ஒட்டிய கிராமத்தைச் சேர்ந்தவர்கள், விலங்குகளுடன் நட்பாகப் பழகி வந்தார்கள்.

அந்தக் கிராமத்தில், ஜித்து என்ற ஒரு குட்டிப் பையன் யு.கே.ஜி. படித்துவந்தான்.

குமார் என்ற குட்டிப்புலி, அவனுக்கு நண்பனாக இருந்தது.



குமார் புலி, காட்டிலிருந்து பழங்களையும் காய்களையும் எடுத்துவந்து ஜித்துவுக்குக் கொடுக்கும்.

வீட்டிலிருந்து பூரி, இட்லி போன்றவற்றை குமார் புலிக்கு ஜித்து கொடுப்பான்.

இருவரும் சேர்ந்து விளையாடுவார்கள்.

குளத்தில் குளிப்பார்கள்.

ஒரு நாள், ஜித்து பள்ளிக் கூடத்திலிருந்து அழுதபடியே வந்தான்.

ஜித்துவுக்காக அவன் வீட்டில் காத்திருந்த குமார் புலி, “என்ன ஆச்சு?” என்று கேட்டது.

“ராசு, என்னைக் கேலி பண்ணிக் கிட்டே இருக்கான். நாளைக்கு என்கூட பள்ளிக் கூடத்துக்கு வந்து, அவனை மிரட்டு” என்று கண்களைக் கசக்கினான் ஜித்து.

குமார் புலியும் ஒப்புக்கொண்டது.

அடுத்த நாள், குமார் புலியை அழைத்துக்கொண்டு பள்ளிக் கூடத்துக்குப் போனான் ஜித்து.

புலி அதுவரை பள்ளிக்கூடம் பக்கம் போனது இல்லை.

பள்ளிக்கூடம் எப்படி இருக்குமோ என்று உள்ளுக்குள் உதறல்.

அதைக் காட்டிக்கொள்ளாமல் சென்றது.



பள்ளிக்கூடத்துக்குள் நுழைந்தபோதே, இன்றைக்கு நாள் சரியில்லை என்பது தெரிந்து விட்டது.

காரணம், ஜித்துவின் வகுப்புக்குப் போகும் வழியில், வீட்டுப் பாடம் செய்யாத ஒரு பையனை ஹெட் மிஸ்ட்ரஸ் மிரட்டிக் கொண்டிருந்தார்.

அவர் போட்ட சத்தமே, புலிக்குப் பீதியை ஏற்படுத்தியது.

ஹெட் மிஸ்ட்ரஸ், புலியைப் பார்த்தாலும் கண்டு கொள்ளவில்லை.

அங்கு படிக்கும் பையன்கள், அவ்வப்போது காட்டுத் தோழர்களை அழைத்துவருவது வழக்கம் தான்.

ஒரு முறை, ஒரு பையன் கூட்டிவந்த கரடி, ரொம்பவும் சேட்டை செய்யவே, அதைப் பள்ளி மைதானத்தை 10 முறை சுற்றி வரச் செய்தார்.

இந்தச் செய்தி காட்டுக்குள் பரவி, ஹெட் மிஸ்ட்ரஸ் பெயரைச் சொன்னாலே விலங்குகள் நடுங்கும்.

இது தெரியாமல் பள்ளிக்கூடத்துக்கு வந்து விட்டது குமார் புலி?.

ஒரு வழியாக ஜித்துவின் வகுப்புக்குள் நுழைந்தபோது, ஒரே களேபரமாக இருந்தது.

புத்தகங்களும் பைகளும் பறந்துகொண்டிருந்தன.



புலியைப் பார்த்தும் அட்டகாசம் குறையவில்லை.

புலியிடம் ராசுவை அடையாளம் காட்டினான் ஜித்து.

ராசு, கையில் கூர்மையான பென்சில் வைத்திருந்தான்.

குமார் புலிக்கு பாதி உயிர் போய் விட்டது.

தைரியத்தை வரவழைத்துக்கொண்டு, “நான் ஜித்துவோட ஃப்ரெண்ட். ஜித்துவை மிரட்டினாயா?” என்று கேட்டது.

ராசு, அலட்சியமாக புலியைப் பார்த்து, அதன் மூக்கின் மீதிருந்த முடியை வெடுக்கென இழுத்தான்.

‘வீல்’ என்று கத்தியபடி சுவர் பக்கம் போய் ஒண்டியது புலி.

“டேய்..., இங்க பாருங்கடா புலியை, நம்மையே மிரட்ட வந்திருக்கு” என்று சத்தமாகக் கூறினான் ராசு.

எல்லோரின் கவனமும் புலியின் பக்கம் திரும்பியது.

இரண்டு பேர் அருகில் வந்து, புலியின் வாலைப்பிடித்து இழுத்தார்கள்.

ஒருவன், புலியின் வாயை வலுக்கட்டாயமாகத் திறந்து, வாசனையூட்டப்பட்ட சென்ட் ரப்பரைத் திணித்தான்.

குமார் புலி அந்த ரப்பரைக் கடித்துப் பார்த்தது. நன்றாகவே இல்லை.

துப்பலாம் என்றால், ஒருவன் வாயை அழுத்தி மூடி விட்டான்.

வேறு வழி இல்லாமல் சென்ட் ரப்பரை விழுங்கியது.

ஒருவன், புலியின் முதுகில் ஏறினான்.

இன்னும் ஒருவன், புலியின் வயிற்றில் கிள்ளினான்.

(தொடரும்)

## 12.2014 01 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1420 - இங்கிலாந்தின் ஐந்தாம் ஹென்றிமன்னன் பாரிசை முற்றுகையிட்டான்.
- 1640 - போர்த்துக்கல் ஸ்பெயினிடமிருந்து விடுதலை பெற்றது. நான்காம் ஜொவாவோ மன்னனானான்.
- 1768 - அடிமைகளை ஏற்றிச் சென்ற கப்பல் ஒன்று நோர்வேக்கருகில் மூழ்கியது.
- 1822 - முதலாம் பீட்டர் பிரேசிலின் பேரரசன் ஆனான்.
- 1875 - வேல்ஸ் இளவரசர் (இங்கிலாந்தின் ஏழாம் எட்வேர்ட் மன்னர்) கொழும்பு வந்தார்.
- 1918 - சேர்பிய, குரொவேசிய, சிலவேனிய இராச்சியம் (பின்னர் யூகொஸ்லாவிய இராச்சியம்) அமைக்கப் பட்டது.
- 1924 - எஸ்தோனியாவில் கம்யூனிசப் புரட்சி தோல்வியில் முடிந்தது.
- 1958 - பிரான்சிடமிருந்து மத்திய ஆபிரிக்கக் குடியரசு விடுதலை பெற்றது.
- 1959 - பனிப்போர்: அண்டார்டிக்கா கண்டத்தில் இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தவும் அக்கண்டத்தை அறிவியல் ஆராய்ச்சிக்கு மட்டுமே பயன்படுத்த ஒப்பந்தம் செய்யப்பட்டது.
- 1960 - கொங்கோ அதிபர் பத்திரிசு லுமும்பா இராணுவத் தளபதி மொபுட்டுவினால் கைது செய்யப்பட்டார்.
- 1961 - இந்தோனீசியாவின் மேற்கு நியூ கினியில் மேற்கு பப்புவா குடியரசு அறிவிக்கப்பட்டது.
- 1963 - நாகாலாந்து இந்தியாவின் 16ஆவது மாநிலமானது.
- 1965 - இந்தியாவில் எல்லைக் காவற்படை அமைக்கப் பட்டது.
- 1971 - இந்திய இராணுவம் காஷ்மீரின் ஒரு பகுதியைப் பிடித்தது.
- 1973 - பப்புவா நியூ கினி ஆஸ்திரேலியாவிடமிருந்து சுயாட்சி பெற்றது.
- 1981 - எயிட்ஸ் நோக்கொல்லி அதிகாரபூர்வமாக கண்டறியப்பட்டது.
- 1982 - முதலாவது செயற்கை இருதயம் யூட்டா பல்கலைக்கழகத்தில் பார்னி கிளார்க் என்பவருக்குப் பொருத்தப்பட்டது.
- 1989 - பனிப்போர்: கம்யூனிஸ்ட் கட்சியின் ஏகபோக அதிகாரத்தை அகற்ற கிழக்கு ஜேர்மனி நாடாளுமன்றம் அதன் அரசியலமைப்பைத் திருத்தியது.
- 1989 - பிலிப்பீன்ஸ் அதிபர் கொரசோன் அக்கீனோவை பதவியிலிருந்து அகற்ற எடுக்கப்பட்ட முயற்சி தோல்வியடைந்தது.
- 1991 - பனிப்போர்: உக்ரேன் வாக்காளர்கள் சோவியத்திடமிருந்து உக்ரேன் முற்றாக வெளியேற வாக்களித்தனர.


### பிறப்புகள

- 1954 - மேதா பட்கர், இந்திய சமூக ஆர்வலர்.
- 1963 - அர்ஜுனறணதுங்க, இலங்கையின் முன்னாள் கிரிக்கெட் அணித்தலைவர்.

### இறப்புகள்

- 1825 - முதலாம் அலெக்சாண்டர், ரஷ்யசார் மன்னன் (பி. 1777)
- 1973 - டேவிட் பென்-குரியன், இஸ்ரேலின் முதல் பிரதமர் (பி. 1886)
- 1990 - விஜயலட்சுமி பண்டிட் (பி. 1900)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# கருவாச்சி காவியம்

## வைரமுத்து- 07

...கருவாச்சிய பொண்ணு கேட்டு வந்தனைக்கு சந்தேகப்பட முடியல சடையத்தேவர.

தங்கச்சி பெரிய மூக்கி நாப்பது வருசத்துக்கப்புறம் ஒன் வீட்டு வாசற்படி மிதிக்கிறேன் தாயி.

என் சொந்த மச்சினன் உசுரோட இருந்த காலத்துல உண்டான பகை நம்ம கண்ணுள்ள காலத்துலயே இல்லாமப் போகட்டும்.

இன்னொரு பெறவி பெறக்கப் போறமா? சொந்தபந்தம் இல்லேன்னு போயிருமா? ஏதோ நீ ஒண்ணப் பெத்து வச்சிருக்கா.

நான் ஒண்ணப்பெத்து வைச்சிருக்கேன் சின்னஞ்சிறுசுகள ஒண்ணு சேத்து வச்சிரலாம்னு பாக்குறேன்.

தட்டுல வெத்தல பாக்கு வைச்சுப் பழம் தேங்காயோட சடையத்தேவன் ஒனக்கு சம்பந்தியாகி வந்திருக்கேன்.

ஏதோ காலம் போன கடைசியில கருவாச்சி கையில கஞ்சி குடிச்சுக்கிறேன்.

மருகி நிக்காதே. வாம்மா வந்து தட்ட வாங்கிக்க.


கொட்டத்துல சாணி குமிச்சு அள்ளிக்கிட்டிருந்த பெரிய மூக்கி சடையத் தேவரக் கண்டதும் யாத்தே இது யாருன்னு பதறி வெளக்கமாத்தக் கீழ போட்டு சாணிக்கைய நெஞ்சிலடிச்சு ஒடிப் போயிக் குளுதாணியில கையக் கழுவி வாண்ணேன்னு வாய் நெறையச் சொல்லிட்டுக்கேன்னு அழுது முந்தானையில மூஞ்சி பொத்தி ஒரல கட்டிப்புடிச்சு ஒக்காந்துட்டா.

கோழிக்குச் சோளம் போட்டுக் கொண்டிருந்த கருவாச்சி விசுக்குன்னு உள்ள ஒடி ஒளிஞ்சுபோனா.

நல்லதுல கூடு; இல்ல பொல்லதுல கூடுன்னு நாம நல்லதுல கூடுவோம்.

எம் மகன் கட்டயனுக்கு ஒம் மக கருவாச்சியப் பொண்ணு கேட்டு வந்திருக்கேன். யோசிச்சு நல்ல முடிவு சொல்லு.

சடையத்தேவர் போயிட்டாரு; தட்டும் பழமும் இருக்கு திண்ணையிலயே.



என்னத்த யோசிக்கிறது! ஆம்பிளையில்லாத வீடு.

ஒத்தமாடு பூட்டி ஏர் உழுகிற மாதிரி கடுசாவே கழிஞ்சு போச்சு ஏம் பொழப்பு.

நாளைக்கி ஆக்கிக் போடவும் சொந்தம் வேணும்; தூக்கிப் போடவும் சொந்தம் வேணும். ஆயிரம் பகையிருந்தாலும் ஏம் புருசனுக்கு மச்சினன் தானே சடையத்தேவரு.

இந்த சம்பந்தம் கூடி வந்தா நாப்பது வருசம் பகை தீந்ததாவுமிருக்கும்; இந்தக் கழுதையைக் கரைசேத்ததாவும் இருக்கும். அவ எங்கயோ கண் காணாத தேசத்துல வாக்கப்பட்டு கண்ணக் கசக்கிறதவிட உள்ளூர்லயே இருந்தா நல்லதா இல்லையா? அவளுக்கு ஒரு கஞ்சித் தண்ணின்னா நான் இருப்பேன்.

எனக்கு ஒரு சுக்குத் தண்ணின்னா அவ இருப்பா. ஒண்ணுக் கொண்ணு ஆதரவு.

என்னா ஒண்ணு....

மருமகன நெனச்சாத்தான் கறுச் கறுச் சுன்னு நெஞ்சுல முள்ளுக் குத்துது.

நான் பொத்திப் பொத்திவளத்த புறாக் குஞ்சுக்கு அந்தப் பெராந்துப்பய ஒத்துவருவானா?

அந்தக் கோயில் மாடு கடைசிவரைக்கும் எம் மகளுக்குக் கஞ்சி ஊத்துமா? ஏதோ சாகப்போற நாளையில சடையத் தேவருக்கு நல்ல புத்தி வந்திருச்சேன்னு நாளைக்கி மாலமாத்தி மறுவீடு போனாலும் எம்பிள்ளை கடைசி வரைக்கும் அங்க ஒக்காந்து ஒல வைக்குமா?

(தொருடம்)

# ஆத்ம ஞானத்தைத் தேடி


# கவலைகள் இன்றி வாழ்தல்!

## ஆன்மீகம் 91

...இன்னொரு விடயம்.. நீங்கள் பார்க்கும் அழகான விடயம் எதுவானாலும் வெறும் பார்வையாளராக மட்டுமே இருந்து அதை வகைப்படுத்தி விடமால் ரசியுங்கள். நீங்கள் சூரிய அஸ்தமனத்தையோ ஆசிரமத்திலோ அல்லது உங்கள் ஊரில் வேறு எங்காவதோ பார்த்திருக்கிறீர்களா? நீங்கள் எப்பொழுதாவது நின்று வண்ணங்கள் அற்புதமாக மாறுவதையோ ஒளிக்கதிர்கள் வானத்தில் பரவுவதையோ கவனித்திருக்கிறீர்களா? நம்மில் பலருக்கு ஒன்று சூரியன் அஸ்தமனமாவதே தெரியாது. அல்லது வெறுமனே ஆம் சூரியன் அஸ்தமனம் ஆகிறது; அதனால் என்ன; அது எப்படியும் தினமும்தான் அஸ்தமனமாகிறது; என்போம்.

நான் சொல்கிறேன்... கல்வியறிவு உங்கள் கள்ளங்கபடமற்ற தன்மையைக் கெடுத்து வாழ்க்கையை மந்தமாக்கிவிடுகிறது. சூரிய உதயத்தையோ அல்லது அஸ்தமனத்தையோ பார்ப்பது ஒரு அற்புதமான தியானமாகக் கூடும். அதை உங்களுடைய உலகாயதமான கல்வியறிவைக் கொண்டு பார்க்காமல் நீங்கள் அதன் ஒரு பகுதியாகி அதனுடன் கலந்து விட்டீர்களானால் கொண்டாட்டத்தில் இருக்கும் பிரம்மாண்டமான இந்த பிரபஞ்ச இருப்புத்தன்மையின் சிறு துளியாக நீங்கள் இருப்பீர்கள். பிறகு இயல்பாகவே கொண்டாட்டத்தில் கலந்து கொள்வீர்கள்.

ஆனால், நாம் நமது பெயரளவிலான கல்வி அறிவினால் மந்தமாக்கப்பட்டு விடுகிறோம். உள் பேச்சிற்கும் கவலைக்கும் காரணமான நமது கல்வியறிவு மீண்டும் வார்த்தைக் குவியல்களைத் தவிர வேறில்லை. நாம் நிறைய வார்த்தைகளைச் சேகரித்து வைத்து அவற்றுடனே வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அதனால் நம்மை எதுவுமே ஆச்சரியப்படுவதில்லை. கடவுளே உங்களிடம் வந்துதான் கடவுள் என்று சொன்னாலும் நீங்கள் அதனால் என்ன? என்று சொல்வீர்கள்.



உங்கள் அறிவினால் எல்லாவற்றையும் சாதரணமாக எடுத்துக் கொள்கிறீர்கள்.

உங்களுடைய பெயரளவிலான கல்வியறிவினால் இந்த முழு பிரபஞ்ச இருப்புத்தன்மையையே மிகவும் சாதரணமாக எடுத்துக்கொள்கிறீர்கள்.

இதனால் முழு பிரபஞ்ச இருப்புத்தன்மையுமே தவறவிட்டுவிடுகிறீர்கள். மேலும் மேலும் பேராசையும் கவலையையும் பயத்தையும் மட்டுமே கொடுக்கும் உலக விடயங்களில் பின்னால் ஒடுகிறீர்கள்.

இவைகள் உங்களை உள் மையத்திலிருந்து மேலும் துண்டித்துவிடுகின்றன. அவைகள் உங்களை உள்ளே பார்ப்பதற்கு பதிலாக வெளியே பார்க்க வைக்கின்றன.

அவைகள் உங்களை உங்கள் சொந்த உள் பலத்தைச் சார்ந்திராமல் முழுவதும் வெளியுலக விடயங்களை சார்ந்திருக்குமாறு செய்து விடுகின்றன. அவைகள் உங்களை நிரந்தரமான ஆனந்தத்தில் மையங் கொள்ளவிடாமல் மனச்சோர்விற்கும் சந்தோஷத்திற்கும் இடையே ஊசலாடுமாறு செய்து விடுகின்றன.

(தொடரும்)


பரமஹம்ஸ சுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/கொக்குவில் இந்து ஆரம்ப பா

## சித்தி பெற்று வரலாற்றுச் சாதனை படைத்த மாணவச் செ


யா/ கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையில் 2014 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 153 மாணவர்கள் தோற்றினா
மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துவதுடன் இவர்களின் வெற்றிக்குத் தம்மை அர்ப்பணித்துச் சேவையாற்றிய அதிபர் திரு. பே. தனபாலசிங்கம், து
திருமதி ந.நித்தியானந்தன், திரு. சி.சிவகாந்தி ஆகியோரினதும் தரம் 1 இலிருந்து தரம் 4 வரை கற்பித்த ஏனைய ஆசிரியர்களினதும் பணி என்றும் சிறப்
எமது மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| க.சுரபினி | தி.திருமகள் | மு.பிரவீனா | இ.தசிகா | ச.ரோபிகன் | கே. கிஷாங்கி | ச.தனுஷியன் | அ.அருளகன் |
| 186 | 186 | 183 | 180 | 179 | 178 | 177 | 176 |



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இ.பாமிலா | சி.ஹரிவிஷ்னு | க.பமித்திரா | பா.மஹிஷா | அ.மதுரா | சு.ஹரிப்பிரசாத் | க.விஸ்னுவரன் | ப.விஸ்ணுகா |
| 173 | 172 | 172 | 172 | 172 | 171 | 171 | 171 |




| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| வெ.அபிநயா | ந.வைஷ்ணவி | ஆ.அபிஷாலினி | த.அபிசேக் | உ.கிருபரன் | கி.பிரணவன் | க.நவிந்தன் | ச.தஸ்மினா |
| 168 | 167 | 167 | 166 | 166 | 165 | 165 | 164 |



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஆ.நிருஸ்ஷா | அ.ரக்ஷிகா | க.வைஸ்ணவி | வி.கௌரி | லி.திபிஜா | ச.தனுஸ்ராஜ் | யோ.சானுஷன் | ஜெ.பிருந்தா |
| 160 | 160 | 160 | 159 | 159 | 158 | 157 | 157 |



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ந.ராகவன் | சா.கஜநாத் | பா.கஜாகரன் | ஜ.ஜானுஷா | பு.நிலக்ஸன் | கு.ரிலக்ஷனா | த.அஜந்தன் | ஸ்ரீ.காண்டீபன் |
| 154 | 154 | 153 | 152 | 152 | 152 | 151 | 151 |



யா/கொக்குவில் இந்து
புலமைப்பரிசில் பரீட்சை
மாணவர்களுக்கான கெ


இடம்:- சுப்பிரமணியம் ம
காலம்:- 2014.12.01 தி
நேரம்:- முற்பகல் 9.
தலைவர்
திரு.பேரம்பலம் தனபாலசிங்கம் (
பிரதம விருந்தி
செல்வி ஞானலோஜினி சிவஞானம் (சட்
(பழைய மாணவி யா/ கொக்குவில்
சிறப்பு விருந்தி
திரு. தம்பையா அழகரத்தினம் அவ
(யா/ கொக்குவில் இந்து அ
திருமதி செல்வராணி சகாதேவன் அவ
(யா/ கொக்குவில் இந்து அ
**தங்களை அன்புடன் அழைக்**
**பா**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# டசாலை புலமைப் பரிசில் பரீட்சை -2014

## சல்வங்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

இதில் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்றுச் சித்தியடைந்த 74 மாணவர்களையும் (48.37%) 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 77
5 இல் கற்பித்த ஆசிரியர்களான திரு. வே. அன்பழகன் , செல்வி ஐ. வனஜமலர், திருமதி. ச.தேவதாஸ், திருமதி ந.தயானந்தன்,
றவும் மற்றும் பல்வேறு வகையிலும் உதவி புரிந்த பாடசாலைச் சமூகத்தினர் அனைவரையும் அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துவதுடன்



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ..கானா 176 | ப.திலக்ஷன் 175 | த.சுஜீவன் 175 | சு.டிலக்ஷன் 174 | ச.ஜனார்த்தனன் 173 | அ.ஹம்ஷிகா 173 | ஜோ. கிஷேன் கவிஷ்க 173 | உ.கஜிதா 173 |
| ரவி..குமார் 170 | ர.சஞ்சயன் 169 | கோ.வேணுதர்சன் 169 | க.அஜிலன் 169 | ஜெ. டினுஷன் 169 | க.அர்ச்சனா 169 | ம.டிலோசன் 168 | ச.அனுசிகா 168 |
| ..சதுர்ஷன் 163 | ட.சானுஜா 163 | த.பிரதீஷன் 162 | சி.வரகுணன் 162 | ந.பிரணவி 160 | ஜெ.கலையரசன் 160 | வி.தனுப்பிரியன் 160 | ச.யதுர்சன் 160 |
| சி.சாருஜா 15. | வ.நிருஷினி 156 | இ.கிதுர்ஷா 156 | மு.சஞ்சீவினி 156 | சி.திவ்வியா 156 | சு.சுவேதனன் 155 | அ.அகீபன் 155 | சு.சுலஸ்சிகா 155 |
| ..கவிந்தன் 150 | ஜெ.பபிசாலினி 150 | | | | | | |



ஆரம்ப பாடசாலை
..யில் சித்தியடைந்த
..ளரவிப்பு விழா- 2014
..ாலதி மண்டபம்
..ங்கட்கிழமை
..00 மணி

..வித்தியாலய முதல்வர்)
..னர்
..த்தரணி, பிரசித்த நொத்தாரிசு)
..இந்து ஆரம்ப பாடசாலை)
..னர்
..கள் (ஓய்வு நிலை அதிபர்)
..ரம்ப பாடசாலை)
..வர்கள் (ஓய்வு நிலை அதிபர்)
..ரம்ப பாடசாலை)
..ங்கின்றோம்.
..டசாலைச் சமூகம்.

Congratulations

வாழ்த்துவோர்:-

புலமைப்பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் பெற்றோர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுப் போர்முறை மத்திய கிழக்குக்கு பொருந்துமா?

ஆயுதக் குழுவொன்றை முற்றாக அழிப்பதன் மூலமோ அல்லது இராணுவ வெற்றியை நிலைநாட்டுவதன் மூலமோ வெற்றி கொள்ளப்படும் எந்தவொரு யுத்தமும் ஒரு ஆட்சியை சிறந்த வழியில் நடத்துவதற்கான வழியாக இருக்காது.

**இவ்வாறு The oxonion Globalist என்னும் ஆய்வுச் சஞ்சிகையில் Siddharth Venkatarmakrishnan எழுதியுள்ள கட்டுரையின் தமிழாக்கம்.**

மிக நீண்டகால யுத்தம், கிளர்ச்சி, இராணுவ குழுக்கள், கெரில்லாக்கள் மற்றும் தற்கொலைக் குண்டுத்தாரிகள் போன்றவர்கள் அரச படைகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். பல்வேறு இன மற்றும் மத பிரிவுகளைக் கொண்ட ஒரு நாட்டிலேயே இது இடம்பெற்றது.

அரச படைகளும் பயங்கரவாதிகளும் அப்பாவிப் பொதுமக்களுக்கு எதிராக பல்வேறு வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிட்டன. இவையெல்லாம் இஸ்லாமிய நாடொன்றில் இடம்பெறவில்லை. இது இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தமே ஆகும்.

1983 இல் இலங்கையில் வாழ்ந்த சிங்கள இனத்தவருக்கும் தமிழ் மக்களுக்கும் இடையில் ஆரம்பமான உள்நாட்டு யுத்தமானது பல பத்தாயிரக்கணக்கான உயிர்களைக் காவு கொண்டது. 1983 இற்குப் பின்னரான சில ஆண்டுகளில், இந்தியாவின் பிரதமர்களான இந்திரா மற்றும் ராஜீவ் காந்தியின் அரசாங்கங்கள் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உட்பட சில தமிழ் இளைஞர்களுக்கு ஆயுதங்களை வழங்கியதன் மூலம் இவர்கள் கெரில்லா யுத்த முறைமையிலிருந்து மரபு வழி யுத்தத்திற்கு மாறுவதற்கான ஒரு வாய்ப்பு வழங்கப்பட்டது.

இந்திய அமைதி காக்கும் படை என்கின்ற பெயரில் 1980களில் இந்தியப் படைகள் இலங்கைக்கு அனுப்பப்பட்டனர். ஆனால், இலங்கையில் அமைதியை ஏற்படுத்தும் நோக்கில் இந்தியப் படைகள் அனுப்பப்பட்ட போதிலும், இது மோதல்கள் மேலும் அதிகரிப்பதற்குக் காலாகக் காணப்பட்டது.

இந்நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பானது இந்திய அமைதி காக்கும் படை மற்றும் இலங்கை இராணுவம் ஆகிய இரு தரப்பினருடனும் யுத்தத்தில் ஈடுபட்டது. இந்த யுத்தத்தின் விளைவால் இலங்கை வாழ் மக்கள் பாதிக்கப்பட்டனர். இலங்கையில் கடமையில் ஈடுபடுத்தப்பட்ட இந்திய அமைதி காக்கும் படையானது பாலியல் வன்புணர்வுகள் உட்பட பல்வேறு போர்க் குற்றங்களில் ஈடுபட்டதாக இன்றளவும் குற்றம் சுமத்தப்படுகிறது.

தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டிருந்த முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி மீது வெற்றிகரமாகத் தற்கொலைக் குண்டுத்தாக்குதலை மேற்கொண்ட தேன்மொழி இராஜரட்ணம் இந்திய அமைதி காக்கும் படையினரால் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டிருந்தார்.

மே 2009 தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் மரணத்துடன் இலங்கையில் தொடரப்பட்ட உள்நாட்டு யுத்தம் முடிபிற்குக் கொண்டு வரப்பட்டது. ஆனால், இன்னமும் இலங்கைத் தீவில் இயல்புநிலை கொண்டு வரப்படவில்லை.



போரின் இறுதிக் கட்டத்தில் இலங்கை இராணுவத்தினரால் பிரபாகரனின் 12 வயதான மகன் உயிருடன் பிடிக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு பின்னர் படுகொலை செய்யப்பட்ட காட்சிகள் 2013 இல் வெளியிடப்பட்டன.

இதற்கு முன்னர், 2011 இல் சனல் 04 தொலைக்காட்சி சேவையின் காணொலி ஒன்று வெளியிடப்பட்டது. இக்காணொலியானது இலங்கைத் தீவில் இடம்பெற்ற பல்வேறு போர்க்கால குற்றங்களை சாட்சியங்கள் நிரூபித்திருந்தது. இதில் புலம்பெயர் தமிழர்களின் பங்களிப்பு மிகவும் முக்கியமானதாகும். பிரான்சின் லாச்சப்பேல் என்கின்ற இடத்தில் காணப்படும் பெரும்பாலான இலங்கைத் தமிழர்களின் வர்த்தக நிலையங்களில் பிரபாகரனின் ஒளிப்படத்தைக் காணலாம். பாரிசின் பெரும்பாலான இடங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான பல்வேறு காட்சிகளைக் காணலாம்.

இலங்கையின் உள்நாட்டுப்போர் முடிவடைந்தமை தொடர்பில் ஒரு தீர்மானத்தை எட்டுவதும் அதனை நாம் தற்போதைய பிரச்சினைக்காகப் பிரயோகிப்பதும் யோசிக்க வேண்டிய விடயமாகும். தனது தீவிலிருந்து பயங்கரவாதத்தை ஒழித்த முதலாவது நாடாகத் தனது நாடே காணப்படுவதாக இலங்கை அரசாங்கம் புகழுரைத்து வருகிறது. அரச பயங்கரவாதம் என்பதை நாம் கருத்திலெடுக்காவிட்டால் இலங்கை அரசாங்கம் கூறுவது உண்மைதான்.

ஆனால், ஈராக்கிய அரசாங்கமும் இலங்கையைப்போல் செயற்படும் எனக் கற்பனை செய்வது கடினமானதாகும். மத்திய கிழக்கின் எல்லைகள் விரிவுபட்டதாகும். ஆனால், இலங்கைக்கு கடல் வழியாக அல்லது வான் வழியாக மட்டுமே செல்ல முடியும். இதற்கும் மேலாக இலங்கையின் சிறுபான்மையினக் குழுக்களின் ஒன்றான தமிழ்மக்களை விட தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு வேறெந்த சமூகமும் ஒருபோதும் ஆதரவளிக்கவில்லை. தமிழீழ விடுதலைப்புலிகளின் மிதவாதச் செயற்பாட்டால் இவர்கள் புறந்தள்ளப்பட்டனர். குறிப்பாக ராஜீவ் காந்தியின் படுகொலையானது விடுதலைப் புலிகள் மீதான மக்களின் அபிப்பிராயத்தைத் தோல்வியுறச் செய்தது. ஆகவே, இவ்வாறானதொரு நிலையில் இலங்கை தனது நாட்டில் பயங்கரவாதத்தை ஒழித்துவிட்டதாகத் தம் பட்டம் அடிப்பது ஏற்றுக்கொள்ள முடியாததாகும்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் செயற்பாடுகள் பிரபலம் பெற்றிருக்கவில்லை. புலம்பெயர் தமிழ் சமூகத்தினர் விடுதலைப்புலிகளுக்கு தமது ஆதரவையும் தமிழீழத் தாயகத்திற்கான தமது ஆதரவையும் இன்றளவும் வழங்கி வருகின்ற போதிலும் மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளில் இடம்பெறும் சம்பவங்கள் ஊடகங்களில் முதன்மைப்படுத்தப்படுவது போன்று தமிழர்களின் பிரச்சினைகள் உலகின் கவனத்தை அவ்வளவாக ஈர்க்கவில்லை.

இலங்கையில் 21 ஆவது நூற்றாண்டில் முடிபுக்குக் கொண்டுவரப்பட்ட யுத்தத்தின் விளைவுகளை சமூக ஊடகங்கள் பிரதிபலிக்கவில்லை. இந்த ஊடகங்கள் 1980 மற்றும் 1990களில் தமிழ் மக்களின் பிரச்சினையை எவ்வாறான சித்தார்ந்தத்துடன் நோக்கினவோ அதேபோன்றே இன்றளவும் கருதுகின்றன.

பதிலி யுத்தங்கள் மற்றும் ஆயுதக் குழுக்களுக்கு எதிரான உள்நாட்டு யுத்தங்களிலிருந்து நாங்கள் சில பாடங்களைக் கற்றுக் கொள்ள முடியும்.

இந்தியா பிராந்திய சக்தியாக உள்ளதையும் இந்தியத் தமிழர்கள் சுயநிர்ணய ஆட்சியைக் கோரிவிடுவார்களோ என்கின்ற அச்சத்தையும் கருத்திற்கொண்டு இந்தியாவின் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியின் அரசாங்கமானது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஏனைய தமிழ்த் தேசியவாத ஆயுதக்குழுக்களுக்கும் 1980களில் ஆயுதப் பயிற்சிகளையும் ஆயுதங்களையும் வழங்கியது.

இலங்கை அரசாங்கத்தால் தமிழீழ விடுதலைப்புலிகளின் நிலைகள் முற்றுகையிடப்பட்டபோது இந்தியா முற்றுகையிடப்பட்ட விடுதலைப்புலிகளுக்கு உணவு மற்றும் மருத்துவ உதவிப் பொதிகளை விமானம் மூலம் வீசியது. இந்திரா காந்தியின் இத்தகைய நடவடிக்கையானது இவரது மகன் பிரதமர் ராஜீவ் காந்தி தமிழர்கள் வாழும் இலங்கையின் வடக்கைக் கைப்பற்றுவதற்கும் இந்தியாவின் பிராந்திய அதிகாரத்தை மேலும் விரைவுபடுத்துவதற்காக இலங்கைக்கு இந்திய அமைதி காக்கும் படையை அனுப்புவதற்கான அனுமதியை வழங்கியது.

இலங்கை அரசாங்கமானது இதனைச் சாதகமாகப் பயன்படுத்தி தென் இலங்கையில் சிங்கள தேசியவாதிகளுக்கு எதிரான யுத்தத்தில் தனது படைகளைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பை வழங்கியது.

இலங்கைக்கு இந்திய அமைதி காக்கும் படை அனுப்பப்பட்டதன் பின்னர் பெரும்பாலான தமிழ்க்குழுக்கள் தமது ஆயுதங்களை ஒப்படைத்த போதிலும் தமிழீழ விடுதலைப்புலிகள் இதற்கு உடன்படவில்லை. இதனால் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இந்தியப் படைகளுக்குமிடையிலான மோதல் தீவிரமடைந்தது. இலங்கை அரசாங்கம் இந்திய அமைதி காக்கும் படைக்கெதிராக விடுதலைப்புலிகள் அமைப்பால் மேற்கொள்ளப்பட்ட யுத்தத்தில் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவு வழங்குவதாக குற்றம் சுமத்தப்பட்டது. இருப்பினும் இந்தியாவின் புலனாய்வுத் தோல்விகளால் இந்த யுத்தம் தவறாக வழி நடத்தப்பட்டது. இந்தியப் புலனாய்வின் பலவீனத்தால், இந்திய அமைதி காக்கும் படைக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமான யுத்தத்தில் இந்தியத் தரப்பு அதிக இழப்பைச் சந்தித்தது.

1990 இல் இந்தியப் படை முற்றாக இலங்கையை விட்டு வெளியேறியது. இதில் பல பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர். பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டனர். உளவியல் பாதிப்பிற்கு உள்ளாகினர், வீடிழந்தனர். இதற்கு ஒரு ஆண்டின் பின்னர், இந்திரா காந்தியின் மகனான ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டார்.

உள்நாட்டுப் போரை மகிந்த ராஜபக்ச வெற்றி கொண்டதன் பின்னர் இவர் மாபியா அரசை நிர்வகித்து வருகிறார் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இவர் அரசியல் சதிகள் பல அரங்கேறுவதற்குக் காரணமாக உள்ளார் எனவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளார். இவர் பல வழிகளில் நோக்கில், பிறிதொரு அசாட் எனக் கூறலாம்.


ஆயுதக்குழுவொன்றை முற்றாக அழிப்பதன் மூலமோ அல்லது இராணுவ வெற்றியை நிலைநாட்டுவதன் மூலமோ வெற்றி கொள்ளப்படும் எந்தவொரு யுத்தமும் ஒரு ஆட்சியை சிறந்த வழியில் நடத்துவதற்கான வழியாக இருக்காது என்பதும் இது நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்துவதற்கான மிக வேகமான மிகவும் வினைத்திறனுள்ள வழியாகவும் இருக்கும் என்பதை இலங்கையின் உள்நாட்டுப்போரிலிருந்து கற்றுக் கொள்ளப்படும் பாடமாகும்.

-நித்யபாரதி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றமில்லை

## அவுஸ்.அரசு அறிவிப்பு



ஆட்கடத்தல் வர்த்தகத்தை தடுத்து நிறுத்த இலங்கையுடன் தொடர்ந்தும் இணைந்து செயற்பட போவதாக அவுஸ்திரேலிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அவுஸ்திரேலிய குடிவரவு குடியகல்வு அமைச்சர் ஸ்கொட் மொரிசனை மேற்கோள்காட்டி இலங்கையில் உள்ள அந்நாட்டு உயர்ஸ்தானிகராலயம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமான முறையில் எந்த விதத்திலும் யாரும் அவுஸ்திரேலியாவுக்கு பிரவேசிக்க முடியாது. அப்படி வரும் எந்த நபராக இருந்தாலும் கைது செய்யப்படுவார். கைது செய்யப்படும் நபர்கள் பப்புவா நியூகினியா அல்லது நவுறு தீவுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள். அவர்களுக்கு எப்போதும் அவுஸ்திரேலியாவில் குடியுரிமை வழங்கப்படமாட்டாது.

சட்டவிரோத குடியேற்றவாசிகள தொடர்பான அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் கொள்கையில் எந்த மாற்றமும் ஏற்படாது என ஸ்கொட் மொரிசன் தெரிவித்ததாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (இ-5)

# ரணிலை பிரதமராக்க எவ்வாறு மைத்திரிபாலவினால் முடியும்?



## சம்பிக்க கேள்வி

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியானால் எவ்வாறு ரணில் விக்ரமசிங்கவை பிரதமராக நியமிப்பார் என்று ஜாதிக ஹெல உறுமய கேள்வி எழுப்பியுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையாக இருக்கும் போது இது சாத்தியமற்றது என அவர் தெரிவித்துள்ளார்.

அவிசாவளையில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய ஹெல உறுமயவின் செயலாளர் பாட்டலி சம்பிக்க ரணவக்க, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை ஒழிப்பு விடயத்தில் ஜாதிக ஹெல உறுமயவினால் பொதுக்கொள்கையை ஏற்படுத்த முடிந்திருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-5)

# பாகிஸ்தானின் உளவாளியான இலங்கையருக்கு தண்டனை

## 5 ஆண்டு சிறை விதித்தது பூந்தமல்லி சிறப்பு மன்று

(கொழும்பு)

சென்னையில் கைது செய்யப்பட்ட இலங்கையரான பாகிஸ்தான் உளவாளி ஜாகீர் உசேனுக்கு 5 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பூந்தமல்லி சிறப்பு நீதிமன்றம் கடந்த வெள்ளிக்கிழமை இந்த தீர்ப்பையளித்தது.

இலங்கையின், கண்டியைச் சேர்ந்த 37 வயதான முகம்மது ஜாகீர் உசேன், பாகிஸ்தான் ஐ.எஸ்.ஐ.எஸ் உளவாளி என்ற சந்தேகத்தின் பேரில் தமிழக கியூ பிரிவு பொலிஸாரினால் சென்னையில் வைத்து கடந்த ஏப்ரல் மாதம் ,29 ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

பொலிஸார் செய்த விசாரணைகளின் போது அவர், துணி வியாபாரம் செய்வதாக போலி கடவுச்சீட்டு மூலம் தமிழகத்துக்குள் ஊடுருவியுள்ளதாக விசாரணைகளிலிருந்து தெரியவந்தது.

அத்துடன், கள்ள நோட்டுகளைப் புழக்கத்தில் விடுவது, வெளிநாட்டுத் தூதரகங்கள், அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள், பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களைப் புகைப்படங்கள் எடுப்பது போன்ற செயல்களில் ஈடுபட்டிருப்பது தெரியவந்தது.

குறிப்பாக, சென்னையில் உள்ள அமெரிக்கத் துணைத் தூதரகம், பெங்களூரில் உள்ள இஸ்ரேல் நாட்டு துணைத் தூதரகம் ஆகியவற்றின் மீது தாக்குதல் நடத்துவதற்காகப் புகைப்படம் எடுத்திருப்பதும், அந்தப் புகைப்படங்களை சில மாதங்களுக்கு முன்பு இலங்கையில் உள்ள பாகிஸ்தான் தூதரக அதிகாரிகளிடம் வழங்கியிருப்பதும் தெரியவந்தது.

கொச்சி கடற்படைத் தளம், விசாகப்பட்டினம் கடற்படைத் தளம் ஆகியவற்றைப் பற்றிய தகவல்களைச் சேகரித்ததாக உசேன் பொலிஸாருக்கு அளித்த வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளார். இந்தத் தளங்களைக் குண்டு வைத்துத் தகர்க்கும் நோக்கத்தோடு தகவல்களைச் சேகரித்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

மேலும், அவர் தனது வாக்கு மூலத்தில் இலங்கையிலுள்ள பாகிஸ்தான் தூதரக அதிகாரிகள் அமீர் ஜுபைர் சித்திக், பாஸ் ஆகியோரது உத்தரவின்பேரிலேயே இந்தத் தகவல்களைச் சேகரித்ததாகவும் கூறியிருந்தார்,

உள்நாட்டுப் பாதுகாப்புக்கும் அமைதிக்கும் பங்கம் விளைவிக்கும் வகையில் உசேன் சதித்திட்டங்களைத் தீட்டியிருப்பதாகக் குற்றம்சாட்டி கியூ பிரிவு பொலிஸார், அவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்தனர்.

ஜாகீர் உசேனின் நடவடிக்கைகளில் பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ.எஸ் இற்கு பங்கு இருப்பதால் இந்த வழக்கு தேசியப் புலனாய்வுப் பிரிவு பொலிஸாருக்கு மாற்றப்பட்டது.

தேசியப் புலனாய்வுப் பிரிவு பொலிஸார், ஜாகீர் உசேனின் கூட்டாளிகள் முகமது சலீம், சிவபாலன், ரபீக் ஆகியோரை கைது செய்தனர்.

இதுதொடர்பான வழக்கு விசாரணை பூந்தமல்லியில் உள்ள சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்றது.

இந்த வழக்கு கடந்த வியாழக்கிழமை விசாரணைக்கு வந்த போது "நான் பாகிஸ்தான் உளவாளிதான், இலங்கையில் உள்ள பாகிஸ்தான் தூதரக அதிகாரிகள் இரண்டு பேரின் தூண்டுதலின் பேரில் இந்தியாவின் இறையாண்மை, பொருளாதாரத்தைச் சீர்குலைக்கும் செயலில் ஈடுபட்டேன்" என நீதிபதி மோனியிடம் ஜாகீர் உசேன் குற்றத்தை ஒப்புக் கொண்டார்.

இதைத் தொடர்ந்து இந்த வழக்கில் கடந்த வெள்ளிக்கிழமை தீர்ப்பு கூறப்பட்டது. குற்ற வாளியான ஜாகீர் உசேனுக்கு 5 ஆண்டு சிறைத் தண்டனையும், 2 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதிக் கப்பட்டது. அபராதத்தைக் கட்டத் தவறினால் கூடுதலாக 2 மாதம் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் நீதிபதி தனது தீர்ப்பில் தெரிவித்தார். (இ-5)

# இன்று ஒரு தகவல்

## காலநிலையை அறிவிக்கும் விலங்குகள்

துருக்மீனியாவில் அஷ்காபாத் நகரத்தில் ஒரு புவியியல் விஞ்ஞானி இருந்தார். அவர் ஒரு நாய்க்குட்டி வளர்த்தார். ஒரு நாள் முன்னிரவு ஒரு மேசைக்கு முன்னால் உட்கார்ந்து அந்த விஞ்ஞானி ஏதோ கணக்குப் போட்டுக் கொண்டிருந்தார்.

அவருடைய குழந்தை தொட்டிலில் தூங்கிக் கொண்டிருந்தது. அந்த நாய்க்குட்டியும் ஒரு மூலையில் படுத்து தூங்கிக் கொண்டிருந்தது. ஒரே அமைதி. அந்த நேரத்தில் திடீரென்று அந்த நாய்க்குட்டி துள்ளியெழுந்தது. நேராக அந்தக் குழந்தையிடம் ஓடியது.

அந்தக் குழந்தையை அது போட்டிருந்த சட்டையுடன் சேர்த்து கௌவிக் கொண்டு வாசல் பக்கமாக ஓடியது.

நாய்க்குட்டி குழந்தையை கௌவி தூக்க முடியுமா என்ற சந்தேகம் உங்களுக்கு வரலாம்.

நீங்க நம்ம ஊர் நாய்க்குட்டியையே பார்த்துப் பழக்கப்பட்டு விட்டீங்க. அதனால் நம்புவதற்கு சிரமப்படுகிறீர்கள். அந்த ஊரிலெல்லாம் வலிமையான பெரிய நாய்கள் உண்டு.

விஞ்ஞானி அதைப் பார்த்துவிட்டார். உடனே அந்த நாய்க்கு வெறி பிடித்துவிட்டது என்று முடிவு செய்துவிட்டார். தன்னுடைய கைத்துப்பாக்கியை எடுத்துக் கொண்டு ஓடிவந்தார். அவர் வெளியே வந்து நாய்க்குட்டி எங்கேயென்று தேடினார். அந்த நேரத்தில் அவருக்கு ஒரு அதிர்ச்சி காத்திருந்தது.

ஆம், அவருடைய வீடு பூமியதிர்ச்சி காரணமாக இடிந்து விழுந் தது. இப்படி பூமி அதிர்ச்சி உண்டாகப் போகிறது என்பது அந்த நாய்க்கு முன்பே தெரிந்து விட்டது. அதுதான் அந்தக் குழந் தையைத் தூக்கி கொண்டு வெளியே ஓடி வந்திருக்கிறது. அதன் மூலமாக அந்த குடும்பத்தையே காப்பாற்றியிருக்கிறது.

இந்தச் சம்பவம் நடப்பதற்கு மூன்று நாட்களுக்கு முன்பே சில பிராணிகளுக்கு இப்படி நடக்கப் போகிறது என்பது தெரிந்திரு க்கிறது. ஆமாம். அந்த நகரத்தில் மூன்று நாட்களுக்கு முன்பே பாம்பு, பல்லியெல்லாம் வளையை விட்டு வெளியே வந்து விட்டன.

அதேபோல் அங்கேயிருந்த புறாவெல்லாம் பறந்து போய்விட்டதாம். இதேபோல்... யூகோஸ்லாவியாவிலுள்ள ஒரு நகரத்தில் மிருகக் காட்சி சாலையொன்று இருந்தது. அங்கு ஒரே கூச்சல் குழப்பம். அங் கிருந்த யானை,புலி,கரடி,பறவையெல்லாம் கத்த ஆரம்பித்தன. நீர்யானை அதற்கென்று போடப்பட்டிருந்த தடு ப்பை தாண்டிக் குதித்து வெளியே வந்துவிட்டது. மறுநாள் தான் எல்லோருக்கும் விடயம் புரிந்தது. அடுத்த நாள் காலையில் அங்கே பூமியதிர்ச்சி உண்டாகிவிட்டது. இப்பொழுது என்ன நினைக்கிறீர்கள்?

இவற்றையெல்லாம் விலங்குகள் எப்படி முன்கூட்டியே புரிந்து கொள்கின்றன? அதுதான் படைப்பின் இரகசியம். அதைக் கண்டு பிடிப்பதற்குத்தான் மனிதன் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கி றான். விஞ்ஞானிகளின் ஆராய்ச்சியெல்லாம் இருக்கட்டும். வீட் டுக்குள்ளேயே சில ஆராய்ச்சி செய்து பாருங்களேன். இப்பொழுது மழை வருமா வராதா என்று தெரிந்து கொள்ள வேண்டுமா? உடனே ஒரு பூனைக்குட்டிக்குப் பின்னால் போய் நின்று அது என்ன செய்கிறது என்று கவனியுங்கள். பூனைக்குட்டி தன் பாதத்தினால் சுவரில் கீறிக் கொண்டிருக்கும். அப்படிக் கீறினால் மழை வரும்.

சிலசமயம் பூனைக்குட்டி மல்லாந்து படுத்துக் கொண்டு பாதத்தை உயரே தூக்கும். அப்படியும் இப்படியும் புரளும். இப்படிச் செய்தால் அன்றைக்கு மழை இருக்காது. பறவைகள் - பிராணி கள் போன்றவற்றின் நடவடிக்கைகளை பார்த்துவிட்டு அதை யெல்லாம் அடிப்படையாக வைத்துத்தான் காலநிலையை கண்டுபிடிக்கும் கருவிகளை கண்டுபிடித்திருக்கிறார்கள்.

சில நேரங்களில் வாத்து தன்னுடைய அலகை தனது இறகுகளில் புதைத்திருக்கும். அப்படிச் செய்தால் குளிர்காலம் வரப்போகிறது என்று அர்த்தம். பருவநிலை குளிராக மாறப் போகிறது என்பதற்கு இதுதான் அறிகுறி. சிட்டுக்குருவி சில நேரங்களில் புழுதியில் விழுந்து புரளும். சிறகுகளை படபடவென்று அடித்துக் கொள்ளும். அப்படிச் செய்தால் மழை வரப்போகிறது என்று அர்த்தம்.

ஒன்று மட்டும் நாம் நன்றாக தெரிந்து கொள்ள வேண்டும். இயற்கையின் சீற்றம் என்று சொல்கிறோமல்லவா! இயற்கை ஏன் நம்மீது கோபப்படுகிறது. இயற்கையை நாம் அனுசரித்துப் போவதில்லை. அதனால் கோபப்படுகிறது. காடுகளை அழிக்கக்கூடாது. விலங்குகளை கொல்லக்கூடாது. இயற்கையின் சமநிலைமையை கெடுக்கக்கூடாது. அதைப்புரிந்து கொண்டு வாழ்ந் தால் பூமியும் நடுங்காது. நாமும் நடுங்க வேண்டிய அவசியமில்லை. ஒருத்தர் சாராயக் கடைக்குப் போய் நிறையக் குடித்தார். அதன்பின்னர் சொன்னார். இது ரொம்ப அற்புதமான சரக்கு போலிருக்கிறது. உள்ளே போனவுடன் இந்த பூமியே நடுங்குவது போலிருக்கிறது என்றார். இதற்கு கடைக்காரர் சொன்னார் நீங்கள் குடித்தது வெறும் தண்ணீர் தான். ஆனால் இப்ப ஏற்பட்டிருப்பது பூமி அதிர்ச்சி என்றார்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சை-2014
# மாதிரி வினாத்தாள் - கிழக்குமாகாணம்

**தமிழ் மொழியும் இலக்கியமும்** **மூன்று மணித்தியாலம்**

## பகுதி I
## எல்லா வினாக்குளுக்கும் விடை தருக.

**பின்வரும் வாக்கியங்களில் தடித்த எழுத்தில் காணப்படும் சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1. ஆய்மணிப் பைம்பூண் அலங்குதாரக் கோதையை ... என்ற வரியின் பூண் என்ற சொல் லின் பொருள்
   1. கழல் 2. ஆடை 3. ஆபரணம் 4. காப்பு
2. கொண்டானின் துன்னிய கேளிர் பிறரில்லை. இங்கு கொண்டான் என்பதன் பொருள்
   1. கணவன் 2. நண்பன் 3. உறவினன் 4. அயலவன்
3. மாணவர்கள் சுயாதீனமாகச் செயற்பட்டார்கள். சுயாதீனம் என்பதன் எதிர்ச்சொல்
   1. பலவீனம் 2. சுகவீனம் 3. கவனயீனம் 4. பாராதீனம்
4. அரிது அரிது மானிடராதல் அரிது என்பதில் அரிது என்பதன் எதிர்பொருட் சொல்
   1. இலகு 2. எளிது 3. புதிது 4. இனிது
5. விதவைகளுக்கு வாழ்வாதார உதவிப்பணம் வழங்கப்பட்டது. விதவை என்பதன் எதிர்ப்பாற் சொல்.
   1. கணவன் 2. புனிதன் 3. தபுதாரன் 4. எசமானன்

**பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

6. பனையின் இளையது வடலி, கமுகின் இளையது.
   1. பிள்ளை 2. குட்டி 3. ஓலை 4. நாற்று
7. தோடம்பழத்தின் உள்ளீடு சுளை , கற்றாளையின் உள்ளீடு
   1. சோறு 2. பருப்பு 3. அரிசி 4. மணி
8. சிலை, தனுசு, சாபம் ஆகிய பல சொற்கள் குறிக்கும் ஒரு பொருள்
   1. வில் 2. இராசி 3. விக்கிரகம் 4. அம்பு
9. வெளிப்படையாகப் புகழ்ந்தும் மறைமுகமாக இகழ்ந்தும் பாடுவது
   1. சிலேடை 2. மடக்கு 3. அங்கதம் 4. வசைக்கவி
10. மெமறி **(Memory)** என்பதற்குரிய தமிழ்க் கலைச்சொல்
    1. இறுவெட்டு 2. வன்பொருள் 3. மென்பொருள் 4. நினைவகம்

**பின்வரும் வினாக்களுக்கு பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

11. நாக்கு வளைத்தல் என்ற மரபுத் தொடரின் பொருள்
    1. அடக்கமின்றிப் பேசுதல் 2.பழித்தல்
    3. வாயில் வந்தபடி பேசுதல் 4. குறை சொல்லுதல்
12. அடிமையாகக் கொள்ளுதல் என்ற பொருள் தரும் மரபுத் தொடர்
    1. அடியொற்றுதல் 2. கழுத்தில் கட்டுதல்
    3. ஆட்கொள்ளுதல் 4. அடியிடுதல்
13. கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தது போல என்ற உவமைத் தொடருக்கு ஒப்பான பிறிதோர் தொடர்.
    1. கிணறுவெட்ட பூதம் கிளம்பிளது போல
    2. தேடிய பூண்டு காலில் சிக்கினாற் போல
    3. கையில் வெண்ணெயிருக்க நெய் தேடி அலைந்தாற் போல
    4. பழம் நழுவிப் பாலில் விழுந்தாற் போல
14. பின்வருவனவற்றுள் இணைமொழியாக அமைவது.
    1. புத்தம்புதிய 2. நல்லநல்ல 3.ஈடும்இணையும் 4. வெட்டவெளி
15. அவள் நன்றாகப் படித்தாள் சித்தியவில்லை. இவ்வாக்கியங்களை இணைக்கப் பொருத்தமற்ற இணைப்பிடைச் சொல்
    1. அதனால் 2. என்றாலும் 3. ஆனால் 4. இருப்பினும்
16. பின்வருவனவற்றுள் பாரசீக மொழிச் சொல்லாக அமைவது.
    1. சால்வை 2. வத்தாளை 3. துட்டு 4. அட்டிகை
17. ஆலி, ஆழி, ஆளி என்ற சொற்களின் பொருள்கள் முறையே
    1. ஒலி, சிங்கம், கடல் 2. கடல், சிங்கம், ஒலி
    3. சிங்கம், கடல், ஒலி 4. ஒலி, கடல், சிங்கம்
18. அம்மாறு என்ற சொல்லைப் பயன்படுத்தும் சமூகம்
    1. மலையகச் சமூகம் 2. விவசாய சமூகம்
    3. மீனவச் சமூகம் 4. வேட்டுவச் சமூகம்
19. பின்வருவனவற்றுள் கலப்பு வாக்கியம்
    1. மாலா பாட கமலா ஆடினாள்
    2. சிறுவர்கள் ஓடிப்பிடித்து விளையாடினார்கள்
    3. வானங் கறுத்து இடி இடித்து மின்னல் மின்ன மழை பொழிந்தது
    4. சாப்பிட வாருங்கள் என அம்மா எங்களை அழைத்தார்
20. கொடைப் பொருளில் அமைந்த வாக்கியம்.
    1. மாதவனுடன் கமலன் சென்றான்
    2. மரத்திற்கு நீர் ஊற்றினான்
    3. வடக்கிற்கு ரயில் சென்றது
    4. எனக்கு நன்றாகத் தெரியும்
21. செயற்பாட்டு வினையாக அமையும் சொல்
    1. எழுதினான் 2. வருந்தினான்
    3 காண்பித்தான் 4. வரையப்பட்டது.
22. பெயரெச்சத் தொடராக அமைவது
    1. படித்து முடித்தான் 2. மரத்தில் ஏறினான்
    3. எழுதிய பேனா 4. ஓடிவருதல்
23. நிர்வாணமான வானத்தில் பால் போல் நிலவெறித்தது. இவ்வாக்கியத்தில் வந்த உவமானம்
    1. பால் 2. போல் 3.நிலவு 4.வானம்
24. வன்றொடர் குற்றியலுகரமாக அமைவது
    1. பண்டு 2. மூழ்கு 3. கடுகு 4. நாற்று
25. கடிமனையில் செறித்து என்பதில் கடி என்ற உரிச்சொல் உணர்த்தும் பொருள்.
    1. வாசனை 2. புதுமை 3. காவல் 4. அச்சம்
26. பொற்றொடி உடைந்தது, பொற்றொடி வந்தாள் என்பனவற்றில் பொற்றொடி என் பது முறையே
    1. வினைத்தொகை, பண்புத் தொகை
    2. வேற்றுமைத் தொகை, அன்மொழித் தொகை
    3. வேற்றுமைத் தொகை, உவமைத்தொகை
    4. பண்புத்தொகை, அன்மொழித் தொகை
27. பின்வருவனவற்றில் திரிதல் விகாரப் புணர்ச்சியாக அமைவது
    1. பூஞ்சோலை 2. வானவில் 3. நெற்கதிர் 4. கடலலை
28. பின்வருவனவற்றுள் மங்கல வழக்குச் சொல்லாக அமைவது
    1. அருமந்தபிள்ளை 2. கொல்லைக்குப் போதல்
    3. புறநகர் 4. இறைபதம் அடைந்தார்.
29. வினைச் சொல்லில் காலங்காட்டும் உறுப்பாக வருவது.
    1. இடைநிலை 2. சந்தி 3. விகாரம் 4.சாரியை
30. பின்வருவனவற்றுள் பெயர் + விகுதி + விகுதி சேர்ந்து வரும் ஆக்கப் பெயர்
    1. முதலாளித்துவம் 2. முயற்சியாளன் 3. தொழிலாளர் 4. புத்திசாலி

**பின்வரும் பந்திகளை வாசித்து அவற்றின் மையக் கருத்துக்களைத் தெரிவு செய்க.**

31. கலைகள் பலவாக உள்ளன. அவை மனதிற்கு உற்சாகத்தைத் தந்து உணர்வுகளைச் செம்மைப்படுகின்றன. கலையினால் ஒருவன் நிலையான இன்பத்தை பெறலாம். எனவே கலைகளை பேணி பயன்பெறுவோம்
    1. கலைகள் பலவாக உள்ளன.
    2. கலைகளைப் பேணுவதன் மூலம் நிறைந்த பலனைப் பெறலாம்.
    3. உணர்வைச் செம்மைப்படுத்தி இன்பத்தைத் தரும் கலைகளைப் பேணுவோம்
    4. கலைகள் உற்சாகத்தைத் தருகின்றன.
32. சங்கப் பாடல்கள் இயற்கைக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றன. இயற்கையோடு ஒன்றித்து வாழ்ந்த மக்களின் வாழ்வினை மிகச் சிறப்பாக படம்பித்துக் காட்டுகின்றன. தெவிட்டாத தீங்கனிகளாக உள்ள சங்கச் செய்யுள்கள் காலத்தால் நிலைத்துள்ளன.
    1. இயற்கைக்கு முக்கியத்துவம் கொடுப்பவை சங்கச் செய்யுள்கள்.
    2. காலத்தால் அழியாத சங்கப் பாடல்கள் இயற்கையோடு இணைந்த மக்கள் வாழ்வைக் காட்டுகின்றன.
    3. சங்க காலத்தில் மக்கள் இயற்கையோடு இணைந்து வாழ்ந்தனர்.
    4. சங்கச் செய்யுள்கள் காலத்தால் நிலைத்துள்ளன.
33. பொருள் மயக்கமற்ற வாக்கியத்தை தெரிவு செய்க.
    1. ரவி அவன் இதைச் செய்யவில்லை என்றான்
    2. பாடும்போது என்னைக் கண்டு விட்டான்.
    3. நீ இப்படிச் செய்வாய் என்று நான் நினைக்கவில்லை
    4. எங்கள் வீட்டுக்குப் போவோம் என சுதன் கூறினான்.

**பொருத்தமான முடிக்கும் பகுதியை தெரிவுசெய்க**

34. எல்லோரும் கூட்டத்திற்கு வந்திருந்த போதிலும் அவன் மட்டும்
    1. வருகிறான் 2. வரமாட்டான் 3. வருவான் 4.வரவில்லை
35. நீ என் வார்த்தையைக் கேட்டிருந்தால் இவ்வளவு துன்பமும்
    1. வரவில்லை 2. வருகிறது. 3. வந்திருக்காது 4.வந்ததில்லை
36. எழுத்து பிழைகளற்ற வாக்கியத்தை தெரிவு செய்க.
    1. செய்நன்றியை ஒருபோதும் மறக்கக் கூடாது
    2. பயிற்செய்கையும் விலங்கு வேளாண்மையும் இணைந்ததே விவசாயமாகும்!
    3. சென்றொழிந்த காலம் திரும்பிவர மாட்டாது.
    4. முயர்ச்சி இல்லையேல் உயர்ச்சி இல்லை

**புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

37. தமக்குரிய வேதனம் அதிகரிக்கப்பட வேண்டும் என்ற தொழிலாளரின் நீண்ட கால ................................ நிறைவேற்றப்பட்டது.
    1. உடன்பாடு 2. கோரிக்கை 3. விமர்சனம் 4. அச்சுறுத்தல்
38. வேலைக்குச் செல்லும் அவசரத்தில் ராகவன் பத்திகையை ..................... வாசித்தான்.
    1. ஆணித்தரமாக 2. மேலோட்டமாக 3.சுவைபட 4. கருத்தூன்றி
39. புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கணினி நிறுவனம் தனது சேவைகள் பற்றி .......... செய்தது
    1. விளம்பரம் 2. விமர்சனம் 3, வெளிப்பாடு 4. பிரகடனம்

**கீழே ஒழுங்கின்றி காணப்படும் வாக்கியங்களை கட்டுக்கோப்பான பந்தியாக்க மேற்கொள்ள வேண்டிய ஒழுங்குமுறையைத் தெரிவு செய்க.**

40. (அ) அமைதி குடிகொண்ட மனம் அவ்வளவு சுலபத்தில் நோய்வாய்ப்பட்டு விடாது
    (ஆ) நேர்மை, நாணயம் என்பன இவ்வாறு வழங்கப்படக் கூடிய குறிப்பிடத்தக்க பண்புகளாகும்.
    (இ) சில பண்புகளை குழந்தைப்பருவத்திலேயே குழந்தைகளுக்கு ஊட்டுவதன் மூலம் பிற்காலத்தில் அவர்கள் மனநோய்க்குள்ளாகாது தடுக்கலாம்.
    (ஈ) மனதில் சஞ்சலம் இல்லாதபோது அங்கே நிம்மதியும் சலனமற்ற நிலையும் இயல்பாகத் தோன்றும்.
    (உ) இந்த பண்புகள் குடிகொண்ட மனதில் காரணமற்ற வீண் சஞ்சலத்துக்கு இடமிருக்காது.
    1. அ, இ, உ, ஆ, ஈ 2. உ, ஆ, அ, இ, ஈ
    3. இ, உ, ஆ, ஈ, அ 4. இ, ஆ, உ, ஈ, அ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுக்குள் நுழைய 'நோ எபோலா' சான்றிதழ் கட்டாயம் -மத்தியரசு அறிவிப்பு



(சென்னை)

எபோலோ நோயால் பாதிக்கப் பட்டுள்ள நாடுகளில் இருந்து இந் தியாவுக்குள் வரும் பயணிகள் "நோ எபோலோ" சான்றிதழ் கொண்டு வருவது கட்டாயம் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது. கடந்த சில வாரங்களுக்கு முன் எபோலா நோய்க்கு சிகிச்சை பெற்ற லைபீரிய நாட்டைச் சேர்ந்த ஒருவரை சோத னையிட்ட போது அவரின் விந்த ணுக்களில் எபோலா அறிகுறி இருந்தது கண்டறியப்பட்டது. இத னையடுத்து அவருக்கு இந்தியாவுக் குள் நுழைய அனுமதி மறுக்கப் பட்டது. இந்த நிலையில் எபோலா குறித்து மக்களவையில் பேசிய சுகாதார அமைச்சர் ஜேபி நாட்டா, "எபோலோ நோய்க்கு சிகிச்சை பெற்று டிஸ்சார்ஜ் ஆனவர்கள் அந்நாட்டு சுகாதாரத்துறையிடம் இருந்து சான்றிதழ் பெறாமல் இரு ப்பது கவலைக்குரிய அம்சம். எபோலா நோய் தொற்றுள்ள நாடு களில் இருந்து இந்தியாவுக்கு வரும் பயணிகள் சம்பந்தப்பட்ட நாட்டின் சுகாதார அமைச்சகத்தில் இருந்து பெற்ற "நோ எபோலா" சான்றிதழை கட்டாயம் வைத்திருக்க வேண்டும். எபோலா பாதிப்பில் இருந்து மீண் டவர்கள், வைத்தியசாலையில் இருந்து டிஸ்சார்ஜ் செய்யப்பட்டதில் இருந்து 90 நாட்கள்வரை இந் தியாவுக்கு வர வேண்டாம் கேட்டு க்கொள்ளப்பட்டுள்ளனர்.இது தொட ர்பான பயண அறிவிக்கை, , நைஜீ ரியா, கானா, நியமி, ஐவரிகோஸ்ட், செனகல் ஆகிய நாடுகளில் உள்ள தூதரங்களுக்கு அனுப்பப்பட்டுள் ளது" என்று தெரிவித்தார். (இ-5)




## குஷ்பு மன்னிப்பு கேட்க வேண்டும்

தமிழர் பண்பாடு, நாகரீகம் வாழ்வியல்நெறி, அவற்றின்தொன்மை ஆகியவற்றை சிதைக்கும் வகை யில் பேசி வரும் நடிகை குஷ்பு மன்னிப்பு கேட்க வேண்டும் என்று கி.வீரலட்சுமி என்பவர் தலைமை யிலான தமிழர் முன்னேற்ற படை அமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அந்த அமைப் பின் பேஸ்புக் பக்கத்தில் ஒரு அறி க்கை வெளியிடப்பட்டுள்ளது. அதில் கூறப்பட்டுள்ளதாவது,

தமிழ் இனத்தின் விடுதலை போராட்டத்தை கொச்சைப்படுத்தும் வகையிலும் ஒட்டுமொத்த தமிழ ர்களை அவமானப்படுத்தும் வகை யிலும் தமிழுக்கும் தமிழர்க்கும் தமிழ் மண்ணுக்கும் எந்த வித உழைப்பும் தியாகமும் செய்யாமல் பிழைக்க வந்த வெளிமாநில பெண் ணான சினிமா கவர்ச்சி நடிகை குஷ்பு, தமிழ்தமிழர்வரலாறு கடுகளவும் தெரிந்து கொள்ளாமல் ஈழ விடுதலை போராளிகளை தீவிரவாத இய க்கம் என்று கூறியிருக்கிறார்.

இது கடும் கண்டனத்திற்கு உரி யது. உலக தமிழர்களுக்கு மிகு ந்த மன வேதனை ஏற்படுத்தியிருக்கிறார்.

ஐரோப்பிய நீதிமன்றம் விடுத லைப் புலிகள் அமைப்பு தீவிரவாத அமைப்பு அல்ல என்று கூறி அவற் றின் மீதான தடையை அண்மை யில் நீக்கியுள்ளது.

இந்தியாவிலும் வழக்கு நடை பெற்று கொண்டிருக்கிறது.

இந்த வேளையில் சினிமா கவர்ச்சி நடிகை குஷ்பு ஈழ விடு தலை போராளிகளை தீவிரவா திகள் என்று அரசியல் ஆதாயத் திற்காக கூறுகிறார்.

இதுபோன்ற கருத்துக்களை வெளியிட்டதற்கு பகிரங்க மன்னிப்பு கோரவேண்டும். (இ-5)

# இந்தியாவுடன் பேச்சு நடத்த பாகிஸ்தான் விரும்புகின்றது

## நவாஸ் ஷெரீப் பேட்டி

**காஷ்மீர் உட்பட அனைத்து பிரச்சினைக ளுக்கும், இந்தியாவுடன் அர்த்தமுள்ள பேச்சுவார்த்தை நடத்தி தீர்வுகாண விரும்புவதாக பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் தெரிவித்துள்ளார்.**

**மோடி-ஷெரீப் பேச்சு**

பிரதமராக நரேந்திர மோடி கடந்த மே மாதம் 26ஆம் திகதி பதவி ஏற்றபோது, சார்க் நாடுகளில் ஒன்றின் தலைவர் என்ற வகை யில் பாகிஸ்தான் பிரதமர், நவாஸ் ஷெரீப் அழைக்கப்பட்டார். அந்த அழைப்பை ஏற்று அவர் விழாவில் கலந்து கொண்டார்.

டில்லியில் தூங்கியிருந்து மறு நாள், பிரதமர் நரேந்திர மோடியை நவாஸ் ஷெரீப் சந்தித்து இரு தரப்பு உறவுகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தினார். இந்த பேச்சுவார்த் தையின்போது, இந்தியாவுக்கு எதிராக தன் சொந்த மண்ணிலி ருந்து கட்டவிழ்த்து விடப்படுகிற தீவிரவாத தாக்குதல்களை கண்டு கொள்ளாமல் இருக்கும் பாகி ஸ்தான், இதில் இந்தியாவுக்கு அளித்த வாக்குறுதியை நிறை வேற்ற வேண்டும் என்று நவாஸ் ஷெரீப்பிடம் மோடி வலியுறுத்தி னார். இரு தரப்பு வர்த்தகத்தை மேம்படுத்துவது குறித்தும் இரு தலைவர்களும் விவாதித்தனர்.

**திடீர் இரத்து**

அதைத் தொடர்ந்து இந்திய வெளியுறவுத்துறை செயலாளர் சுஜாதா சிங், ஓகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி இஸ்லாமாபாத் சென்று, பாகிஸ்தான் வெளியுறவுத்துறை செயலாளரை சந்தித்து பேச்சு வார்த்தை நடத்த இருந்தார்.

ஆனால் அப்போது பாகிஸ்தான் தூதர் அப்துல் பசித், டில்லியில் காஷ்மீர் பிரிவினைவாத தலைவர் ஷபீர் ஷாவை சந்தித்து பேசியது இந்தியாவுக்கு கடும் அதிர்ச்சியை அளித்தது. இதனால் வெளியுற வுத்துறை செயலாளர் மட்டத்தி லான பேச்சுவார்த்தையை இந்தியா அதிரடியாக இரத்து செய்தது.

**காத்மண்டில் சந்திப்பு**

அதற்கு பின்னர் இப்போது, நேபாளத்தின் தலைநகர் காத்ம ண்டில் சார்க் உச்சி மாநாட்டுக்கு சென்றிருந்தபோது, பிரதமர் நரே ந்திர மோடியும், நவாஸ் ஷெரீப்பும் சந்தித்து கை குலுக்கி, நலம் விசாரி த்தனர். சார்க் மாநாட்டில் இது முக்கிய அம்சமாக பேசப்பட்டது:

**விமானத்தில் பேட்டி**

இந்த மாநாட்டை முடித்துக் கொண்டு நவாஸ் ஷெரீப் நாடு திரும்பும் போது விமானத்தில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் தெரிவிக்கையில்,

இந்தியாவுக்கும், பாகிஸ்தா னுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடந்தபோதெல்லாம், பாகிஸ்தான், காஷ்மீர் தலைவர்களுடன் பேசி வந்துள்ளது. காஷ்மீர் தலைவர்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினை என்ப தால், அவர்களின் கருத்துக்களை அறிய பாகிஸ்தான் முயன்றது புதிதான ஒன்றல்ல.

**பாகிஸ்தான் விருப்பம்**

இதற்காக வெளியுறவுத்துறை செயலாளர் மட்டத்திலான பேச்சு வார்த்தையை இந்தியா இரத்து செய் திருக்கக்கூடாது.

கண்ணியத்துடனும், மதிப்புட னும், சுய மரியாதையுடனும் பேச்சு வார்த்தை தொடர்வதையே பாகிஸ் தான் விரும்புகிறது. நாங்கள் அதில் நம்பிக்கை வைத்திருக்கி றோம். அதை என்ன விலை கொடுத் தேனும் தொடர்ந்து செயற்படுத்து வோம்.

காஷ்மீர் பிரச்சினை உட்பட அனைத்து பிரச்சினைகளையும் இந்தியாவுடன் அர்த்தமுள்ள பேச்சு வார்த்தை நடத்தி தீர்வுகாண பாகிஸ்தான் விரும்புகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)




# பாகிஸ்தான் அண்டைய நாடுகளுடன் நட்புறவாகவே இருக்க விரும்புகிறது



தெற்கு ஆசியாவில் அமைதியை நிலைநாட்ட பாகிஸ்தான் அண்டை நாடுகள் மற்றும் பிராந்திய நாடு களுடன் நட்புறவாகவே இருக்க விரும்புகிறது என்று பாகிஸ்தான் பாதுகாப்பு துறை அமைச்சர் கவாஜா முகமது ஆசீப் தெரிவித்துள்ளார்.

இந்தியா காஷ்மீரில் உள்ள மக்களுக்கு காலதாமதம் இல் லாமல் உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

தெற்காசிய மக்களின் முன் னேற்றத்திற்கு இந்தியா அடிப்படை பிரச்சினையை தீர்வு காண முயல வேண்டும்.

அமெரிக்காவுடனான பரஸ்பர மரியாதை மற்றும் சமத்துவம் போன்றவற்றில் பாகிஸ்தான் நட்பு றவாகவே இருக்க விரும்புகிறது.

பழங்குடியின பகுதிகளை நிர் வகித்து வரும் அரசின், தீவிரவாத குழுக்களுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை வெற்றிகரமாக தொட ர்ந்து வருகிறது என்பதை எவ்வித கருத்து வேறுபாடும் இன்றி அமெ ரிக்க அரசு நம்பவேண்டும் என்று பாகிஸ்தான் பாதுகாப்பு துறை அமைச்சர் கவாஜா முகமது ஆசீப் மேலும் தெரிவித்தார். (இ-5)

# காங்கிரஸ் கட்சிக்காக மூப்பனார் எந்தத் தியாகமும் செய்யவில்லை

காங்கிரஸ் கட்சிக்காக மூப் பனார் எந்த தியாகமும் செய்ய வில்லை. இனிமேல் காங்கிரஸில் அவரை முன்னிறுத்த மாட்டோம் என்று தமிழக காங்கிரஸ் தலைவர் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் தெரி வித்துள்ளார்.

ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் மேலும் கூறியதாவது,

குஷ்பு காங்கிரஸில் சேர்ந்திருப் பது மகிழ்ச்சி அளிக்கிறது. அவர் எடுத்துள்ளது சரியான முடிவு. மக்களை சந்திக்க விரும்புவதாக குஷ்பு கூறியுள்ளார். இது அவரது உழைக்கும் குணத்தைக் காட்டு கிறது. மின் பற்றாக்குறை கார ணமாக தனியாரிடம் இருந்து தமிழக அரசு மின்சாரம் வாங்கு கிறது. நெய்வேலி, கூடங் குளத்தில் உற்பத்தியாகும் மின்சாரம், ஒரு யூனிட் 3 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. ஆனால், தனி யாரிடமோ ஒரு யூனிட் மின்சார த்தை 15 ரூபா கொடுத்து வாங்கும் நிலை உள்ளது..

400 கோடி ரூபாவுக்கு வாங்க வேண்டிய மின்சாரத்தை 1200 ரூபா கோடி கொடுத்து வாங்குகின்ற னர். இதில் மிகப்பெரிய [illegible] ஊழல் நடக்கிறது என்று பகிரங்கமா கவே கூறுகிறேன். இதற்கு காரண மானவர் அமைச்சரா, அதிகாரி களா என்று விசாரித்து முதல்வர் பன்னீர்செல்வம் உரிய நடவடி க்கை எடுக்க வேண்டும்.

இனிவரும் காலங்களில் காங்கி ரஸ் கட்சி, காமராஜரை மட்டுமே முன்னிலைப்படுத்தும். காமராஜ ரின் படங்கள் இல்லாமல் ஒரு நிக ழ்ச்சிகூட நடக்காது. ஆனால், மூப்ப னாரை வைத்து கட்சி நடத்த மாட டோம் அவரது மகன்ஜிகே. வாசன கட்சி [illegible] அவரது [illegible] என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# "ஸ்டாலின் விவகாரம் என்னோடு போகட்டும்"

## காங்கிரஸுக்குத் தாவிய குஷ்பு!





ராகுல் காந்தியுடன் குஷ்பு...

குஷ்புவின் அரசியல் பயணம் இனி... இந்தியா முழுவதும். இதுவரை ஒரு மாநிலக் கட்சியிலிருந்து தமிழகத்துக்குள் அரசியல் நடத்தி வந்த அவர், அகில இந்தியக் கட்சி ஒன்றில் இணைந்ததன் மூலம் அகில இந்திய அளவில் கவனத்தை ஈர்த்துவிட்டார்.

ஜி.கே.வாசன் ஏராளமான தொண்டர்களுடன் தனிக் கட்சியை உருவாக்கிய சரிவை எப்படி சமாளிப்பது என்று அகில இந்திய காங்கிரஸ் தலைமை யோசித்து வந்த வேளையில், குஷ்புவை தனது இல்லத்துக்கு அழைத்து மரியாதை கொடுத்துள்ளார் சோனியா.

இந்த சந்திப்பின்போது தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவனும் இருந்துள்ளார். சில மாதங்களுக்கு முன்பே, "நான் ஒரு முடிவு எடுக்கப் போகிறேன், அதற்காகக் காத்திருங்கள்' என்று தனது டுவிட்டர் பக்கத்தில் குஷ்பு தகவல் பரப்பினார். அதிலிருந்தே அவர் ஏதாவது அரசியல் முடிவை எடுப்பார் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. யாரையும் ஏமாற்றவில்லை குஷ்பு.

"என் அர்ப்பணிப்பும் உழைப்பும் ஒருவழிப் பாதையாகவே தொடர்ந்து நீடிக்கும் என்ற நிலை கழகத்தில் உள்ளபோது, நான் தேர்ந்தெடுத்த பாதையும் பயணமும் தாங்க இயலாத மன அழுத்தத்தை ஏற்படுத்துகிறது. ஆகவே, தி.மு.கவிலிருந்து விலகுவது என்ற முடிவை கனத்த இதயத்துடன் மேற் கொள்கிறேன்" என்று கடந்த ஜூன் மாதம் 17 ஆம் திகதி இப்படியொரு அறிக்கையைவிட்டு, தி.மு.கவிலிருந்து விலகினார் குஷ்பு.

சரியாக ஐந்து மாத இடைவெளிக்குப் பிறகு காங்கிரஸ் கட்சியில் இணைந்துள்ளார். "இப்போதுதான் மனசுக்கு ரொம்பவும் அமைதியாகவும், நிம்மதியாகவும் இருக்கிறது. இனி என்னோட பாதை, பயணம் எல்லாமே சந்தோஷமாக இருக்கும்!" என்று உற்சாகமாகப் பேசுகிறார் குஷ்பு. அவரிடம் சில கேள்விகளை முன்வைத்தோம்.

**"திராவிடக் கட்சியிலிருந்து திடீரென்று காங்கிரஸில், சேர்ந்துவிட்டீர்களே?"**

"நான் ஏதோ நேற்று யோசித்து இன்று வந்து காங்கிரஸில் சேர்ந்துட்டேன்னு நினைக்க வேண்டாம். தி.மு.கவிலிருந்து விலகியதில் இருந்தே நிதானமாக யோசித்து எடுத்த முடிவுதான். நான் பி.ஜே.பியில்தான் சேருவேன் என்று பலரும் எதிர்பார்த்தார்கள். பேசினார்கள். ஆனால், நான் என் முடிவில் தெளிவாக இருந்தேன். இப்போது எல்லோரும் அதிர்ச்சியாகப் பார்க்கிறார்கள்.

இந்தியாவில் பல்வேறு மதம், மொழியைச் சேர்ந்தவர்கள் வாழ்கிறார்கள். இங்கே சாதி, மத பேதம் தலைவிரித்தாடாமல் அமைதியான பூமியாக காக்கும் மாபெரும் சக்தி காங்கிரஸ் கரங்களில்தான் இருக்கிறது. அந்த சக்தி இந்தியாவில் வேறு எந்தக் கட்சிக்குமில்லை அதனால் காங்கிரஸில் இணைந்தேன்.

காங்கிரஸ் இன்று மத்தியில் ஆளும் கட்சியாக இல்லாமல் இருக்கலாம். நாளை இந்தியாவை ஆளப்போகும் கட்சி அதுதான். எல்லோரும் அலை அடிக்கிற பக்கமே படகை ஓட்டுவார்கள். எனக்கு அதில் விருப்பமில்லை. எதிர் அலையில் படகை ஓட்ட வேண்டும்."

**"நடிகர் கார்த்திக் ஆலோசனைப்படிதான் நீங்கள் காங்கிரஸில் இணைந்ததாகச் சொல்கிறார்களே?"**

"கார்த்திக் என்னுடைய குடும்ப நண்பர். அரசியல் பற்றியெல்லாம் நான் அவரிடம் பேசவில்லை. ஆனால், காங்கிரஸில் நான் சேரப் போகிறேன் என்பது அவருக்குத் தெரியும். சோனியா மேடத்தை சந்திக்க டெல்லிக்கு கிளம்புவதற்கு முன்பு அவரிடம்பேசினேன். நான டெல்லி செல்லும் தகவலை அவரிடம் சொல்லி விட்டுப் போனேன்."

**"என்ன சொன்னாங்க சோனியா?"**

"இந்தியாவில் பெண்கள் சமூகத்தின் மிகப் பெரிய லெஜண்ட் சோனியா மேடம்! அவங்களை நேரில் பார்க்கும்போது ரொம்பவும் சந்தோஷமாக இருந்தது. என்னிடம் ரொம்பவும் அன்பாகப் பேசினார். என்னோட குடும்பத்தைப் பற்றியும் குழந்தைகள் பற்றியும் அக்கறையோடு விசாரித்தார்.

"நீங்க காங்கிரஸுக்கு வந்தது எங்களுக்கு சந்தோஷம். நல்லா வொர்க் பண்ணுங்க!'னு சொல்லி அனுப்பினார்!"

**"தமிழ்நாட்டு அரசியலில் நீங்க கற்றுக்கொண்டது என்ன?"**

"நான் அரசியலில் இருந் தது தி.மு.கவில் மட்டும்தான்! அதனால் நான் கத்துக்கிட்டது எல்லாமே தி.மு.கவிலிருந்து மட்டும்தான். 'நேர்மையாக இருக்க வேண்டும், உண்மையாக இருக்க வேண்டும், எதுக்கும் பயந்து ஒடுக்கூடாது.' இந்த மூன்று விடயங்களையும்தான் நான் அரசியலுக்கு வந்து கத்துக்கிட்டேன். அதுபடித்தான் நான் இன்று வரைக்கும் இருக்கிறேன்.

நான் அரசியலுக்கு வந்த பிறகு மக்களை நேரடியாகச் சந்திக்க நிறைய வாய்ப்பு கிடைத்தது. அவர்களின் பிரச்சினைகளை நானே பல இடங்களில் நேரடியாகக் கேட்டிருக்கிறேன். மக்களைப் பொறுத்தவரைக்கும் எது உண்மை... எது பொய்என்று யோசிப்பதேயில்லை. சிலர் பரப்பிவிடும் வதந்திகளைக்கூட உண்மை என்று நம்பிவிடுகிறார்கள். அதனால் எங்கேயும் எப்போதும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதைப் புரிந்து கொண்டேன்."

**"காங்கிரஸ் கட்சியுடன் ஒருவேளை தி.மு.க. கூட்டணி வைத்துக்கொள்ளவும் வாய்ப்பு இருக்கிறது. அந்தச் சூழ்நிலை உங்களுக்கு தர்மசங்கடத்தை உண்டாக்காதா?"**

"வருவதற்கு முன்பே நாம் ஏன் அதைப் பற்றி யோசிக்கணும். வரட்டும் பார்த்துக்கலாம். நான் தி.மு.கவை விட்டு வந்துட்டதால் அங்கே இருக்கும் எல்லோர்கூடவும் சண்டை போட்டுக்கிட்டு வரவில்லையே... தி.மு.கவிலிருப்பவர்களும் எனக்கு நண்பர்கள்தான். தலைவர்மீது அன்பும் மரியாதையும் எனக்கு எப்போதும்



ஸ்டாலின், குஷ்பு, கருணாநிதி

உண்டு. இப்போதும் சொல்கிறேன்... என்னைப் பொறுத்தவரை கலைஞர் அவர்கள் மிகச் சிறந்த தலைவர். அதில் எந்த மாற்றமும் கிடையாது. அதனால் எந்தச் சூழ்நிலையிலும் எனக்கு வருத் தங்கள் வராது!"

**"தி.மு.கவிலிருந்து விலகியதற்கு ஸ்டாலின்தான் காரணம் என்று ஒரு பரவலான பேச்சு அப்போது கிளம்பியது. இப்போதாவது உண்மையான காரணத்தை நீங்கள் சொல்லக்கூடாதா?"**

"எல்லோரும் பேசிட்டு இருக்கிறார்கள் என்பதற்காக நான் இதற்கு பதில் சொல்ல முடியாது. உண்மை என்ன என்று தெரியாமல் ஒவ்வொருவருக்கும் ஆயிரம் விடயம் மண்டைக்குள் ஓடிட்டு இருக்கும். ஓடட்டும். ஒவ்வொருத்தரோட மனசுக்கு ஏற்ற மாதிரி என்ன நினைக்கிறார்களோ நினைக்கட்டும். கதையும் கட்டட்டும். என்ன நடந்தது என்பதை நான் அப்பவும் சொல்லலை. இப்பவும் சொல்லலை. நாளைக்கும் சொல்லப்போவது இல்லை. அது எதுவாக இருந்தாலும் என்னோடு போகட்டும்!"

**"ஜெயலலிதாவுக்குச் சொத்துக் குவிப்பு வழக்கில் தண்டனை வழங்கப்பட்டது பற்றி?"**

"நீதிமன்றம் ஒரு தீர்ப்பு வழங்கினால் அதை யாரும் விமர்சனம் செய்யக்கூடாது. ஆனால், தமிழ் நாட்டில் அவங்க கட்சியைச் சேர்ந்தவர்கள் நீதிபதியைப் பற்றி தவறாகப் பேசுவதும், தீர்ப்பை விமர்சனம் செய்வதுமாக இருக்கிறார்கள். இது எல்லாமே தவறு என்பதை அவர்கள் உணர வேண்டும். இப்படிச் செய்வதால் நீதிமன்ற-அவமதிப்பு வழக்கு வருமே தவிர, ஜெயலலிதாவுக்கு ஏந்த நல்லதும் நடக்காது. அவருக்கு நல்லது செய்வதாக நினைத்து கெடுதல்தான் செய்கிறார்கள்."

**"தமிழகத்தில் ஓ.பன்னீர்செல்வத்தின் ஆட்சி எப்படி இருக்கிறது?"**

"அதைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. நான் இப்போதுதான் காங்கிரஸ் கட்சிக்கு வந்திருக்கிறேன். காங்கிரஸ் கட்சியைப் பற்றி கேளுங்கள் சொல்கிறேன். பன்னீர்செல்வத்தின் ஆட்சி பற்றி நான் எதுவும் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை!"

**"சரி, காங்கிரஸ் கட்சியில் நிறைய கோஷ்டிகள் இருக்குமே... அதை எப்படி சமாளிக்கப்போறீங்க?"**

"காங்கிரஸ் கட்சி இந்தியா முழுவதும் பரவி பரந்திருக்கும் பேரியக்கம். இந்தியா முழுக்க நிறைய தலைவர்கள் இருக்கிறார்கள். அதனால் கருத்து மாற்றங்கள் வருவது இயல்புதான். அதை கோஷ்டி என்று சொல்வது தவறு. வேலைகளை செய்வதற்கு இந்தியா முழுக்க நிறைய பேர் இருக்கிறோம் என்பது தான் உண்மை."

**"தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சியை வலுப் படுத்த என்ன திட்டம் வெச்சிருக்கீங்க?"**

"வயதில் மூத்தவர்கள் ஒவ்வொரு வீட்டிலும், ஒவ்வொரு தெருவிலும் இருக்கிறார்கள். அவர்கள் அத்தனை பேருமே காங்கிரஸ் கட்சி யிலிருப்பவர்கள். மனதுக்குள் காங்கிரஸ் கட்சியை நேசிப்பவர்கள். அவர்களை நாம் இன்னும் முழுமையாகப் பயன்படுத்தவில்லை. நான் சென்னைக்கு வந்ததும், ஒவ்வொரு ஊராகச் சென்று காங்கிரஸ் கட்சியின் தேசப்பற்று குறித்து மக்களிடம் எடுத்துச் சொல்வேன். கட்சிக்குளிருந்து ஒதுங்கியிருப்பவர்களையும் முழுமையாக இயக்கத்துக்குள் கொண்டு வர பாடுபடுவேன். எனது அரசியல செயறபாடு என்பது தமிழகத்துக்குள் மட்டும் முடங்கிவிடாது. இந்தியா முழுக்க காங்கிரஸ் கட்சியை வளர்க்க எல்லா முயற்சிகளையும் மேற்கொள்வேன்!"

மீண்டும் புறப்பட்டுவிட்டது குஷ்பு புயல்!

**-ஜூனியர் விகடன்-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலன்புரி நிலையத்தில் போதுமான வசதிகள் இல்லை

# அதிகாரிகள் அசமந்தம்

## ஆனந்தன் எம்.பி குற்றச்சாட்டு

வவுனியா மாவட்டத்தில் கடும் மழை மற்றும் வெள்ளத்தால் பாதிப் படைந்த மக்களுக்கு போதுமான வசதிகள் ஏற்படுத்தி கொடுக்காது அதிகாரிகள் அசமந்த போக்குடன் இருப்பதாக வனனி பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்டத்தில் இடம் பெயர்ந்துள்ள மக்களை அவர்கள் தங்கியுள்ள நலன்புரி நிலையங் களில் நேரில் சென்று பார்வையிட் டதன் பின்னர் ஊடகங்களுக்கு கரு த்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அங்கு கருத்து தெரிவித்த அவர்,




வவுனியாவில் 5 நலன்புரி நிலை யங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் வவுனியா பிர தேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பகுதி களில் அமைக்கப்பட்டுள்ளதுடன் அவர்கள் நலன்புரி நிலையங்களி லும் மிகவும் இன்னல்களை அனு பவிக்கின்றனர்.

இதனை நான் நேரில் பார்வை யிட்டதன் அடிப்படையிலும் மக்கள் என்னிடம் முன்வைத்த முறைப் பாட்டின் அடிப்படையிலும் தெரிவிக் கின்றேன்.

இம் மக்கள் யத்தத்தால் பாதிப் படைந்து மீள்குடியேறியவர்கள். வீட்டுத் திட்டம் இவர்களுக்கு கிடைக் காமையால் இயற்கையும் இவர்களை தாக்குகிறது. மழை காரணமாக இவர்கள் இடம்பெயர்ந்து பொது கட்டடங்களில் போதிய வசதிகள் இன்றி தங்கவைக்கப்பட்டுள்ளனர். பிரதேச செயலகத்தின் அதிகாரிகள் இடம்பெயர்ந்த மக்களுக்கு தேவை யான நடவடிக்கைகளை மேற்கொள்ள வில்லை.

அமைக்கப்பட்டுள்ள நலன்புரி நிலையங்களில் போதுமான வச திகள் இன்மையால் இடம்பெயர்ந்த மக்கள் இரவிரவாக நுளம்புக்கடிக்கு மத்தியில் நித்திரையின்றியும் போதிய உணவின்றியும் இருந்து விட்டு காலையில் காலைக் கடனை முடிப்பதற்காக வீடுகளுக்கு சென்ற சமயம் நலன்புரி நிலையங்களுக்கு சென்ற வவுனியா உதவி பிரதேச செயலாளர் அம் மக்களை சந்திப்ப தற்காக வந்து அச்சுறுத்தும் தொனியில் பேசியுள்ளார் என மக்கள் என்னிடம் முறையிட்டுள் ளனர்.

இவருடைய தவறான அறிக்கை யின் காரணமாக தற்போதும் வவு னியாவில் மழை பெய்து வரும் நிலையில் மக்கள் தங்கியுள்ள நலன புரி நிலையங்களை மூடுமாறு பிரதேச செயலாளர் பணித்துள்ளார்.

இம் மக்கள் கடந்த மூன்று நாட்களாக முகாமில் தங்கியுள்ள போதும் பிரதேச செயலாளர் இம் மக்களைச் சென்று பார்க்கவில்லை. இம் மக்கள் சுய முயற்சியில் வாழ் பவர்கள். இவர்கள் உணவுக்கு கையேந்தும் மக்கள் அல்லர். வந் தாரை இன்முகத்தோடு வரவேற்று தமக்கில்லையேனும் உணவளிக் கும் மக்கள். எனவே அதிகாரிகள் மக்களின் இன்னல்களுக்கு ஆவன செய்வதை விடுத்து அவர்களை இழிவாக கருதுவது வேதனையான விடயமாகும்.

இதேபோலவே, இடம்பெயர்ந்த மக்களுக்காக சிகிச்சை அளிக்க வந்த மருத்துவரும் மக்களுக்கு அதட்டும் தொனியில் பேசியுள்ளார். அத்துடன் நடமாடும் சேவை இடம் பெற்ற தினத்தில் நோய் ஏற்பட் டவர்கள் மாத்திரம் சிகிச்சை பெற வருமாறும் கூறியுள்ளார். எனவே மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இன்னலுறும் மக்களுக்கு மக்க ளின் வரிப்பணத்தில் பணியாற்றும் அதிகாரிகள் சேவையாற்ற வேண் டும் என்பதனை மீண்டும் மீண்டும் தெரிவித்துக்கொள்ள விரும்புகின் றேன். அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் வழங்கப்படும் உத விகளைக் கூட மக்களுக்கு பெற்றுக் கொடுக்க இவ் அதிகாரிகள் கஷ்டப் படுகிறார்கள்.

எனவே, இது தொடர்பில் அன ர்த்த முகாமைத்துவ அமைச்சு நேர டியாக க்வனம் செலுத்த வேணடும். இதேவேளை 844 குடும்பங்களை சேர்ந்த 2 ஆயிரத்து 865 பேர் வவுனியா மாவட்டத்தில் கடும் மழையின் காரணமாக பாதிப்படைந் துள்ளதுடன் 17 வீடுகள் முற்றாக சேதமடைந்தும் 617 வீடுகள் பகுதி யளவில் பாதிப்படைந்தும் உள்ள தாக அவர் தெரிவித்தார்.

வன்னிப் பாராளுமன்ற உறுப்பி னருடன் வடமாகாணசபை உறுப் பினர் ம.தியாகராஜா, வவுனியா தெற்கு பிரதேசசபை உறுப்பினர் க.பரமேஸ் வரன் ஆகியோரும் மக்களைச் சென்று பார்வையிட்டனர். (அ-2-250)

## இந்துமாமன்றத்தின் இந்துமா்நாடு



வவுனியா தேசியக் கல்வியியற் கல்லூரியின் இந்துமா மன்றம் நடத்திய இந்துமாநாடு கடந்த 28 ஆம் திகதி கல்வியியற் கல்லூரியின் பலநோக்கு மண்டபத்தில் பீடாதிபதி கு.சிதம்பரநாதன் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தி னராக மன்னார் இந்து மகா சபைத் தலைவர் செ.சி.இராமகிருஸ்ணன், சிறப்பு விருந்தினர்களாக வவுனியா இந்துமா மன்றத் தலைவர் இறை பணிச் செம்மல் வை.செ. தேவ ராஜா, சிவநெறிப் புரவலர் சி.ஏ.இரா மசுவாமி ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக கல்லூரியின் உபபீடாதி பதிகளான க.சுவர்ண ராஜா, சு.பரமானந்தம், தி.ஜெய காண்டீபன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

முக்கிய நிகழ்வாக சேர்.பொன். இராமநாதன் நினைவாக ஆய் வரங்கு இடம்பெற்றது. இவ வரங் கிற்கு கலாநிதி தமிழ் மணி அகள ங்கன் தலைமை தாங்கினார்.

சமகாலச் சமூகப் புலத்தில் நிலை யாமைக் கோட்பாடு என்ற தலைப் பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறை விரிவுரை யாளர் சி.ரமணராஜாவும், பாடசாலை மாணவரிடையே ஒழுக்க விழுமி யங்களைக் கட்டியெழுப்புவதில் இந்துசமய வழிகாட்டல்கள் என்ற பொருளில் கோப்பாய் ஆசிரிய கலா சாலை விரிவுரையாளரும் பிரதி அதிபருமாகிய ச.லலீசனும்,

இந்து சமய அறவியல் சிந்த னைகள் என்ற பொருளில் வலிகா மம் கல்வி வலய சைவசமய பாட் ஆசிரிய ஆலோசகர் சைவப் புலவர் கந்த. சத்தியதாசனும் ஆய்வுரை களை நல்கினர்.

நிகழ்வின் நிறைவில் வவு னியா நிருத்திய நிகேதன் நாட்டிய பள்ளியின் மாணவர் வழங்கிய நடன நிகழ்வு இடம்பெற்றது.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளரும் இந்[illegible] மன்றக்காப்பாளருமாகிய ச.பவ[illegible] நிறைவுரை ஆற்றினார். (அ-2-23)

## முதியோர்கள் அனுபவத்தின் பொக்கிஷங்களாவர்

### வடமாகாண சபை உறுப்பினர் சிவமோகன் தெரிவிப்பு

முதியோர்களின்அனுபவத்தில் பொக்கிசங்கள் அவர்கள் தான் இளைய தலைமுறையினரின் வழிகாட்டல்கள் ஆவர்கள் என வடமாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவ மோகன் தெரிவித்துள்ளார்.

வவுனியா மகா றம்பைக்குளம் கிராம சேவையாளர் பிரிவில் கடந்த 22 ஆம் திகதி முதியோர் தின நிக ழ்வு நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் உரையாற்றுகை யில்

வருடா வருடம் நாம் கொண் டாடுகின்ற முதியோர் தினமானது அவர்களை முதியோர் என தனி மைப்படுத்தி காட்டுகின்றதால் இத் தினத்தை பெரியோர் தினமாக கொண்டாட வேண்டும்.

முதியோர்கள் அனுபவத்தின் பொக்கிஷங்கள் அவர்கள் தான் இளைய தலைமுறையின் வழிகாட் டிகள் ஆவார். இவர்கள் தாம் நிழல் ஆறமுடியாது தாங்கள் அந்த மரத் தின் பழங்களை உண்ணமுடியாது என்று தெரிந்தும் தங்களது கடைசி காலத்தில் மரங்களை நடுவதில் ஊக்கமாக இருப்பார்கள் என்று கூறினார்.

இவர்கள் தங்கள் ஓய்வு நேரத்தை கழிப்பதற்கான வசதிகளை ஒவ வொரு கிராமந்தோரும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்றும் பெரி யவர்களை அவர்களது காலத்தில் கௌரவமாக நடத்த வேண்டியது தற்போதைய இளைஞர் சமூதா யத்தின் தவிர்க்கமுடியாத கடமை யாகும்அவர்மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வட மாகாண சபை உறுப் பினர்கள் வைத்திய கலாநிதி சி.சிவ மோகன் மற்றும் திரு.ஜி.ரி.லிங்க நாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். அத்துடன் பெரும்பாலான பெரியவர்களும் வருகை தந்திருந்தனர்.

அத்துடன் இந்நிகழ்வில் கலந்து கொண்ட பெரியவர்களுக்கு ஒரு தொகுதி பரிசுப்பொருட்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது. (அ-2)

## முன்னாள் வன்னி எம்.பி ஐ.தே.க.வில் இணைவு

வன்னி மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான இராஜ குகனேஸ்வரன் ஐக்கிய தேசியக் கட்சியுடன் நேற்று முன்தினம் இணைந்து கொண்டுள்ளார்.

1984 ஆம் ஆண்டில் இருந்து 1994 ஆம் ஆண்டு வரை தமிழர் விடுதலைக்கூட்டணியின் சின் னத்தின் ஊடாக ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியினை பிரதிநிதித்துவப்படுத்தி வன்னி [illegible] ஆண்டில் இருந்து 2004 ஆம் ஆண்டு வரை மீண்டும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சின்ன த்தின் ஊடாக தமிழீழ விடுதலை இயக்கத்தினை பிரதிநிதித்துவப் படுத்தி வன்னி மாவட்ட பாராளு மன்ற உறுப்பினராகவும் செயற் பட்ட இவர், பின்னர் சுயேட்சையாக வும் தேர்தலில் போட்டியிட்டார்.

அதன் பின்னர் தமிழர் விடு தலைக் கூட்டணியின் வன்னி பிரா ந்திய தலைவராக அண்மைக் காலமாக செயற்பட்டு வந்திருந் தார். (அ-2-250)

## வன்முறைக்கு எதிரான ஊர்வலம்



(குருமன்காடு)

வவுனியா, சிதம்பரபுரம் பெண் கள் வள நிலையத்தின் ஏற்பாட்டில் பெண்கள் மீதான வன்முறைக்கு எதிராக ஊர்வலம் ஒன்று வவுனியா நகரில் அண்மையில் நடைபெற் றது.

பெண்கள் மீதான வன்முறை க்கு எதிராக பெண்கள் வள நிலை யத்தினர் 16 நாட்கள் செயற்பாட் டினை மேற்கொண்டு வருகின்ற னர்.

அதன் ஒரு அங்கமாக வவு னியா நகரில் பெண்கள் மீதான வன்முறைக்கு எதிரான ஊர்வலம் வவுனியா நகரில் பிரதான வீதி வழியாக பயணித்து நகரசபை வளாகத்தை சென்றடைந்தது.

ஆர்பாட்டத்தில் ஈடுபட்ட பெண்கள, பெண்கள் மீதான வன்முறையை ஒழிப்போம், வன்முறைகள் இல் லாத சமுதாயத்தை உருவாக்கு வோம், பெண்கள் நாட்டின் கண்கள், பெண்களை தாயாய் சகோதரியாய் நினையுங்கோ போன்ற கோஷங் களை எழுப்பியதுடன் பதாதைகளை யும் தாங்கியிருந்தனர். (அ-2-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரணைமடு புகையிரத கடவைக்கு பாதுகாப்பு கடவையை அமையுங்கள்



கிளிநொச்சி இரணைமடு சந்தியில் அமைக்கப்பட்டுள்ள புகையிரத கடவைக்கு பாதுகாப்பு கடவை தடுப்பு மற்றும் சமிக்ஞை ஒளி என்பன அமைக்கப்படவில்லையென பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்தப் புகையிரக் கடவையின் ஒரு பக்கத்திற்கு கடவை தடுப்பு அமைக்கப்பட்டும் மற்றையது சேதமடைந்த நிலையில் உடைத்தெறியப்பட்டும் உள்ளதாகவும் இதனால் பாதுகாப்பற்ற நிலை காணப்படுவதாகவும் பயணிப்போர் தெரிவிக்கின்றனர்.

இரணைமடு புகையிரத கடவைக்கு அண்மையாக 50 மீற்றர் தூரத்தில் இரணைமடு பொதுச் சந்தையும் 100 மீற்றர் தூரத்தில் இரணைமடு சந்தியும் உள்ளதால் தினமும் 5 கிராமங்களைச் சேர்ந்த மக்கள், பாடசாலை மாணவர்கள், நோயாளர்கள், கனரக வாகனங்கள், அலுவலர்கள் எனப்பலதரப்பினர் அதிகாலை வேளையில் இக்கடவையை கடந்து செல்கின்றபோது ஒரு பக்கம் பாதுகாப்பு கடவை தடுப்பும் மறு பகுதியில் தடுப்பு இன்றியும் சமிக்ஞை ஒளி விளக்கு அமைக்கப்படாமலும் காணப்படுகிறது.

புகையிரத கடவை காப்பாளரை அவ் விடத்தில் பணிக்கு அமர்த்தியுள்ள போதிலும் ஒரு பகுதிக்கு அவரே பாதுகாப்பு கடவை தடுப்பாக செயற்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி பொதுச் சந்தைக்கு அருகிலுள்ள கனகப்புரம் வீதியில் உள்ள புகையிர கடவைக்கு பாதுகாப்பான கடவை தடுப்பும் சமிக்ஞை ஒளியும் காணப்படுகின்றபோதும் இரணைமடு சந்தி புகையிரத கடவைக்கு மட்டும் இவ்வாறு அமைக்கப்படாது இருப்பது ஏன் என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

எனவே புகையிரத திணைக்களத்தினர் நேரில் சென்று பார்வையிட்டு உயிராபத்து ஏற்படாதவாறு கடவைக்கு தேவையானவற்றை அமைத்து மக்கள் அச்சமின்றி பயணிக்க உதவ வேண்டுமென பொது மக்கள் கோரிக்கைவிடுக்கின்றனர். (அ-2-271)

# வாகனம் தடம்புரண்டது



(படம்:- கௌரிகாந்தன்)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த பிக்கப் வாகனம் நேற்று அதிகாலை 4 மணியளவில் ஆனையிறவிற்கும் இயக்கச்சிக்குமிடையில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து தடம்புரண்டதில் வாகனம் சேதமடைந்தது. வாகனத்தில் பயணித்த சாரதி உட்பட இருவர் இவ் விபத்தின்போது மயிரிழையில் உயிர் தப்பினர்.




# வீதியை புனரமைப்பதற்கு 3 மில்லியன் ரூபா ஒதுக்கீடு




முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச சபைக்குட்பட்ட முல்லைத்தீவு பொது நூலகத்துக்கு செல்லும் உள்வீதி தாரிட்டு புனரமைக்கப்படவுள்ளதாக கரைதுறைப்பற்று பிரதேச சபையின் செயலாளர் சு.ரவீந்திரநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில்,

எமது சபையின் பொது நூலகம், முஸ்லிம் பாடசாலை, பதிவாளர் அலுவலகம், என்பன இவ்வீதியினூடாகவே அமைந்துள்ளன. மிக நீண்ட காலமாக குறித்த வீதியானது குன்றும் குழியுமாகவுள்ளது.

எனவே மக்கள் தமது தேவைகளை நிறைவேற்றுவதற்கு இவ்வீதியூடாகவே பயணத்தை மேற்கொள்கின்றனர்.

ஆகவேதான் மக்களின் சிரமங்களை கவனத்தில் கொண்ட எமது சபை இவ்வீதியை புனரமைக்க சுமார் 3 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளதாகவும் வீதிப்புனரமைப்புப் பணிகள் தற்போது இடம்பெற்றுவருவதாகவும் அவர் மேலும் கூறினார். (அ-2)

# மன்னார் வர்த்தகர்கள் நாளை கடையடைப்பில்

## நிலைமையை விளக்குகிறார் மன்னார் நகரபிதா

(மன்னார்)

மன்னார் நகரில் உள்ள வர்த்தக நிலையங்களை நாளை செவ்வா ய்க்கிழமை மூடி எதிர்ப்பை வெளிப்படுத்தவுள்ளதாக மன்னார் நகர வர்த்தக சங்கம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் அறிவித்தல் கடிதம் சகல வர்த்தக நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

எதிர்வரும் பண்டிகைக்கால வியாபாரத்துக்காக மன்னார் நகர சபையால் தென்பகுதி வர்த்தகர்களுக்கு மன்னாரில் வழங்கப்படவுள்ள தற்காலிக கடைகளுக்கான அனுமதியை நிறுத்துமாறு மன்னார் நகர சபை தலைவர், செயலாளர்களுக்கு மன்னார் நகர வர்த்தக சங்கத்தினால் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது.

குறித்த அறிவித்தல்களுக்கு சாதகமான பதில் கிடைக்கவில்லை. இந்த நிலையில் கடந்த 28 ஆம் திகதி மன்னார் நகர வர்த்தக சங்க நிர்வாகம் மேற்படி விடயம் தொடர்பில் கலந்துரையாடியது.

இதற்கமைவாக நாளை செவ்வாய்க்கிழமை வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடி முழு அளவிலான கடை அடைப்பை மேற்கொண்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தவுள்ளதாக மன்னார் நகர வர்த்தக சங்கம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக மன்னார் நகர பிதா அ.ஞானப்பிரகாசத்திடம் வினவிய போது,

மன்னார் நகர மக்களில் கூடுதலானவர்கள் கிறிஸ்தவர்களாகவே உள்ளனர்.

இவர்களில் பெரும்பாலானவர்கள் விவசாயம் மற்றும் மீன்பிடித் தொழில் செய்பவர்கள்.

தற்போது மீன்பிடித் தொழிலானது பின்னடைவை சந்தித்துள்ளதுடன் மந்த நிலையையும் எட்டியுள்ளது.

கிறிஸ்தவ மக்களின் பண்டிகைக் காலம் நெருங்கி வருகின்ற நிலையில் வியாபாரத்திற்காக கடந்த 30-40 வருடங்களுக்கு மேலாக மன்னார் நகரசபையினரால் தென்பகுதி வியாபாரிகளுக்கென தற்காலிக கடைகளுக்கான அனுமதி வருடாவருடம் வழங்கப்படுவதுடன் இவை 10 நாட்களுக்கு மட்டுமே இயங்கவும் அனுமதிக்கப்படுகிறது.

இம்முறை 150 இற்கு மேற்பட்ட தென்பகுதி வியாபாரிகளுக்கு அனுமதி வழங்க சபையில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதனால் நகர சபையினருக்கு சுமார் 10 இலட்சம் ரூபாவிற்கு மேல் வருமானம் கிடைக்கும்.

அத்துடன் இவ் வியாபாரிகள் தரமான, மலிவான விலையில் மக்களுக்கு பண்டிகைக் காலத்தில் உடுபுடைவைகளை விற்பனை செய்கின்றனர்.

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களும் இச் சந்தையில் தமது கையிருப்பில் உள்ள குறைந்த பணத்தைக் கொண்டு உடுபுடைவைகளை கொள்வனவு செய்கின்றனர்.

எனவே மன்னார் நகரசபை கூட்டத்தில் இம்முறையும் பண்டிகைக்கால விற்பனைக்கு தென்பகுதி வியாபாரிகளுக்கு அனுமதி வழங்குவதென முடிவெடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# தேசிய இளைஞர்சேவை மன்றத்தின் விருது வழங்கல் போட்டி முடிபுகள்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் மாற்றுத் திறனாளிகளுக்கு இவ்வாண்டு நடத்தப்பட்ட மாவட்ட விருது வழங்கல் போட்டியில் முதல் மூன்று இடங்களை பெற்றவர்கள் விபரம் வருமாறு,

**அறிவிப்பாளர்-ஆங்கிலம்**

கே.உமையந்தி,ஐ.துவீபா (முள்ளியவளை), ரி.சாருகா (கணுக்கேணி)

**அறிவிப்பாளர்-தமிழ்**

எஸ்.பார்த்தீபன், எஸ்.வர்ணி (முள்ளியவளை), ஆர்.ராஜ்குமார் (முத்தையன்கட்டு)

**பேச்சு-ஆங்கிலம்**

எஸ்.கானப்பிரியா (புதுக்குடியிருப்பு), எம்.ஜெஸ்மீரா (முள்ளியவளை), எம்.குமுதன் (உடுப்புக்குளம்)

**நாட்டார் பாடல்**

ரி.சதுர்சனா (முள்ளியவளை), எஸ்.கோபிகிருஸ்ணா (கள்ளப்பாடு), வி.யுதர்சன் (முள்ளியவளை)

**இளம் பாடகர்-தமிழ்**

எஸ்.கோபிகிருஸ்ணா (கள்ளப்பாடு), ஆர்.ராஜ்குமார் (முத்தையன்கட்டு), (மூவர் மூன்றாமிடம்) பி.சந்தியா (முள்ளியவளை), எம்.சோபனா (புதுக்குடியிருப்பு), ஆர்.சதுர்சனா (முள்ளியவளை)

**இளம் பாடகர்-ஆங்கிலம்**

எஸ்.ஜெனிஸ்ரலா (புதுக்குடியிருப்பு), எம்.டெனிஸ்ரா (சிலாவத்தை), ஜே.ஜேனுகா (புதுக்குடியிருப்பு)

**மௌன நாடகம்**

எஸ்.வினோதன் (முத்தையன்கட்டு), ஜே.கிறிஸ்ரிராஜா (புதுக்குடியிருப்பு), ஆர். சஜித் (அன்பு இல்லம்)

**பேச்சு-தமிழ்**

எஸ்.வர்ணி (முள்ளியவளை), எ.கோஜனனி (புதுக்குடியிருப்பு), ரி.டன்சி (பாரதி இல்லம்)

**பரத நாட்டியம்**

ஆர்.சஜித் (அன்பு இல்லம்), விதுஜீபா (வற்றாப்பளை), எஸ்.துஜாந்தினி (நீராவிப்பிட்டி)

**கிராமிய நடனம்**

கள்ளப்பாடு அ.த.க. பாடசாலை, முல்லை.ஐயப்பா, பாரதி

**மேலைத்தேய இசை**

ஏ.சரோமி (நீராவிப்பிட்டி), கே.துவாரகா (பாரதி இல்லம்), ஜே.கிறிஸ்ரிராஜா (புதுக்குடியிருப்பு),

**சாஸ்திரிய இசை**

எம். ஜெஸ்மீரா (பாரதி இல்லம்), டி.டிருசாந் (முள்ளியவளை), கே.துவாரகா (பாரதி இல்லம்)

**புத்தாக்க நடனம்**

அன்பு இளைஞர்கழகம், முல்லை. ஐயப்பா, பாரதி

**சித்திரம்**

தே. பிரசாந் (முள்ளியவளை), எஸ்.இன்ஸாம் (நீராவிப்பிட்டி), சு.டிலூசிகா (முள்ளியவளை)

**அறிவிப்பாளர்-தமிழ்**

ர.குகன், ரி.டிலானி, ஏ.அனுசா (இனியவாழ்வு இல்லம்)

**பேச்சு**

ரி.டிலானி, ஏ.குகன், பி.லோஜினி (இனிய வாழ்வு இல்லம்)

**நாட்டார் பாடல்**

ஆர்.வினோதினி, யு.கஸ்தூரி, பி.லோஜினி (இனிய வாழ்வு இல்லம்)

**இளம் பாடகர்-தமிழ்**

ஆர்.வினோதினி, பி.லோஜினி, யு. கஸ்தூரி (இனிய வாழ்வு இல்லம்)

**புத்தாக்க நடனம்**

வி.லலிதா, ஏ.அனுசா, யு.கஸ்தூரி (இனிய வாழ்வு இல்லம்)

**மேலத்தேய இசை**

ஆர்.வினோதினி, எ.குகன், ரி.டிலானி (இனிய வாழ்வு இல்லம்)(அ-2-281)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணுற அடுக்கிய விறகில் வெந்தனல்
நுண்ணிய தீபுகில் ஒன்றுமில்லையாம்
– தேவாரம்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# சுக்கிரீவனுக்காக வாலி கொல்லப்பட்டானா?

இராமாயணத்தில் இராமபிரானே பாட்டுடைத் தலைவன். தசரதனின் தலைமகன் என்பதற்கப்பால் இராமபிரானிடம் எண்ணிலறந்த நற்குணங்களும் அறக்கொள்கைகளும் இருந்துள்ளன. இதன் காரணமாக இராமர் இருக்கும் இடமெல்லாம் அயோத்தியென அந்நாட்டு மக்கள் நினைத்தனர்.

இத்துணை சிறப்பு மிக்க இராமன் வாலி வதையில் நடந்து கொண்ட முறை பல்வேறு விமர்சனங்களுக்குள்ளானது. வாலியை இராமர் மறைந்திருந்து தாக்கியமையுத்த தர்மம் அன்று என்பதே வாதப்பொருள். தர்மம் உணர்ந்த இராமர் அவ்வாறு நடந்து கொண்டமை தவறிலிலும் தவறு என்பதே வாதம் புரிவோரின் கருத்து.

வாலியை மறைந்திருந்து தாக்கியமை ஒரு புறமிருக்க வாலியை வதம் செய்ய வேண்டிய தேவை இராமருக்கு ஏற்பட்டது ஏன் என்று ஆராய்ந்தால், அந்த வதம் சுக்கிரீவனுக்காக நடந்ததன்று.

சுக்கிரீவனின் மனைவியை வாலி கவர்ந்து சென்றான் என்பதாலும் தன் அண்ணன் வாலியை எதிர்க்கும் வல்லமை தனக்கில்லாத காரணத்தாலும் சுக்கிரீவன் இராமனைத் தஞ்சமடைந்தான்.

மிகப்பெரும் பராக்கிரமசாலியாகிய வாலி இலங்கை வேந்தன் இராவணனின் ஆருயிர் நண்பன், அதேநேரம் இராம பக்தன். இந்த இருபெரும் நிலைமைகளும் இராம – இராவண யுத்தத்திற்கு பெருந் தடையாக இருக்குமென்பது இராமருக்கு நிச்சயம் தெரிந்திருக்கும். வாலியை வதம் செய்வது என்ற இராமரின் முடிவு சுக்கிரீவனூடாக நடந்தேறுகிறது.

அதாவது சுக்கிரீவன் மனைவியை வாலி கவர்ந்தான் என்ற குற்றச்சாட்டை முன்னிறுத்தி, இராவணனுக்கு நெருங்கிய நண்பனாகிய வாலியை இராமர் மறைந்திருந்து தாக்கினார். இராமர் நினைத்திருந்தால் சுக்கிரீவனையும் வாலியையும் ஒற்றுமைப்படுத்தியிருக்க முடியும்.

எல்லா அறமும் தெரிந்த இராமர் சகோதரர்களை ஒற்றுமைப்படுத்தியிருக்க வேண்டும் அல்லவா? அதை ஏன் அவர் செய்யவில்லை. வாலி உயிரோடு இருந்தால் இராவணனை வதம் செய்ய ஒருபோதும் விடமாட்டான். இராமருக்கும் இராவணனுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடத்தி இருவரையும் ஒற்றுமைப்படுத்தியிருப்பான். பேச்சுவார்த்தையின் முதற்கட்டத்தில் சீதை விடுதலை பெற்றிருப்பாள்.

எனவே இராம – இராவண யுத்தம் நடக்காமல் போகக்கூடிய வாய்ப்பு உண்டென்பதாலேயே இராமர் வாலியை மறைந்திருந்து தாக்கினார். வாலி வதம் சுக்கிரீவனுக்காக இராமர் செய்தது போல் இருந்தாலும், இராமர் தன் சுயநலனுக்காகவே வாலியை கொன்றார்.

இந்த உண்மையை எங்கள் நாட்டிலும் நாம் அனுபவ ரீதியாகக் காண்கிறோம் சிலருக்கு சமாதானம் பிடிப்பதேயில்லை. யுத்த சூழ்நிலையிருந்தால் மட்டுமே தங்களின் அரசியல் இருப்பு சாத்தியமாகும் என்பதால் சமாதானத்தை விரும்புவோரை ஓரங்கட்டி விடுகின்றனர்.

இது ஒருபுறமிருக்க எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் சூடு கடுமையாகக் கிளம்பியுள்ளது. அதிலும் ஐ.தே.கவின் பிரதித் தலைவரும் முன்னாள் ஜனாதிபதி காலஞ்சென்ற பிரேமதாஸவின் மகனுமாகிய சஜித் பிரேமதாஸ ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்தது தேர்தல் களத்தை மேலும் சூடேற்றியுள்ளது.

மைத்திரிபால சிறிசேனவை தோற்கடிக்க வேண்டுமானால் சஜித் பிரேமதாஸவை தனது பக்கம் இழுத்தாக வேண்டுமென்பதே ஜனாதிபதி மகிந்தவின் இராஜதந்திரம். மகனே! சஜித்! ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடுவதற்கு ஐ.தே.கவில் யாருமேயில்லையா? ரணில் இல்லை என்றால் பிரேமதாஸவின் மகனாகிய நீரன்றோ ஜனாதிபதி வேட்பாளர்.

நீர்தான் ஜனாதிபதி வேட்பாளராக வருவீரென்று நான் நம்பியிருந்தேன். எனது நண்பர் பிரேமதாஸவின் மகனாகிய தாங்கள் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றிருந்தால் மகிழ்வடைந்திருப்பேன்,

ஆனால் மைத்திரிபாலவை பொதுவேட்பாளராக்கி ஐ.தே.கவேயே கருவறுத்துவிட்டனர் என்று சஜித்திடம் ஜனாதிபதி மகிந்த சொல்லியிருந்தால் சுக்கிரீவனுக்காக வாலி வதம் நடந்த கதையாகவே நிலைமை முடியும்.

# மீரியபெத்த மண்சரிவில் உயிரிழந்த மக்களுக்கு அறிவகத்தில் அஞ்சலி!

கடந்த மாதம் பதுளை கொஸ்லந்த மீரியபெத்தவில் மண்சரிவினால் மரணித்த மக்களின் ஒரு மாத நினைவு கூரல் நிகழ்வு நேற்று கிளிநொச்சி, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அலுவலகமான அறிவகத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தலைமையில் நடைபெற்றது.

இதில் வடமாகாண சபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை அரியரத்தினம், கரைச்சி பிரதேச சபை தலைவர் குகராசா உட்பட கட்சி நிர்வாகிகள் அமைப்பாளர்கள், கட்சி உறுப்பினர்கள், கட்சி செயற்பாட்டாளர்கள் என அனைவரும் கலந்து கொண்டு மண்சரிவினால் மரணித்தவர்களின் நினைவு நாளில் சுடரேற்றி வணக்கம் செலுத்தினர்.

இதில் கலந்துக்கொண்ட வடமாகாண சபை உறுப்பினர் அரியரத்தினம் வணக்க உரை நிகழ்த்துகையில், மண்சரிவினால் மலையகத்தில் மரணித்த உறவுகளுக்கு நாம் எமது மக்கள் சார்பிலே இந்த ஆழ்ந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றோம். அவர்களின் வாழ்வு இன்றைக்கும் அவலங்களையே சந்தித்து வருகின்றது. அம்மக்களுக்கான ஆரோக்கியமான சிந்தனையை அரசாங்கம் கொண்டிருக்கவில்லை.

அதனால் இருளிலேயே வாழ அவர்கள் நிர்ப்பந்திக்கப்படுகின்றார்கள். எமது உறவுகளான மலையக மக்களோடு எமது உறவுகள் வலுப்படுவதை அரசாங்கம் விரும்பவில்லை.

தமிழர்கள் ஓரணியாகி விடுவார்கள் என்பதற்காக மலையக மக்களுக்கும் வடக்கு கிழக்கு பிரதேசங்களில் வாழும் தமிழ் மக்களுக்கும் இடையில் உள்ள உறவு பிணைப்புக்கு அரசாங்கம் இடையூறுகளை விளைவிக்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# மைத்திரியுடன் சென்ற குணவர்த்தனவை அரசுக்கு மீண்டும் இழுக்க தீவிர முயற்சி

எதிரணி பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுடன் அரசாங்கத்தில் இருந்து வெளியேறிய முன்னாள் பிரதியமைச்சர் எம்.கே.எஸ்.டி.எஸ் குணவர்தனவை மீண்டும் இணைத்துக் கொள்ள அரசாங்க தரப்பினர் பெரும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாக தெரியவருகிறது.

அவர், அண்மையில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுடன் கலந்துரையாடிக் கொண்டிருந்த போது அரசாங்கத்தில் இருந்து தொலைபேசி அழைப்பு வந்துள்ளதுடன் அரசாங்கத்தில் இணையுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

உங்களுக்கு என்ன பிரச்சினை உள்ளது? அவற்றை தீர்க்க பணம் இருக்கின்றதா?. மீண்டும் அரசாங்கத்திற்கு வருவதற்கு எவ்வளவு பணம் தேவை என தொலைபேசி அழைப்பை ஏற்படுத்திய நபர் கேட்டுள்ளதாக தெரியவருகிறது.

தொலைபேசி அழைப்பை எடுத்தவர் முன்வைத்த யோசனைக்கு நன்றி தெரிவித்த குணவர்தன, ஐயா நான் வறிய மனிதன். எனினும் நான் இந்த செயலை விரும்பவில்லை.

5 ஆயிரம் ரூபா நாணயத்தாள்களை கொண்ட ஒரு கப்பலை கொடுத்தாலும் நான் மீண்டும் வரப் போவதில்லை.

இதனால் பேச்சை இத்துடன் நிறுத்திக்கொள்வோம். ஆனால், எமது நட்பு தொடரட்டும் என குணவர்தன பதிலளித்துள்ளார். (இ-5)

# எனக்கு ஏற்படும் அநீதிகளை மகிந்த பொருட்படுத்தவில்லை

## கண்ணீர் விடும் காணி அமைச்சர்

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஆகியோரிடம் தனக்கு ஏற்பட்ட அநீதிகள் குறித்து தெரியப்படுத்திய போதிலும் எவரும் தான் கூறியதை பொருட்படுத்தவில்லை என காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

கலேவலை ரி.பி. தென்னக்கோன் மண்டபத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தம்புள்ளை தொகுதி அதிகார சபைக் கூட்டத்தில் பேசும் போது கண்ணீர் மல்க அமைச்சர் இதனை தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி எத்தனோல் மற்றும் ஹெரோயின் வியாபாரிகளின் பிடியில் சிக்கியுள்ளது.

நான் சுத்தமான சுதந்திரக் கட்சிக்காரன். எனக்கு ஏற்படுத்தப்படும் அநீதிகள் பற்றி ஜனாதிபதியிடம் கூறினேன். தம்புள்ளையில் வைத்து நாமலிடம் கூறினேன். எனது பேச்சை எவரும் கவனத்தில் கொள்ளவில்லை.

நாங்கள் வளர்த்த கட்சிக்கு ஏற்பட்டு வரும் அனர்த்தம் பற்றி நான் கூறுவதை அவர்கள் நம்பவில்லை. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை எவருக்கும் அடிபணிந்த கட்சியாக மாற்ற நான் விரும்ப வில்லை.

கட்சியில் உள்ள தவறுகளை திருத்திக்கொண்டு அடுத்த தேர்தலுக்கு செல்ல வேண்டும். நான் அந்த நிலைப்பாட்டிலேயே இருக்கின்றேன் என ஜனக பண்டார தென்னக்கோன் மேலும் தெரிவித்தார். (இ-5)

பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு வாரம்
யாழ். சமூக செயற்பாட்டு மையம்
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
JSAC
16
2014
ஆற்றல் கொண்ட பெண்களே நல்ல
தோர் சமூகத்தின் ஆரோக்கியமாதலால் பெண்களின் ஆற்றல்
வளர்த்து ஆச்சரியக் குறிகளாய் இவ்வுலகம் ஆளச் செய்திடுவோம்.

# 60 குடும்பங்கள் இடப்பெயர்வு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை முனைப் பகுதியில் மூன்றாம் குறுக்குத் தெரு சின்னத் தோட்டம் பகுதியிலிருந்து 60 குடும்பங்கள் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த நிலையில் நான்கு நாட்களாக தொம்மையம்மன் ஆலயத்திற்கு அருகிலுள்ள ராஜா ராணி கட்டடத்தில் தங்கியுள்ளனர்.

கைக்குழந்தைகள் உட்பட 500 இற்கும் மேற்பட்ட மக்கள் இவ்வாறு இடம்பெயர்ந்துள்ள நிலையிலும் அவர்களுக்கு எவ்விதமான நிவாரண உதவிகளும் வழங்கப்படவில்லை என மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மேலும் தங்கள் அவல நிலையை உணர்ந்து தமக்கு உடனடியாக நிவாரண உதவிகளை வழங்குமாறும் வெள்ள[illegible] [illegible]க்கை விடுத்துள்ளனர். (இ-10)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## கடவுள் எங்கே இருக்கிறார்?



கடவுள் எங்கேயோ இருப்பதாக எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அவன் மனிதனின் மன இயக்கத்தில் இருக்கின்றான். ஆம் தெய்வம் அதற்குள்ளாகவும் இயங்கிக்கொண்டிருக்கின்றது. வேறுவேறாக இல்லை, இறைவன் மனிதனிடம் ஒன்றுபட்டுத்தான் இருக்கின்றான்.

ஆனால், மனிதனுடைய எண்ணத்தின் காரணமாக, இச்சையின் காரணமாக, பல பொருட்களின் மீது வைத்திருக்கிற ஆசையின் காரணமாக, இறைவன் தூரத்தில் இருப்பது போல் மனிதனுக்கு தோன்றுகிறது. இச்சையின் அடுக்குகளே இறைவன்தூரத்தில் இருப்பது போல் செய்து வருகின்றன.

நமக்கும் கடவுளுக்கும் எவ்வளவு தூரம் இருக்கிறது என்று ஒரு கணக்கெடுக்க வேண்டுமா? எத்தனை பொருட்களின் மீது ஆசை இருக்கிறதோ, வரிசையாகப் பட்டியலிட்டால் அது இருக்கும் நீளத்தைக்கொண்டு இவ்வளவு தூரம் தான் நமக்கும் கடவுளுக்கும் இருக்கக்கூடிய தூரம்.

பொருட்களின் மீது இருக்கக்கூடிய ஆசைகள் எவ்வளவோ, அந்த அளவுக்குக் கடவுளுக்கும் மனிதனுக்கும் உள்ள தூரம் அதிகமாகும். ஆகவே, ஆசை என்பதைச்சீரமைத்து விட்டோமேயானால் இறைவனைக் காணலாம்.

ஆசையை அனுமதித்துக் கொண்டே இருந்தால், அதை ஒவ்வொரு நிமிடமும், ஒவ்வொரு ஆண்டும் செயலாக்கிக் கொண்டுதான் இருப்போம். அந்த வகையில் வேலை இருந்து கொண்டே இருக்கும். ஆனால் ஆசை சீரமைக்கப்பட்டுவிட்டது என்றால், ஒரு பளுவும் இல்லை. ஆகையினால், மனம் துல்லியமாக, நிறைவாக இருக்கும். அங்கே இறைவன் இருப்பான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹேல- சங்கக்கார அசத்தல்; இலங்கை அணி அபார வெற்றி

இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில், இலங்கை அணி எட்டு விக்கெட்டுகளினால் அபார வெற்றி பெற்றுள்ளது.

கொழும்பு ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 43 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 185 ஓட்டங்களைப் பெற்றது. இந்தப் போட்டி சீரற்ற வானிலை காரணமாக 45 ஓவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.







இங்கிலாந்து அணி சார்பாக ரவி போப்பரா 51 ஓட்டங்களையும், ஜோ ரூட் 42 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பந்து வீச்சில் அஞ்சலோ மத்யூஸ் மற்றும் திஸர பெரேரா ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

186 ஓட்டங்களை இலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 34.2 ஓவர்களில் இரண்டு விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இலங்கை துடுப்பாட்டத்தில் குமார் சங்கக்கார 67 ஓட்டங்களையும், மஹேல ஜெயவர்த்தனே 77 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காது பெற்று அணியை வெற்றி பெறச் செய்தனர். 7 போட்டிகளைக் கொண்ட இந்த தொடரில் 2 :0 என்ற ஆட்டக் கணக்கில் இலங்கை முன்னிலை பெற்றுள்ளது. இப்போட்டியின் ஆட்டநாயகனாக இலங்கையின் மஹேல ஜெயவர்த்தன தெரிவானார். (க)

## ஹியூக்சுக்கு நேற்று 26வது பிறந்த நாள்




பவுன்சர் பந்து தலையில் தாக்கி மரணம் அடைந்த ஹியூக்சுக்கு நேற்று 26ஆவது பிறந்தநாள் ஆகும. அவர் 1988ஆம் ஆண்டு நவம்பர் 30ஆம் திகதி பிறந்தார். தனது பிறந்த நாளைக்கு 4 தினங்க ளுக்கு முன்பு தான் அவர் இறந் தார்.

அவுஸ்திரேலிய கப்டன் கிளார்க் அவரது 26ஆவது பிறந்த நாளையொட்டி உணர்ச்சி பூர்வமாக பத்திரிகை ஒன்றில் தனது அனு தாபத்தை வெளிப்படுத்தி இருக்கிறார்.

எனக்கு ஒரு இரத்த சகோதரர் இல்லை. ஆனால் பிலிப் ஹியூக்சை எனது சகோதரன் என்று அழைப்பதை பெருமையாக கருதுகிறேன் என்று கிளார்க் குறிப்பிட்டு உள்ளார். (க)

விளையாட்டுச் செய்திகள்

## குக் பதவி விலக வேண்டும்; கெவின் பீட்டர்சன் வலியுறுத்து



இலங்கை அணிக்கு எதிரான 2ஆவது ஒருநாள் போட்டியிலும் இங்கிலாந்து அணி தோல்வியை தழுவியது. இந்த தோல்வியை தொடர்ந்து இங்கிலாந்து அணி கப்டன் பதவியில் இருந்து குக் விலக வேண்டும் என்று முன்னாள் கப்டன் பீட்டர்சன் வலியுறுத்தி உள்ளார். டெஸ்ட் போட்டியில் மட்டும் கவனம் செலுத்துங்கள் என்று அவர் டுவிட்டர் மூலம் தனது கருத்தை தெரிவித்துள்ளார். (க)



## ஹியூக்ஸ் மரணம்; இந்தியா- ஆஸி டெஸ்ட் போட்டி பிற்போடப்பட்டுள்ளது

பிலிப் ஹியூக்ஸ் மரணத்தையடுத்து இந்திய மற்றும் அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி திட்டமிட்டபடி நடைபெறாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரு அணிகளுக்குமிடையிலான முதல் டெஸ்ட் போட்டி எதிர் வரும் 4ஆம் திகதி பிரிஸ்பேனில் தொடங்குகிறது.

ஹியூக்ஸ் மரணத்தால் முதல் டெஸ்டை நடத்த வேண்டுமா? என்று பரிசீலிக்க வேண்டும்என சுனில கவாஸ்கர் தெரிவித்து ள்ளார்.

இந்த நிலையில் பிரிஸ்பேன் டெஸ்ட் போட்டி திட்டமிட்டபடி நடக்குமா? என்ற சந்தேகமும் எழுந்துள்ளது.

ஹியூக்ஸ் மரணத்தால் அவுஸ்திரேலிய வீரர்கள் கவலையில் இருக்கிறார்கள். இந்த நேரத்தில் அவர்களால் போட்டியில் கவனம் செலுத்த முடியாது என்ற கருத்து நிலவுகிறது.

இதேவேளை, எல்லோரும் கிரிக்கெட்டை நேசிக்கிறோம். எல்லோரையும் விட கிரிக்கெட் அதிகம் நேசித்தவர் ஹியூக்ஸ். வீரர்கள் கடும் சோகத்தில் இருக்கிறார்கள் என்பதை அறிவோம் என அவுஸ்திரேலிய கிரிக்கெட் வாரிய நிர்வாகி ஜேம்ஸ் சுதர்பாண்ட் தெரிவித்துள்ளார்.

முதல் டெஸ்ட் போட்டிக்கு இன்னும் 7 நாட்கள் உள்ளன. துக்கத்தில் இருந்து மீள்வதற்கு இந்த நாட்கள் போதாது என்று தெரியும்.

இதுதொடர்பாக இந்திய கிரிக்கெட் வாரியத்திடம் தொடர்பு கொண்டுள்ளோம். அவர்கள் சூழ் நிலையை நன்கு உணர்ந்து இருக்கிறார்கள், வீரர்களிடமும் பேசி இருக்கிறோம்.

அவுஸ்திரேலிய வீரர்கள் போட்டிக்கு தயாராகுவது கடினம் என்றாலும் அது முடியும். முதல் டெஸ்ட் போட்டி நடந்தால் அதற்கு இரு அணி வீரர்களும் வித்தியாசமான மனநிலையில் தயார் ஆக வேண்டியது இருக்கும் என தெரிவித்துள்ளார்.

டிசம்பர் 4ஆம் திகதி நடைபெறுவதாக இருந்த இந்தியா- அவுஸ்திரேலியா மோதும் முதல் டெஸ்ட் போட்டி நடைபெறாது என்றும், திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மறைந்த அவுஸ்திரேலிய வீரர் பிலிப் ஹியூக்சுக்கு மரியாதை செலுத்தும் வகையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஹியூக்சின் இறுதிச்சடங்கு 3ஆம் திகதி நடைபெறும். இந்தியாவுடனான முதல் டெஸ்ட் திட்டமிட்டபடி நடைபெறவேண்டுமென்று ஹியூக்ஸின் குடும்பத்தார் விரும்புகிறார்கள். இதற்கு மேல் முடிவெடுக்கவேண்டியது அவுஸ்திரேலிய கிரிக்கெட் வாரியம் தான் என்று ஹியூக்ஸின் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். (க)

## இந்தியன் சுப்பர் லீக் காற்பந்து; கொல்கத்தா-புனே ஆட்டம் சமநிலை








கொல்கத்தா - புனே சிட்டி அணிகள் மோதிய பேபாட்டி சமநிலையில் முடிவடைந்துள்ளது.

இந்தியன் சுப்பர் லீக் (ஐ. எஸ்.எல்) காற்பந்து போட்டியில் நேற்று முன்தினமிரவு புனேயில் நடந்த 44ஆவது லீக் ஆட்டத்தில் எப்.சி. புனே சிட்டி-அட்லெடிகோ டீ கொல்கத்தா அணிகள் எதிர் கொண்டன.

விறுவிறுப்பான இந்த மோதலில் 11ஆவது நிமிடத்தில் கொல்கத்தா அணி லூயிஸ் கார்சியா கோலை தூக்கி அடித்த பந்தை சக வீரர் ஜாகுப் பொடானி தலை யால் முட்டி கோலாக்கினார். 45ஆவது நிமிடத்தில் புனேயின் நட்ச த்திர வீரர் கேட்சோரனிஸ் பதில கோல் திருப்பினார். ஆனால் பிற்பாதியில் இரு அணி வீரர்களாலும் கோல் ஏதும் போட முடியவில்லை. இதனால் ஆட்டம் 1-1 என்ற கணக்கில் சமநிலையில் முடிந்தது. கொல்கத்தா அணி 17 புள்ளிகளுடன் 2ஆவது இடத்தில் நீடிக்கிறது. புனே 13 புள்ளிகளுடன் 7ஆவது இடத்தில் இருக்கிறது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மற்றொரு கிரிக்கெட் மரணம்




இஸ்ரேலில் கிரிக்கெட் மைதானத்தில் நடுவர் ஒருவர் மரணமடைந்தது குறித்து அந்நாட்டு விளையாட்டுத்துறை அமைச்சர் லிமர் லிவ்நட் விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார்.

அஷ்டாட் என்ற நகரில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில், ஹிலில் ஆஸ்கர் என்ற நடுவரின் கழுத்தில் பந்தடிபட்டபின் அவர் உயிரிழந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இஸ்ரேலின் தேசிய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரான ஆஸ்கர், மருத்துவ மனைக்கு உடனடியாக கொண்டுசெல்லப்பட்டும் மருத்துவர்களால் அவரின் உயிரைக் காப்பாற்ற முடியவில்லை.

கடந்த வாரம் பவுன்சர் பந்தில் அடிபட்ட உயிரிழந்த அவுஸ்திரேலிய வீரர் பிலிப் ஹியூஸ்க்கு அஞ்சலி செலுத்திய பின்னர் இந்த போட்டி ஆரம்பித்துள்ளது.

ஆட்டம் தொடங்கிய சில நிமிடங்களில் இந்த சம்பவம் நடந்ததாக உயிரிழந்த நடுவரின் மனைவி தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலில் கிரிக்கெட் பெரிய அளவு விளையாடப்படுவதில்லை.

இந்தியாவில் இருந்து குடியேறிய யூதர்கள் அதிகம் வசிக்கும் அஷ்டாட் நகரில் இந்த விளையாட்டு மிகவும் பிரபலமாக உள்ளது.

# நியூசிலாந்து அபார வெற்றி தொடர் சமநிலையானது

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆடுகளங்களில் பாகிஸ்தான் அணி ஈட்டி வந்த தொடர் வெற்றிகளுக்கு நியூசிலாந்து அணி முற்றுப்புள்ளி வைத்துள்ளது.

இரு அணிகளுக்கும் இடையிலான 3ஆவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில் இன்னிங்ஸ் மற்றும் 80 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றே நியூசிலாந்து அணி இவ்வாறு முற்றுப்புள்ளி வைத்தது.

பாகிஸ்தான் - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான 3வதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி சார்ஜாவில் கடந்த 26 ஆம் திகதி ஆரம்பமானது.

போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான், தமது முதல் இன்னிங்ஸில் ஹபீஸின் அபார (197) சதம் மூலம் 351 ஓட்டங்கள் குவித்தது.

பின்னர் தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த நியூசிலாந்து அணி மக்கலம் (202), வில்லியம்சன் (192) ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டத்தால் நேற்று முன்தினம் 3ஆவது நாள் ஆட்ட முடிவில் 8 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 637 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்நிலையில் நேற்று நான்காவது நாள் ஆட்டம் நடந்தது. தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 690 ஓட்டங்களை எடுத்தது.

339 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் தமது 2ஆவது இன்னிங்சை ஆரம்பித்த பாகிஸ்தான் அணி, நியூசிலாந்து பந்து வீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் 63.3 ஓவர்களில் 259 ஓட்டங்கள் எடுத்து அனைத்து விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது.

இதன்மூலம் நியூசிலாந்து இன்னிங்ஸ் மற்றும் 80 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இவ்வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் 1-1 என சமநிலையில் முடிவடைந்தது. (க)

# வடமராட்சி கிழக்கில் மட்டும் சுமார் 4 ஆயிரம் பேர் பாதிப்பு

(பருத்தித்துறை)

யாழ்ப்பாணத்தில் தற்போது பெய்துவரும் மழை காரணமாக பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வடமராட்சி வடக்கு பகுதியைச் சேர்ந்த ஆயிரத்து 118 குடும்பங்களைச் சேர்ந்த 3ஆயிரத்து790 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக பருத்தித்துறை பிரதேச செயலாளர் ரி.ஜெயசீலன் நேற்று ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தார்.

இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களை சேர்ந்த மக்களில் 255 குடும்பங்களை சேர்ந்த 938 பேரை செம்மின், பொலிகண்டி, உதயமலர், திருமால் ஆகிய பிரதேசங்களில் உருவாக்கப்பட்ட தற்காலிக நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தங்கவைக்கப்பட்ட மக்களுக்கு மூன்று நேரத்துக்கு உடனடி உணவுகளை வழங்கி வருகின்றோம்.

அத்துடன், மழையால் பாதிக்கப்பட்டும் தங்கள் வீடுகளில் வசித்து வரும் 266 குடும்பங்களை சேர்ந்த ஆயிரம் பேருக்கு 3 நாட்களுக்கு தேவையான உலர் உணவுகளை வழங்கி வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (எ-11)

## காற்றுடன்...

நிலவுவதாகவும் காற்றின் வேகம் மணிக்கு 30 - 40 கிலோமீற்றர் வேகத்தில் வீசலாம் எனவும் வானிலை அவதான நிலையம் தகவல் வெளியிட்டுள்ளது. வடக்கு தெற்கு வான்நிலைகளில நிலவி வரும் முகில்கூட்டங்களால் திடீரென காற்று வீசக்கூடிய சந்தர்ப்பம் நிலவுவதாகவும் காற்றின் வேகம் 70 கிலோமீற்றர் வேகத்துக்கு அதிகரிக்ககூடுமெனவும் தெரிவித்துள்ளது. இதன் காரணமாக மீனவர்கள் மற்றும் கடற்படையினர் அவதானமாக செயற்படுமாறு வேண்டப்படுகின்றனர்.

இதனிடையே, புத்தளம் முதல் கொழும்பு ஊடாக மாத்தறை வரையான கரையோர பகுதிகளில் மழை எதிர்பார்க்கப்படும் எனவும் அந்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

சீரற்ற வானிலை காரணமாக 15 ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர்முகாமைத்துவ நிலையம் தெரிவிக்கின்றது.

பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளும் ஏற்படுத்தி கொடுக்கப்படுவதாக நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி குறிப்பிடுகின்றார்.

மேலும் சீரற்ற வானிலை நிலவுகின்ற நிலையில மண்சரிவு ஏற்படும் அபாயம் உள்ளதால் மலையக மக்கள் அவதானத்துடன் செயற்படுமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மண்சரிவு அபாயம் காரணமாக பதுளை ஸ்பிரிங்வெளி புதுமலை தோட்டத்திலுள்ள 30 குடும்பங்களை சேர்ந்த மக்கள் பாதுகாப்பான இடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

தேசிய கட்டட ஆய்வு நிலையத்தின் பணிப்புரைக்கு அமைய இவர்கள் ஸ்பிரிங்வெளி கோட்டகொட தொழிற்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக ஹாலிஎல பிரதேச செயலாளர் டபிள்யூ.எம். ஆர்.ரஞ்சித் தெரிவிக்கின்றார்.

தொழிற்சாலையில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களுக்கு தேவையான உணவு உள்ளிட்ட வசதிகள் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். மேலும், ஸ்பிரிங்வெளி புதுமலை தோட்டத்தில் தொடர்ந்தும் மண்சரிவு அபாயம் நிலவுவதால் தோட்ட நிர்வாகத்தினரின் ஒத்துழைப்புடன் அங்குள்ள மக்களை வேறு பகுதிகளில் குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுவதாக ஹாலி -எல பிரதேச செயலாளர் சுட்டிக்காட்டினார்.

யாழ் குடாநாட்டில் பெய்யும் மழையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. மேலும் முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களிலும் மழையுடனான வானிலை நிலவுவதாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தில் நிலவும் மழையுடன் கூடிய வானிலையால் சில குளங்கள் பெருக்கெடுத்துள்ளன.

இதனால் மட்டக்களப்பு போரதீவுபற்று பிரதேச செயலகப் பிரிவின் வெல்லாவெளி மண்டூர் பகுதிகளின் போக்குவரத்து நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மூதூர் பிரதேச செயலாளர பிரிவுக்குட்பட்ட இறால்குழி கங்கைக் கரையோரத்தை அண்மித்து வாழும் 20க்கும் மேற்பட்ட குடும்பங்கள் கடலரிப்பு காரணமாக அச்சத்துடன் உள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தற்போது திருகோணமலை மாவட்டத்தில் பெய்து வரும் பலத்த மழையை அடுத்து கடலரிப்பு மேலும் அதிகரிக்கக்கூடும் என இப்பகுதி மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை அதிக மழை காரணமாக நீர்பாசன திணைக்களத்திற்குட்பட்ட 20 நீர்த்தேக்கங்களில் வான்கதவுகளை திறக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த நீர்த்தேக்கங்களில் 60 வீதம் வரை நீர்மட்டம் அதிகரித்துள்ளதாக நீர்பாசன திணைக்களத்தின் நீர் முகாமைத்துவ பிரிவின் பணிப்பாளர ஜானகி மீகஹதென்ன குறிப்பிட்டுள்ளார். (எ-11)

## 'பழிவாங்க...

ஆட்சி ஆகியவற்றுக்கு எதிராகவே எதிரணியின் பொது வேட்பாளராகத் தீர்மானித்தேன்.

தற்போதைய ஜனாதிபதி, மூன்றாவது முறையாகவும் ஜனாதிபதியாகத் தெரிவானால், நாட்டிலுள்ள அனைத்து அரசியல் கட்சிகளையும் இல்லாதொழிக்க தீர்மானம் செய்துள்ளார்

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, நான் உங்களை தனிப்பட்ட ரீதியில் எதிர்க்கவில்லை. உங்களது குடும்பத்துக்கு எதிராகவும் தனிப்பட்ட ரீதியில் கோபம் இல்லை. உங்களது ஊழல், மோசடிகள், அநியாயம், குடும்ப ஆட்சி மற்றும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை ஆகியவற்றையே நான் எதிர்க்கிறேன் என்றார். (எ-11)

## கட்சி தாவி...

அனைத்துப் பதவிகளில் இருந்தும் தான் கொள்கை ரீதியாக விலகிக் கொள்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான தன்னால் அங்கு மக்களின் தேவைகளை நிறைவேற்ற முடியவில்லை என்றும், தனக்கு போதிய நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படவில்லை என்றும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

நிறைவேற்று அதிகாரத்தை இல்லாது ஒழிப்பதற்காக பணியாற்றுவோருடன் தான் இணைந்து கொள்வதாகவும் அவர் அறிவித்துள்ளார். எதிர்க்கட்சித் தலைவரின் பணியகத்தில் மைத்திரிபால சிறிசேனவை இன்று சந்தித்த பின்னர் இவர் ஊடகவியலாளர் மாநாட்டில் பங்கேற்கவுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் தலைவர் காமினி திசநாயக்கவின் மகனான நவீன திசநாயக்க, அக்கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான கரு ஜெயசூரியவின் மருமகன் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)

## ஜனாதிபதி...

ஜனாதிபதித் தேர்தலில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவை உறுதிப்படுத்திக் கொள்ளும் நோக்குடன் அலரி மாளிகையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இச்சந்திப்பில் அமைச்சரும், முஸ்லிம் காங்கிரஸின் தலைவருமான ரவூப் ஹக்கீம் மற்றும் ஹசன் அலி ஆகியோரும், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அமைச்சர்களான பசில் ராஜபக்ஷ மற்றும் அனுர பிரியதர்சன யாப்பா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதன்போது, முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள், கிழக்கு மாகாணசபை மற்றும் ஏனைய அரசியல் விவகாரங்கள் தொடர்பில் பேசப்பட்டதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

அத்துடன், அரசாங்கத் தரப்புடன் தொடர்ந்து பேசவும் இச்சந்திப்பில் இணக்கம் காணப்பட்டுள்ளதாக முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (எ-11)

## ஒளி விழா

புங்குடுதீவு றோ.க.த.க பாடசாலையின் ஒளி விழா நிகழ்வு இன்று காலை 8.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் செல்வி ஜெ.முத்துக்குமாரு தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சாட்டி சித்தாத்திரை அன்னை ஆலய பரிபாலகர் அருட்தந்தை லம்பேட் அடிகளார் கலந்து கொள்கிறார்.

சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் தீவகக் கல்விப் பணிப்பாளர் இராதாகிருஷ்ணன், தீவக வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.ஸ்ரனிஸ்லாஸ், புங்குடுதீவு தூயசவேரியார் ஆலய பங்குத் தந்தை சி.லியோ ஆம்ஸ்ரோங் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். (எ-11)




நல்லூர் றோட்டரிக் கழகத்தின் 2014 ஆம் ஆண்டுக்கான செயற்திட்டத்தின் கீழ் அல்வாய் அம்பாள் வித்தியாலயத்துக்கு ஒலிபெருக்கி சாதனங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. இவற்றை நல்லூர் றோட்டரிக் கழகத்தின் தலைவர், பாடசாலை அதிபரிடம் கையளித்தார். அத்துடன் 3 ஆயிரத்து 220 றோட்டரி மாவட்டத்தின் அனுசரணையுடன் வழங்கப்பட்ட செவிப்புலன் இயந்திரத்தை பயனாளி ஒருவருக்கு நல்லூர் றோட்டரிக்கழகத் தலைவர் வழங்கினார் இவற்றைப் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது கோரப்பட்டுள்ள சகல அரச வேலைவாய்ப்பு மற்றும் போட்டிப் பரீட்சை விண்ணப்பங்களுக்கு...

கோலாசிற்றி 021 320 2787 தொழில் வங்கி

224/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (இலுப்பையடி சந்திக்கு அருகில்)

இனி நாம் இருக்கிறோம் நேரில் வரவும்


# பின்வாங்கி...

மூன்றாவது தடவையும் போட்டியிட்டால், மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக தான் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்வேன் என முன்னர் கூறியிருந்த அவர், தற்போது தனது முடிவில் இருந்து பின்வாங்கியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில், ஜனாதிபதித் தேர்தலில் மூன்றாவது தடவையும் மகிந்த ராஜபகஷ போட்டியிடுவது தொடர்பிலான உயர்நீதிமன்றத்தின் கருத்தை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

ஜனாதிபதித் தேர்தலில் மூன்றாவது தடவையும் மகிந்த ராஜபக்ஷவால் போட்டியிட முடியும் என்ற அதன் கருத்து சட்டவிரோதமானது. அதே நீதிமன்றத்திடம் முறையீடு செய்து பயனில்லை என்று உணர்கிறேன் என்று மேலும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, காங்கேசன்துறைக் கடற்படைத் தளத்தில் தான் தங்கியிருந்ததாக ஊடகங்களில் வெளியான செய்திகளையும் சரத் என் சில்வா நிராகரித்துள்ளார். (எ-11)

# கட்சி தாவினார்...

ராஜபக்ஷவுக்கு இவர் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு தனது இராஜினாமாக் கடிதத்தை அனுப்பியுள்ளார். அமைச்சர் பதவி மறறும் அரசாங்கத்தின்

23ஆம் பக்கம் பார்க்க....


## பரீட்சை வழிகாட்டற் பயிற்சிச் செயலமர்வு 2014

பாடம் : தமிழ் மொழியும் இலக்கியமும் 22 T - I, II, III

வளவாளர் : திரு.இல.நிஷாந்தன் (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி)

இடம் : றோயல் அக்கடமி (யாழ்ப்பாணம்)

காலம் : 01.12.2014 / 02.12.2014 மாலை 3.00 மணி

(8490)

கட்டணம் 400 உருபாய் மட்டுமே


# பிரபாவின் 200 கோடி...

ரூபாய் பெறுமதியான சொத்துகள் பிரபாகரனுக்குச் சொந்தமானவை என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என அரச தரப்பு தெரிவித்துள்ளது.

மேலும் கொழும்பிலுள்ள பிரபல வெளிநாட்டு வங்கியொன்றில் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் பெயரில் வைப்புச் செய்யப்பட்டிருந்த ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாயும், உள்நாட்டு வங்கி யொன்றில் வைப்புச் செய்யப்பட்டிருந்த 3 கோடியே 50 இலட்சம் ரூபாயும் ஏற்கெனவே அரசால் முடக்கப்பட்டு அந்தப் பணம் முழுவதும் திறைசேரிக்கு ஒப்படைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# மக்கள்...

முன்னதாக இந்தக் கூட்டத்தை நடத்துமிடத்தில் பிக்குமார்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட கூடாரத்தை நேற்று முன்தினம் மாலை பாதுகாப்பு படையினரை பயன்படுத்தி அரசாங்கம் கழற்றி வைத்திருந்தது.

நேற்று அதிகாலை முதல் பராக்கிரமபாகு குளத்தில் மேலதிக நீரை வெளியேற்றும் வான்கதவுகள் திறக்கப்படவுள்ளதாக பொலநறுவை பூராகவும் ஒரு வதந்தி பரப்பப்பட்டிருந்தது.

அவ்வாறு நீர் திறந்து விடப்பட்டால் மைத்திரிபாலவின் கூட்டத்துக்கு வருகை தரும் மக்கள் திடீர் வெள்ளத்தில் சிக்கிக் கொள்ள நேரிடும் என்றும் எச்சரிக்கை செய்யப்பட்டிருந்தது.

எனினும் இதையெல்லாம் மீறி பொது மக்கள் பெருமளவில் பொதுக்கூட்டத்தில் திரண்டுள்ளதுடன், கரு ஜயசூரிய உள்ளிட்ட எதிர்க் கட்சிகளின் முக்கிய தலைவர்களும் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். (எ-11)

# புலிகளுடனான...

களை கட்சிக்குள் கொண்டு வந்தது சிறிமாவோ பண்டாரநாயக்கதான்.

விடுதலைப் புலிகளுடனான போரின் போது நான் கோத்தபாய ராஜபக்ஷவைக் கொண்டு வந்தேன். போருக்காகவே அவர் கொண்டு வரப்பட்டார். போரின் போது படைத்துறைச் செயலாளர் பதவிக்கு நம்பிக்கைக்குரிய ஒருவரை நியமிக்க வேண்டிய தேவை இருந்தது. அந்த வகையில் அவர் தனது கடமையை நன்றாகவே செய்திருக்கிறார். நாம் மக்களின் மீது நம்பிக்கை வைத்துள்ளோம். அவர்கள் தமது தலைவர்கள் குறித்து நன்கு அறிவுடன் இருக்கிறார்கள்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து விலகிச்சென்ற பொதுச் செயலாளர்கள் மீண்டும் திரும்பி வந்திருக்கிறார்கள். அண்மையில் இடம்பெற்ற கட்சி தாவல்களுக்கும் சந்திரிகா குமாரதுங்கவே காரணம் என றும்அவர்மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

# 'பழிவாங்க மாட்டேன்'...

யில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலுக்கான முதலாவது பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே முன்னாள் அமைசசர் மைத்திரிபால சிறிசேன இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மூன்றாவது தடவையாகவும் ஆட்சிக்கு வருவாரானால் அவர் நிச்சயமாக ஒரு சர்வாதிகாரியே. இவ்வாறு தெரிவித்துள்ளார் பொது எதிரணிகளின் ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன. பொலநறுவையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை தனது முதலாவது தேர்தல் பிரசாரத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில், நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வைத்துக்கொண்டு அரசாங்கம் நாட்டுக்கு எதையும் செய்யவில்லை.

ஆனால் நான் ஆட்சிக்கு வந்தால் நிலைமை மாறும். அப்படி ஒரு வாய்ப்பை மக்கள் எனக்குத் தந்தால் விவசாயிகளுக்கு ஓய்வூதியத்திட்டத்தை முற்றுமுழுதாக நடைமுறைப்படுத்து[illegible]ன் அரச ஊழியாகளுக்கு வழங்கப்பட்டுள்ள மோட்டார் சைக்கிள்களுக்கான கடனை இரத்துச் செய்வேன்.

அரசாங்கத்திலிருந்து நான் விலகியதன் காரணமாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசார பொறிமுறை பாதிககப்பட்டுள்ளது.

தற்போது என்னை அரசாங்கம் புலி என்கிறது. ஆனால் விடுதலைப்புலிகள் என்னை கொலை செய்ய முயன்றனர். எனவே நான் நாட்டுக்காக உயிரை தியாகம் செய்ய தயாராகவுள்ளேன். பதவிக்கு வந்தால் எவரையும் பழிவாங்காமல் கௌரவமாக நடத்துவேன்.

மகிந்த ராஜபக்ஷவுக்கோ அல்லது அவரது தனிப்பட்ட குடும்பத்துக்கோ நான் ஒருபோதும் எதிரியல்ல ஊழல், மோசடி, அநியாயம் மற்றும் குடும்ப

23ஆம் பக்கம் பார்க்க....

# விலை போவோர்...

வருட பூர்த்தியை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட நிகழவொன்று மாத்தறையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர் கூறியதாவது,

முதுகெலும்பு அற்ற சிலரை தலைவர்களாக்கும் தேவை, சில வெளிநாட்டுச் சக்திகளுக்கு ஏற்பட்டுள்ளது. அவர்கள் அடிக்கும் தாளத்துக்கேற்ப ஆடுபவர்களை நியமக்க வேண்டும் என்பதே அந்த சக்திகளின் நோக்கமாகும்.

இருப்பினும், எமது மக்கள் அவ்வாறானவர்களுக்கு இடமளிப்பதில்லை. யார் வந்தாலும், என்னை தோற்கடிக்க முடியாது. ஒருசிலர் என்னை, போர்க்குற்ற நீதிமனறத்துக்கு அனுப்ப முயற்சிக்கின்றனர்.

பேய்க்கு பயந்தவர்கள், மயானத்தில் வீடு அமைக்கக கூடாது என அவர்களுக்கு நான் சொல்ல விரும்புகின்றேன் என ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (எ-11)

# ஜனாதிபதிக்கு மோடி...

கட்சிகள் இதைக் கணடித்து அறிக்கை விடுத்திருக்கிறார்கள்.

ராஜபக்ஷ எப்படிப்பட்ட இனப்படுகொலைக் குற்றவாளி என்பதை ஐ.நா. சபை வரை விவாதம் நடந்து கொண்டிருக்கிறது.

அவரே திரும்பப் பதவிக்கு வர வேண்டுமென்பது, அரசு அலுவலகங்களில் குற்றவாளியின் படத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதைப் போலவும், ராஜபக்ஷ புரிந்த போர்க் குற்றங்களையும், மனித உரிமை மீறல்களையும் ஆதரிப்பது போலவும்தான் இருக்கும். இவ்வாறு கலைஞர் கூறியுள்ளார். (எ-11)


## பதவி வெற்றிடங்கள்



நீங்கள் தொழில் தேடுபவரா? O/L படித்தவர்களா?

புதிய கிளைகள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் ஆரம்பமாக இருப்பதால் 05 வகையான பதவி வெற்றிடங்கள் உள்ளன.

- தகைமை O/L & A/L
- தங்குமிட வசதிகள் உண்டு
- அனுபவம் அவசியமற்றது
- வயதெல்லை 18 - 28

தொடர்பு: 0777981471, 0773550933

(7887)

Digital விஷேட கட்டண சலுகைகள்

## இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை



- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுபப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

WESTERN UNION MONEY TRANSFER

மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்

62/16 ஸ்ரான்லி வீதி (சம்பத்வங்கி முன்பாக) யாழ்ப்பாணம்

தொடர்புகளுக்கு - 0212224040 / 0772931062

(C-9219)

## வெளிநாடுகளிற்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

வடமாகாணத்தின் பொதிகள் சேவை துறையின் முன்னோடிகள்

உங்கள் பெறுமதி மிக்க பொதிகளுக்கும் பணத்திற்கும் 100% உத்தரவாதம் எம்மிடம் மட்டுமே

அருள்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

இல.10, கஸ்தூரியார் வீதி, (புதிய மாநகரசபை கட்டடத்தொகுதி) யாழ்ப்பாணம். 021 222 3536

(C-9127)



- இலட்சக்கணக்கான வாடிக்கையாளர்களைக் கொண்டு
- ஆகாய, கடல் மார்க்கமாக
- அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மையுடன்
- மறைமுக கட்டணம் ஏதுவுமின்றி
- முக்கிய ஆவணங்கள், மிளகாய்த்தூள், கருவாடு, எண்ணெய் வகைகள், அனுமதிக்கப்பட்ட மருந்துப்பொருட்கள், உடுபுடவைகள், பால்மா வகைகள் என அனைத்துப்பாவனைப் பொருட்களையும்,
- 3-4 நாட்களில் உலகின் எப்பாகத்திற்கும் குறித்த முகவரியில் ஒப்படைக்கின்றோம்.

வெளிநாடுகளிற்கான பொதிகள் சேவையை வழங்கிக்கொண்டிருக்கும் முன்னணி நிறுவனம்

SEC SECURITIES AND EXCHANGE COMMISSION OF SRI LANKA

CSE COLOMBO STOCK EXCHANGE

## முதலீட்டாளர் மன்றம் - யாழ்ப்பாணம்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு & கொழும்பு பங்குப்பரிவர்த்தனை

டிசம்பர் 6ம் திகதி, 2014, றில்கோ சிற்றி ஹோட்டல், யாழ்ப்பாணம்.

147-2/3, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். 0777822014 / 0212221455

முன்பதிவுகளுக்கு கொழும்பு பங்குப்பரிவர்த்தனை - யாழ்கிளை

(C-9229)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.12.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.